தமிழக மக்களின்
விடியலுக்கு வழி...

# தமிழ்நிலம்

**இதழ் : 15**



**உள்ளே...**

குடியுரிமைப் போராட்டங்களும் விளைவுகளும்

•

சமசுக்கிருத அதிகாரமும் தமிழ் - அடிமை நிலையும்

•

காஷ்மீர் மதவெறி ஆள்கிறது மனிதம் வீழ்கிறது

•

ஆய்வறிஞர் வீ.அரசு அவர்களுடன் நேர்காணல்...

•

பொதுமையியக் (கம்யூனிஸ்ட்) கட்சி அறிக்கை - நடைமுறைச் சூழலின் பொருத்தப்பாடு...

•



தொடர்புக்கு...
**தமிழ் நிலம்**
1, வடக்குபட்டுச் சாலை,
மேடவாக்கம் கூட்டுச்சாலை,
மேடவாக்கம், சென்னை 600 100
பேசி : 8608068002, 9443307681,
9677481149


## கொரானா, சமசுக்கிருதக் கொல்லிகளை...

# தமிழக அறிவு, செயலாளுமை வலிமையோடு எதிர்கொள்வோம்!

**கொ**ரானா உயிர்க்கொல்லி குறித்துப் பெரிய அளவில் அச்சத்தை உருவாக்குகின்றன அரசுகள்...

பெரியம்மை, பிளேக், மலேரியா, எய்ட்சு, டெங்கு, பன்றிக்காய்ச்சல் - என்றெல்லாம் அச்சத்தை உருவாக்குவதும், பின்னர் மருந்து கண்டறிந்ததாகக் கூறி அதை உச்ச விலைக்கு விற்றுக் கொள்ளையடிப்பதுமே முதலாளியத்தின் வாடிக்கை வழக்கமாகியிருக்கிறது...

மருத்துவமும், கல்வியும் இலவயமாக இல்லாமல் வணிகமாக்கப்பட்ட பின்னர் நோய்க்கான அச்சத்தைக் காசாக்குவதில் முதலாளிகளும் அரசும் இத்தகைய நடைமுறைகளை மேற்கொண்டுவருகின்றன...

உலக வல்லரசுகளின் அச்சுறுத்தலுக்குச் செவிசாய்க்காமல் கியூபா தன்னை முழுமையாகத் தற்காத்துக் கொண்டிருப்பதற்கும், பிற நாடுகளுக்கு உதவுவதற்கும் மருத்துவமும் கல்வியும் அங்கு முழுக்க முழுக்க அரசே பொறுப்பெடுத்துக்கொண்ட நிலையில் இலவயமாக இருப்பதே காரணம்...

இத்தாலியில் அதிகம்பேர் பாதிக்கப்பட்டதற்கு அந்நாட்டு மருத்துவம் முழுக்க முழுக்கத் தனியாரிடம் இருப்பதே அடிப்படைக் காரணம். மிகுதிப்படியாகச் செலவு செய்து மருத்துவம் பார்த்துக்கொள்வது எளிய மக்களுக்கு இயலாத செயலாகிவிடுகிறது.

தமிழகத்தையும், பிற மொழித்தேசங்களையும் அடக்கி வைத்திருக்கிற இந்திய அரசு, வெளிநாட்டுப் பண முதலைகளோடு கூட்டுச் சேர்வதும், அவர்களை இங்கு அழைத்துவந்து தொழில்நடத்திட வழி அமைத்துத் தருவதும், அவர்கள் கொள்ளை அடித்துச்செல்ல இசைவதுமே நடக்கிறது. சில காலத்திற்கு முன்பு அமெரிக்க அதிபர் டிரம்பை அழைத்துவந்து 17000-கோடி உருவாக்கள் கொடுத்துப் போர்க்கருவிகளை வாங்கியது இந்திய மோடி அரசு.

மக்கள் இலவயமாகக் கல்வி கற்க முடியவில்லை, மருத்துவம் பார்த்துக்கொள்ள முடியவில்லை. ஆனால் 17000-கோடிக்குப் போர்க் கருவிகள் தேவையா? தமிழ்நாட்டு நிலத்தடிநீரை அக்குவாபீனா, கின்லே என அமெரிக்க நிறுவனங்கள் உறிஞ்சி விற்றுக் கொள்ளை அடிக்க வழி அமைத்துத் தருவதுதான் நாட்டுப் பற்றா? இந்நிலையில் நமக்கான மருத்துவத்தை நாம் பாதுகாத்துக்கொள்ளக்கூட முடியவில்லை.

தமிழ் சித்த மருத்துவமும், பிற மரபுசார் மருத்துவங்களும் நோய்நீக்கும் திறன் கொண்டிருந்தாலும், அவற்றை அரசு அடையாளப்படுத்தி, வளப்படுத்தி இலவயமாகக் கிடைக்கும்படி மக்களுக்கு நம்பிக்கையூட்டுவது இல்லை...

முறையான மரபுசார் உணவு முறைகளையும், வாழ்க்கை முறைகளையும் பின்பற்றி வருவதோடு, ஆங்கில முதலாளிய மருந்துகளைப் பயன்படுத்தாமல் இருந்தாலே பெருமளவிலான நோய்களை எளிதாக எதிர்கொண்டிட இயலும்...

இதே நிலைதான், சமசுக்கிருதம் எனும் மொழி, இனக் கொல்லியாகச் செயல்படுகிற அதிகார நடைமுறையிலும் உள்ளது...

தாய்மொழி தமிழில் படிக்க முடியவில்லை; சமசுக்கிருதத்திற்குப் பல ஆயிரம் கோடி உருவாக்களை இந்திய அரசு ஒதுக்குகிறது. சென்னை உயர் நயனக(நீதி) மன்றத்தில் தமிழில் வழக்காடமுடியவில்லை. கோயில்களில் தமிழ்வழிபாட்டை மறுக்கிறது. தமிழை இழிவு மொழி என்கிறது. மீண்டும் நமஸ்காரம், ஸ்ரீ-என்று எழுதவும் பேசவும் பழக்குகின்றது பார்ப்பனியம்.

இந்நிலையில் தமிழைக் கொண்டு கல்வியில், அரசு அலுவல்களில், வழிபாடுகளில், நயன்மை(நீதி)த் துறைகளில் - என எல்லாவற்றிலும் நடைமுறைப்படுத்துகிற, தமிழ்நாட்டைத் தற்காத்துக் கொள்ளுகிற, திறன்வாய்ந்த தமிழக அரசை உருவாக்கும் நோக்கத்தோடேயே சமசுக்கிருத நச்சு கொல்லி அதிகாரங்களை வீழ்த்த முடியும்...

இந்நிலையில் தமிழ்க் குமுகத்தை அவ்வகையில் நெறிப் படுத்துகிற நடைமுறையை உருவாக்குவதோடு, அத்தகைய பொறுப்புள்ள தமிழக அரசை உருவாக்கும் நோக்கத்தோடு உயிர்க் கொல்லிகளை எதிர்கொள்வோம்... வாருங்கள்...

# குடியுரிமைப் போராட்டங்களும்... விளைவுகளும்...

• **கண. குறிஞ்சி**

**பா***ரதீய சனதாக் கட்சி 2014ஆம் ஆண்டில் முதன்முதலாக இந்தியாவின் தலைமை அமைச்சராக நரேந்திர மோடி பொறுப்பு ஏற்றுக் கொண்ட பொழுது, "இந்திய நாடாளுமன்றமே எனது கோயில். அரசியல் சட்டமே எனது கீதை" எனப் பசப்பினார். தவிரவும், நாடாளுமன்றத்தின் படிக்கட்டுகளைத் தொட்டுவணங்கித், தலைமை அமைச்சராகப் பொறுப்பு ஏற்றுக் கொண்டார். ஆனால் 2014 முதல் 2019 வரையிலான காலக்கட்டத்தில் நாடாளுமன்றத்தை ஒருசிறிதும் பொருட்படுத்தாமல், மிக மிகக் குறைவான நாட்களே நாடாளுமன்றத் திற்கு வந்திருந்தார் அவர்.*

*அதேபோல், 2019ஆம் ஆண்டு இரண்டாம் முறையாகப் பாரதீய சனதாக் கட்சி ஆட்சியைப் பிடித்தபொழுது, அரசியல் சட்டப் புத்தகத்தைத் தொட்டு வணங்கி, நாடகமாடி மீண்டும் பொறுப்பு ஏற்றுக் கொண்டார் மோடி. ஆனால் அரசியல் சட்டத்தின் அடிப்படையைத் தகர்க்கும் பணியை அருமையாக இப்பொழுது தொடங்கி விட்டார்.*

**குடியுரிமைச் சட்டத் திருத்தத்தின் பின்னணி**

*அரசியல் சட்டத்தின் அடிப்படையைத் தகர்க்கும் பணியின் ஓர் எளிய வெளிப்பாடுதான் குடியுரிமைத் திருத்தச் சட்டம் - தேசிய மக்கள் தொகைக் குறிப்பேடு மற்றும் தேசியக் குடிமக்கள் பதிவேடு ஆகியவை. இவற்றை இந்தியத் துணைக்கண்டத்தின்மீது அவர் திணிக்கும் இன்றைய காலக்கட்டம் என்பது, பண மதிப்பு வீழ்ச்சியும், விலையுயர்வும், வேலை இல்லாத் திண்டாட்டமும், பணப்பரிமாற்ற மின்மையும், கூலி வெட்டும், தொழில் முடக்கமும் வரலாறு காணாத அளவு வீழ்ச்சி அடைந்துள்ள நெருக்கடியான தருணமாகும்.*

*கடந்த 45 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வேலைவாய்ப்பின்மை வளர்ந்திருப்பதைத் தேசிய மாதிரிப் புள்ளி விவர ஆய்வு நிறுவனம் -*

வெளியிட்ட அறிக்கையே அம்பலப்படுத்துகிறது. தவிரவும், 2019-ல் இரண்டாம் முறையாகப் பதவியேற்ற ஒருசில மாதங்களில் பெருநிறுவன (கார்ப்பரேட் ) முதலாளிகளுக்கு இரண்டரை இலட்சம் கோடி உரூவாவுக்கும் மேலான வரித் தள்ளுபடிகளை, சலுகைகளை வாரி வழங்கியுள்ளார் மோடி. தவிரவும், இரண்டு இலட்சம் கோடி உரூவா பெறுமானமுள்ள பொதுத்துறை நிறுவனப் பங்குகளைத் தனியாருக்கு விற்கும் முடிவும் அறிவிக்கப்பட்டுள்ளது. மோடியின் தலைமைப் பொருளாதார ஆலோசகராக .இருந்த அரவிந்து சுப்பிரமணியம் "நாட்டின் பொருளாதாரம், கவலைக்கிடமான நிலையில் ( ஐ.சி.யூ.) தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளது" என எச்சரிக்கை விடுக்கிறார். உலகெங்குமுள்ள பொருளாதார வல்லுநர்கள் இந்தியத் துணைக் கண்டத்தின் எதிர்காலம் குறித்த கவலையை வெளிப்படையாகத் தெரிவித்தவண்ணம் உள்ளனர்.

இத்தகைய பொருளாதாரத் தோல்விகளை மறைக்கவும், கடந்த 2014 பொதுத்தேர்தலில் அள்ளிவிட்ட வானளாவிய வாக்குறுதிகளை நிறைவேற்றாதது குறித்து மக்கள் கேள்வி கேட்காமல் இருக்கவும், எப்பொழுது பார்த்தாலும் சுற்றுலா சென்று கொண்டிருப்பதால் மக்களிடம் மேலோங்கி நிற்கும் மோடியின் மீதான கடுஞ்சினத்தைத் திசைதிருப்பவும்தான் குடியுரிமைச் சட்டங்களை ஏவிவிட்டுள்ளது இந்துத்துவ அரசு.

காசுமீரைத் துண்டாடிய நிகழ்வு ஆகட்டும், குடியுரிமைத் திருத்தச் சட்டமாகட்டும் எல்லாம் உரிய விவாதமின்றிச் சில மணி நேரத்திலேயே அவசர அவசரமாக நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவையில் நிறைவேற்றப் பட்டதைக் காண்கிறோம்.

**சட்ட நிறைவேற்றத்தில் ஏன் இந்த அவசரம்? வேகம்?**

இந்தக் குடியுரிமைச் சட்டம், இந்திய அரசியல் சட்டம் 14ஆம் பிரிவுக்கு எதிரானது. மதத்தின் அடிப்படையில் இது மக்களைப் பிரிக்கிறது. ஆனால், இந்துத்துவ சங்கிகள் இதற்கு விடை சொல்லாமல், "இந்திய முசுலீம்களுக்கு / மக்களுக்கு இதனால் எவ்விதப் பாதிப்பும் இல்லை" என விவாதத்தின் போக்கைத் திசை திருப்புகின்றனர். மேலும் தேசிய மக்கள் தொகைப் பதிவேடு மற்றும் தேசியக் குடிமக்கள் பதிவேடு ஆகியவற்றுடன் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை இணைத்துக் காண வேண்டும் என்பதைத் திட்டமிட்டு மறைக்கின்றனர்.

ஆனால், இந்தத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் கடும் போராட்டங்கள் ஆர்ப்பரித்து எழுந்துள்ளன. ஏனெனில் குடியுரிமை என்பதுதான் எல்லா

உரிமைகளுக்கும் அடிப்படையானது. குடியுரிமை இல்லாவிட்டால் நீங்கள் அரசைக் கேள்வி கேட்க முடியாது. அதனால்தான் 1933ஆம் ஆண்டு இட்லர் ஜெர்மனியில் ஆட்சிக்கு வந்தவுடன் எடுத்த எடுப்பிலேயே ஒன்றரை இலட்சம் யூதர்களின் குடியுரிமையை நீக்கினான் என்பதை வரலாறு சுட்டுகிறது.

**உலகளாவிய எதிர்ப்பு அலைகள்**

இந்துத்துவ அரசின் சனநாயகத்திற்கு எதிரான இச் சட்டத்திருத்தத்தை எதிர்த்து 1000 அறிஞர்கள் மோடிக்குக் கடிதம் எழுதினர். ரோமிலா தாபர், அருந்ததி ராய், இராமச்சந்திர குகா போன்ற எண்ணற்ற ஆளுமைகள் இச்சட்டத்திற்கு எதிராகக் கண்டனக் குரல் எழுப்பினர். இந்திய ஆட்சிப் பணியில் இருந்த சசிகாந்த் செந்தில் போன்றோரும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மகராட்டிரக் காவல் துறைத் தலைவர் தனது பதவியையே தூக்கி எறிந்தார். சாகித்ய அகாதமி விருதை எழுத்தாளர் ஒருவரும், அரசின் பத்ம விருதை அறிஞர் ஒருவரும் திருப்பித் தந்தனர். இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் ஷாகின் பாக் - எதிர்ப்புப் போராட்டங்கள் அலைஅலையாகப் பெண்களால் முன்னெடுக்கப் படுகின்றன. தமிழகத்தில் மட்டும் 50-க்கும் மேற்பட்ட இடங்களில் இசுலாமிய மகளிர் ஷாகின் பாக் - போராட்டங்களைத் தெருவில் இறங்கி சமரசத்திற்கு இடங்கொடுக்காமல் தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் மோடியின் இந்தச் சட்ட முயற்சிகளுக்கு எதிர்ப்பு வலுத்து வருகிறது. நோபல் பரிசு வென்ற அறிஞர்களான வெங்கட்ராமன் இராமகிருட்டிணன், அமர்த்தியா சென் மற்றும் அபிசித் பானர்ஜி ஆகியோரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர். ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றம், பிரித்தானிய நாடாளுமன்றம் ஆகியனவும் மோடி அரசுக்கு எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. சப்பான் தலைமை அமைச்சரும், வங்கதேச வெளியுறவுத்துறை அமைச்சரும் தங்களின் இந்தியப் பயணத்தை இதன் காரணமாகவே தவிர்த்து விட்டனர். மலேசியா, ஈரான் நாட்டு அமைச்சர்களும் பாரதீய சனதா அரசைக் கண்டித்து உள்ளனர்.

தவிரவும், வெளிநாட்டு இதழ்கள் (The Economist, NewYork Times, Washington Post, The Guardian) இந்திய அரசின் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. நியூயார்க், வாசிங்டன், சிக்காக்கோ, சான்பிரான்சிஸ்கோ, அட்லாண்டா, பிலடெல்பியா, இலண்டன், கனடா போன்று உலகின்

பல்வேறு பகுதிகளில் மோடியின் குடியுரிமைச் சட்டங்களுக்கு எதிரான போராட்டங்கள் தீவிரமடைந்தன.

**மாணவர்கள் போராட்டம்**

அதே சமயம் மாணவர்கள் குடியுரிமைச் சட்டங்களுக்கு எதிராகத் தீவிரமான போராட்டங்களை முன்னெடுத்தனர். ஜாமியா மிலியா - பல்கலைக் கழகம், ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகம், அலிகார் முசுலீம் பல்கலைக் கழகம் போன்ற உயர் கல்வி நிறுவனங்கள் போராட்ட மையங்கள் ஆகின.

இத்தகைய போராட்டங்களைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் சனாதன சங்கிகள் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டனர். போராடும் மாணவர்களை இராமபக்தன் கோபால் எனும் சங்கி காவல்துறையினர் முன்னிலையிலேயே துப்பாக்கியைக் காட்டி மிரட்டினான். சங்கீத் சோம் எனும் பாரதீய சனதாக் கட்சி சட்டமன்ற உறுப்பினர், " இவர்களை இப்படித்தான் சுட்டுக் கொல்ல வேண்டும்" என இந்துத்துவ நஞ்சைக் கொட்டிக் கொக்கரித்தான்.

ஜாமியா மிலியா பல்கலைக்கழகத்திற்குள் அத்துமீறி நுழைந்த காவல்துறை, நூலகத்தில் படித்துக் கொண்டிருந்த மாணவர்களையும், வளாகத்தில் இருந்த மாணவிகளையும் கண்மூடித்தனமாகத் தாக்கிய தோடு, கழிவறைக்குள்ளும் புகுந்து வன்முறை வெறியாட்டம் ஆடினர்.

இத்தகைய வன்முறைக்குக் காரணமானவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதே போலத்தான் சவகர்லால் நேரு பல்கலைக் கழக மாணவர்கள், தங்களின் கோரிக்கைகளுக்காகப் போராடிய தருணத்தில், அப் பல்கலைக்கழக வளாகத்திற்குள் அத்துமீறி நுழைந்து இரும்புக் கம்பிகளாலும், தடிகளாலும் மாணவர்களையும் பேராசிரியர்களையும் அடித்து நொறுக்கியவர்கள் இந்துத்துவ வெறியர்கள்தான். "நாங்கள்தான் மாணவர்களைத் தாக்கியவர்கள்" எனப் பொறுப்பு ஏற்றுக் கொண்ட பின்னும், “இந்து ராக்சா தள்” எனும் அமைப்பின் மீதும் பெரிதாக நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை.

**புதுதில்லிப் படுகொலைகள்**

இந்துத்துவ ஆதரவாளர்கள் எவ்வளவு கொடிய வன்முறையை ஏவினாலும் அவர்கள்மீது எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கப் படாது எனும் எழுதப்படாத சட்டம் 2014முதல் இந்தியாவில் நடைமுறையில் இருப்பதால், வன்முறை வானளாவ வளர்ந்து

கொண்டே இருக்கிறது. அதன் வெளிப்பாடுதான் வடகிழக்கு தில்லியில் பிப்ரவரி 23முதல் மூன்று நாள்கள் நடைபெற்ற வன்முறைகள்.

இத்தகைய வன்முறைகளுக்குக் காரணமானவர்கள், பாரதீய சனதாக் கட்சியின் பொறுப்பாளர்கள்தாம். "துரோகிகளைச் சுட்டுக் கொல்ல வேண்டும்" என மைய அரசின் நிதித்துறை இணை அமைச்சர்அனுராக் தாக்குரும், "இந்துக்களின் வீடு புகுந்து நமது மகளை, சகோதரிகளை இசுலாமியர்களை? பாலியல் வன்முறை செய்வார்கள்" என பா.ச.க. நாடாளுமன்ற உறுப்பினர் பர்வேஷ் வர்மாவும், "எமது அரசு, ஆர்ப்பாட்டக்காரர்களை நாயைப் போல சுட்டுக் கொல்லும்" என மேற்கு வங்க பா.ச.க. தலைவர் திலிப் கோஷ் போன்றோரது வன்முறைப் பேச்சுகள் தாக்குதலுக்குத் தூபம் போட்டன..

"இந்தியாவுக்கு வந்துள்ள அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியாவை விட்டுத் திரும்பிப் போவதற்குள், குடியுரிமைச் சட்டத்திற்கு எதிரான போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட வேண்டும். இல்லையேல் நாங்களே போராட்டக்காரர்களை அப்புறப் படுத்துவோம்" எனக் காவல்துறை அதிகாரிகளின் முன்னிலையிலேயே பா.ச.க.வின் பொறுப்பாளர் “கபில் மிஸ்ரா” கொக்கரித்தான். அவன் சொன்ன படியே அடுத்த நாள் வடகிழக்குத் தில்லியில் அப்பாவி முசுலீம்கள் ஓட ஓட விரட்டிப் படுகொலை செய்யப்பட்டனர். கடைகள், வீடுகள் தீ வைத்துக் கொளுத்தப்பட்டன. பெண்கள், குழந்தைகள், முதியோர் ஆகிய அனைவருக்கும் வேறுபாடு இல்லாமல் அடி உதை, கத்திக்குத்து, துப்பாக்கிச்சூடு. சுமார் 60பேர் வரை பதறப்பதறப் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இது அரசு கொடுக்கும் கணக்கு . ஆனால் உயிரிழப்புப் பன்மடங்கு இருக்கும் எனச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. 15-க்கும் மேற்பட்ட இசுலாமியர்களின் வழிபாட்டுத் தலங்கள் தகர்த்தெறியப்பட்டன. பல ஆயிரம் கோடி உரூவா அளவுக்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டு உள்ளது.

வன்முறையைக் காவல்துறை கட்டுப்படுத்தவில்லை என்பது மட்டு மல்ல, அவர்களே முன்நின்று கலகக்காரர்களோடு சேர்ந்து தாக்குதல் தொடுத்தனர். அப் பகுதியிலிருந்த கண்காணிப்புக் கருவிகளையும் காவலர்களே அடித்து நொறுக்கினர். எங்கு பார்த்தாலும் "சுட்டுக் கொல்லுங்கள்" (கோலி மாரோ) என்ற வெறி கூச்சல் எதிரொலித்தது.

பாதுகாப்பு வேண்டி ஏறக்குறைய 10,000-க்கும் மேற்பட்ட அழைப்புகள் காவல் நிலையங்களுக்கு வந்துள்ளன. தொடர் தாக்குதலால் குற்றுயிரும் குலைஉயிருமாக வீதியில் கிடக்கும்

இளைஞர்களைக் காவல்துறையினரே குண்டாந்தடி கொண்டு தாக்கும் காட்சியும், அவர்களை "ஜெய்சிரீராம்" முழக்கம் போடச் சொல்லி உதைக்கும் காட்சியும் காணொளிகளாக வெளிவந்துள்ளன. இப்படித் தாக்கப்பட்ட இளைஞர்கள் மருத்துவமனையில் பரிதாபமாக இறந்த செய்திகளும் இப்பொழுது வந்துள்ளன.

கள்ளத்துப்பாக்கிகள் மூலம் அப்பாவி மக்கள் வகைதொகையின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். "குண்டடிபட்டுச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வரும் முசுலீம்களுக்குச் சிகிச்சை அளிக்கக் கூடாது" என மேலிடத்திலிருந்து உத்தரவு வந்திருப்பதாக அரசு மருத்துவர்கள் தெரிவித்த செய்தி, ஊடகங்களில் வந்துள்ளது.

**குசராத் சூத்திரம்**

இவ்வாறு நடைபெற்ற கொடுமைகள் கலவரத்தால் நடைபெற்றவை அல்ல. ஏனெனில் கலவரத்திற்குத் தருக்கம் ஏதும் இருக்காது. கலவரம் என்றால் அது எல்லாவற்றையும் நாசமாக்கும். ஆனால் இங்கே கொள்ளையடிக்கப்பட்ட, தீக்கிரை ஆக்கப்பட்ட வீடுகள், சொத்துகள் அனைத்தும் இசுலாமியர்களுடையது எனச் செய்திகள் (The Indian Express) தெரிவிக்கின்றன. எனவே இது கலவரம் அல்ல. முசுலீம்களின் சொத்துக்கள் எங்கெங்கே உள்ளன என முன்பே கணக்கெடுத்துத் திட்டமிட்டு நடைபெற்ற நயவஞ்சகத் தாக்குதலாகும்.

2002 குசராத் படுகொலையின் பொழுதும், இந்து முன்னணியின் கோவைச் செய்தித் தொடர்பாளர் சசிகுமாரின் சவஊர்வத்திலும் இப்படித்தான் இசுலாமியர்களின் கடைகளும், வீடுகளும் மட்டும் அழித்தொழிக்கப்பட்டன. இதைச் சங்கிகள் "குசராத் சூத்திரம்"

(Gujarat Formula) எனப் பெருமையாகச் சொல்கின்றனர். ஒவ்வொரு கலவரத்திலும் (?) இப்படித்தான் முன்கூட்டியே கணக்கெடுத்து, திட்டமிட்டு, பிறகு தாக்குதலை மேற்கொள்கின்றனர்.

புதுதில்லிக் கலவரத்தின் பொழுது, "போராட்டக்காரர்களைக் கைது செய்து சிறையில் அடைக்கும் நடைமுறை மலையேறிவிட்டது. அவர்களை உடனுக்குடன் "மேலே" அனுப்பும் பணி வெற்றிகரமாகத் தொடங்கிவிட்டது" என்று கொக்கரிக்கிறான் பாரதீய சனதாக் கட்சியின் கர்நாடக சட்டமன்ற உறுப்பினர் பசனகவுடா.

புதுதில்லியில் 180 காவல் நிலையங்கள் உள்ளன. குறிப்பாகக் கலவரம் நடந்த வடகிழக்குத் தில்லியில் மட்டும் 20 காவல் நிலையங்கள் உள்ளன. இவற்றில் ஏறக்குறைய 1000 காவலர்கள் இருக்கின்றனர். இருப்பினும்,

மூன்று நாள்கள் வட கிழக்குத் தில்லி முழுவதும் இந்துத்துவ வெறியர் களின் கட்டுப்பாட்டில்தான் இருந்துள்ளது. இந்தியத் துணைக் கண்டத்தின் தலைநகராகிய தில்லியிலேயே அமித்ஷாவின் பொறுப்பிலிருக்கும் காவல்துறையின் இலட்சணம் இவ்வாறுதான் இருக்கிறது என்ற குற்றச்சாட்டுப் பரவலாக எழுந்து உள்ளது.

### வெறுப்புப் பேச்சு

பாரதீய சனதாக் கட்சி பொறுப்பேற்ற 2014ஆம் ஆண்டிலிருந்து வெறுப்புப் பேச்சும், கும்பல் கொலையும் வளர்ந்தபடியே உள்ளன. எனவே வெறுப்புப் பேச்சுக் குறித்து **பேஸ்பரூவா குழு அறிக்கை** மற்றும் **டி.கே. விசுவநாதன் குழு அறிக்கை** ஆகியவற்றின் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்த வேண்டும் எனும் கோரிக்கை வலுப்பெற்று உள்ளது.

"இந்தியாவில் பட்டியலின மக்களுக்கு எதிரான வெறுப்புப் பேச்சுகளைத் தடுப்பதற்காக, வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தில் சில பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளதுபோல, அனைத்து மக்களுக்கும் எதிரான வெறுப்புப் பேச்சுகள் தடுக்கப்பட வேண்டும்" என உச்ச நீதிமன்றம் ஏற்கெனவே பரிந்துரைத்துள்ளது. இதற்கேற்ப வெறுப்புப் பேச்சினைத் தடுக்கும் வகையில் குற்றவியல் நடைமுறைத் திருத்தச் சட்ட வரைவை நிறைவேற்ற வேண்டும் என்ற கோரிக்கையும் எழுந்துள்ளது.

153சி மற்றும் 505ஏ ஆகிய இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளை வலுப்படுத்த வேண்டும் என ஒன்றிய அரசு, சட்ட ஆணையத்தை வேண்டியது. அரசியல் சட்டம் 19 (2) பிரிவின் அடிப்படையில், பொது அமைதி, குற்ற நடவடிக்கைகளைத் தூண்டும் குற்றம், மாநிலத்தின் . பாதுகாப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, வெறுப்புப் பேச்சினைத் தடை செய்யலாம் என இந்தியச் சட்ட ஆணையமும் பரிந்துரைத் துள்ளது. உச்ச நீதிமன்ற மேனாள் நீதிபதி பி.எஸ். சஹான் அவர்களும் இதற்கு ஏற்பிசைவு வழங்கியுள்ளார்.

மதம், இனம், சாதி, மொழி, சமூகம், பாலினம், பிறப்பிடம், வாழிடம் போன்றவற்றின் அடிப்படையில், பேச்சு / எழுத்து / குறியீடு ஆகியவற்றின் மூலம் அச்சுறுத்துவது சட்டப்படி தண்டனைக்கு உரியது என்றும் சட்ட ஆணையம் 2017ஆம் ஆண்டில் சுட்டிக் காட்டியுள்ளது.

"உயர் பதவிகளில் இருப்பவர்களின் வெறுப்புப் பேச்சு, கீழ் மட்டத்தினுள்ளவர்களைக் குற்றச் செயலுக்குத் தூண்டக் கூடியது" எனக் குற்றவியல் வல்லுநர் **ஜேக் லெவின்** குறிப்பிட்டுள்ளார்.

வெறுப்புப் பேச்சு "நாம்" மற்றும் "அவர்கள்" எனும் பாகுபாட்டைச் சமூகத்தில் உருவாக்கும் எனவும், பிளவு மனநிலை மற்றும் வெளித் தள்ளும் போக்கு ஆகியவற்றை வெறுப்புப்பேச்சு ஏற்படுத்தி விடும் எனவும் உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும் கருத்துரிமை என்பதை ஒருவர் தவறாகப் பயன்படுத்தி, அதனால் அவர் தண்டிக்கப்பட்டிருந்தால், அவர் தேர்தலில் போட்டியிட முடியாது என மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1951 எட்டாவது பிரிவு குறிப்பிடுகிறது. எனவே இவற்றின் பின்னணியில் வன்முறை நோயாளிகளான சங்கிகளின் வாய்க்கொழுப்பை, வெறுப்புப் பேச்சைச் சட்டத்தின் மூலம் தடுக்க வேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகி விட்டது.

வெறுப்புப் பேச்சு குறித்த திருத்தப்பட்ட பரிந்துரைகளைச் சட்ட ஆணையம், 2018 மே மாதத்தில் வழங்கியது. ஆனால் நாடாளுமன்றத் தில் அந்த மசோதா நிறைவேற்றப் படவில்லை. எனவே இந்தியத் தண்டனைச் சட்டத்தில் 153சி / 505ஏ ஆகிய பிரிவுகளைச் சேர்க்க, குற்றவியல் நடைமுறைச் சட்டத் திருத்த மசோதாவை இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே ஒன்றிய அரசு கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கை இப்பொழுது வலுப்பெற்று வருகிறது.

## இனப்படுகொலை

புதுதில்லியில் நிகழ்ந்தது கலவரம் எனக் கூற முடியாது. அது திட்டமிட்ட தாக்குதல் என்பது இன்று அம்பலத்திற்கு வந்திருந்தாலும், அதை "இனப்படுகொலை" ( Genocide ) என்றுதான் குறிப்பிடுகிறார், மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள். அவர் மட்டுமல்ல, இன்றைக்குக் காசுமீர் மற்றும் அசாம் ஆகிய பகுதிகளில் நடைபெறும் வன்முறை மற்றும் தேசியக்குடிமக்கள் பதிவேடு ஆகியவை இனப்படுகொலையின் முன்னோட்டமாக உள்ளது எனவும், பாசிசம் இந்தியாவில் பற்றிப் படர்ந்து வருகிறது எனவும், அமெரிக்கப் பேராசிரியர் கிரிகோரி ஸ்டேன்டான் அவர்களும் உறுதிபடக் கூறுகிறார். ருவாண்டா, கம்போடியா, ரோகிங்கியா இனப் படுகொலைகள் குறித்து விரிவான அறிக்கைகளை அளித்த ஆய்வாளர் இவர். தவிரவும் இனப்படுகொலைக் கண்காணிப்பகம் (Genocide Watch) எனும் உலகளாவிய ஆய்வு அமைப்பை உருவாக்கியவர்.

## இனப்படுகொலையின் படிநிலைகள்

பொதுவாக உலகம் முழுவதும் இனப்படுகொலைகள் பத்து வகையான படிநிலைகளைக் கொண்டிருக்கும் எனக் கிரிகோரி ஸ்டேன்டான் விளக்குகிறார்.

1 முதல் நிலையில் நாம் X அவர்கள் எனப் பிரிவினை உண்டாக்குதல். (Classification)

2 "அந்நியர்/வெளிநாட்டவர்" என முத்திரை குத்துதல். (Symbolization)

3 பரப்புரை செய்தல் (Dissemination)

4 தீவிரவாதிகள் / நோய்க்கிருமிகள் / கரப்பான்கள் எனப் பெயரிட்டு இழிவுபடுத்துதல். (Dehumanization)

5 இதற்கென ஓர் அமைப்பை உருவாக்குதல். (Organization)

6 பரப்புரை மூலம் மக்களைத் திரட்டுதல். (Polarization)

7 தாக்குதலுக்கு ஆயத்தப் படுத்துதல். (Preparation)

8 தாக்குதல் தொடுத்தல். (Persecution)

9 படுகொலை செய்தல் (Extermination)

10 செய்த குற்றத்தை மறுத்தல் / பிறர் மீது பழிபோடுதல் / விசாரணையைத் தள்ளிப் போடுதல் / தடயங்களை அழித்தல் (Denial)

புதுதில்லிப் படுகொலைகளைப் பருந்துப் பார்வையில் பார்க்கும் எவர் ஒருவரும் இதே வழிமுறையில்தான் அங்கே படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன என்பதை உணர முடியும். 2002 ஆம் ஆண்டு குஜராத் படுகொலை நடைபெற்ற பொழுது நரேந்திர மோடி, குஜராத்தின் முதலமைச்சர். அமித்ஷா, குஜராத்தின் உள்துறை அமைச்சர். இப்பொழுது மோடி, இந்தியாவின் தலைமை அமைச்சர், அமித்ஷா, இந்தியாவின் உள்துறை அமைச்சர். இது மட்டும்தான் வேறுபாடு.

**நெகிழ வைக்கும் மாந்தநேயம்**

இவ்வளவு கொடூரமான படுகொலைகள் ஒருபுறம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது, மற்றொரு பக்கம் குருத்துவாராக்களைத் திறந்து வைத்து, உயிருக்குப் பயந்து ஓடி வந்த முசுலீம்களைச் சீக்கியர்கள் பாதுகாத்துள்ளனர். சீலம்பூர் எனும் இடத்தில் தலித்துகள் பாதைகளை மறித்துப் போட்டு, கலவரக்காரர்கள் தெருவுக்குள் வரவிடாமல் தடுத்து இசுலாமியர்களுக்கு உதவியுள்ளனர். இந்துத்துவ வெறியர்கள் தீ வைத்த வீட்டிலிருந்த ஆறு முசுலீம்களைக் காப்பாற்றியிருக்கிறார் பிரேம் காந்த் பகேல் எனும் இந்து ஒருவர். 70% தீக்காயம் பட்டதால், இறுதியில் மருத்துவமனையில் அவர் உயிர்

துறந்தார் என்பதை அறிந்த பொழுது, மாந்த நேயம் மரித்து விடவில்லை என மனச்சான்று உள்ளவர்கள் உள்ளம் நெகிழ்ந்தனர்.

இத்தகைய கொடிய செயலுக்குக் காரணமானவர்கள் மீது உடனடி யாகக் குற்ற அறிக்கை தயாரித்து விரைந்து நடவடிக்கை எடுங்கள் என அறச்சீற்றத்தோடு எழுந்த தில்லி உயர் **நீதிமன்ற நீதிபதி** முரளீதர் அவர்கள், பொழுது விடிவதற்குள் பதவியிலிருந்து மாற்றப்படுகிறார். பிறகு வந்த "நீதிமான்கள்" வழக்கை நான்கு வாரம் தள்ளிப் போட்டுவிட்டனர்.

அதேபோல் தில்லிப் படுகொலைகளின்மீது ஏன் நடவடிக்கை எடுக்க வில்லை என இந்திய மனித உரிமை ஆணையத்தின் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி எச்.எல். தத்து அவர்களைச் செய்தியாளர்கள் கேட்டபொழுது, "புது தில்லியில் நடைபெற்றதை மதக்கலவரம் என்று கூற முடியாது. சனநாயகத்தில் இத்தகைய பிறழ்வுகள் ஏற்படத்தான் செய்யும்" என அலட்சியமாகக் கூறியுள்ளார்.

### ஐ.நா.மனித உரிமைக் கழகத்தின் வழக்கு

இந்தியாவிலுள்ள சங்கிகளைப்போல், உலகம் இந்த வன்முறை வெறியாட்டங்களைக் கண்டும் காணாமலிருக்க அணியமாக இல்லை. ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கழகம் "குடியுரிமைத் திருத்தச் சட்டம், உறுதியாகப் பாகுபாடு காட்டக் கூடியது" எனக் கண்டித்துள்ளது. மேலும் "பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ள அகமதியா, ஹசாரா, ஷியா பிரிவினர் அந்தந்தப் பகுதிகளில் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றனர். இவர்களுக்கும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின்படி பாதுகாப்பு வழங்க வேண்டும். மேலும் இடம் பெயர்தல் குறித்த நிர்வாக நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், அவை அனைத்து நாடுகளின் மனித உரிமைகள் சட்டம் மற்றும் சட்டத்தின்முன் அனைவரும் சமம், சட்டத்தின் கீழ் அனைவருக்கும் இணையான பாதுகாப்பு ஆகியவற்றின் அடிப்படை யில் அமைவதை நாடுகள் உறுதி செய்ய வேண்டும். இந்தப் பின்னணியில் **குடியுரிமைத் திருத்தச் சட்டம்** இந்திய அரசியல் சட்டத்துடன் பொருந்துகிறதா என்பதை ஆராய்வதில் உச்ச நீதி மன்றத்திற்கு நாங்கள் உதவ விரும்புகிறோம். எனவே இந்த வழக்கில் எங்களையும் ஒரு தரப்பாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்" என ஐ.நா. மனித உரிமைக் கழகத்தின் செயலர் நாயகம் மிச்செல் பேச்லெட் சார்பில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப் பட்டுள்ளது மிகவும் குறிப்பிடத்தக்கது.

*மேலும் இச் சட்டத்திற்கு எதிராகப் பல்வேறு தரப்பினர் உச்ச நீதிமன்றத்தில் ஏறக்குறைய 150 மனுக்கள் தாக்கல் செய்துள்ளனர் என்பது இங்கு கருதத்தக்கது.*

*தவிரவும்,* **தேசியக் குடியுரிமைப் பதிவேடு** *மற்றும்* **தேசிய மக்கள் தொகைப் பதிவேடு** *போன்றவற்றை நடைமுறைப் படுத்தக் கூடாது என இந்தியாவிலுள்ள 13 மாநிலங்கள் தத்தம் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளன. அதாவது இந்தியத் துணைக் கண்டத்தில் ஏறக்குறைய 50 கோடி மக்கள் தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து உள்ளனர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.*

*இவ்வளவு கடுமையான எதிர்ப்புகள் அலையலையாக எழுந்தபின் அமித் ஷா இப்பொழுது "தேசியக் குடியுரிமைப் பதிவேடு நடைமுறைக்கு வராது எனவும், தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் பொழுது ஆவணங்கள் கேட்கப்படாது" எனவும் திசைதிருப்பும் பொய்யான வாக்குறுதிகளை அள்ளி வீசுகிறார்.*

### செய்ய வேண்டியது என்ன?

*மக்கள் சங்கிகளின் பொய்களை நம்பவதற்கு ஆயத்தமாக இல்லை. உண்மையிலேயே பாரதீய சனதா அரசு தனது கூற்றில் நேர்மையாக இருக்குமானால், அது தேசியக் குடியுரிமைச் சட்டத்தைத் திரும்பப் பெற வேண்டும். மக்களுக்குக் குடியுரிமை வழங்குவதில் மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டக் கூடாது. மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டத்தின் (சென்சஸ்) கீழ்தான் மக்களிடம் விவரங்கள் திரட்டப்பட வேண்டும். தேசிய மக்கள் தொகைப் பதிவேட்டின் அடிப்படையில் விவரங்களைக் கேட்கக் கூடாது. ஏனெனில் தேசிய மக்கள் தொகைப் பதிவேடும், தேசியக் குடியுரிமைப் பதிவேடும் பிரிக்க முடியாதவை. எனவே ஒன்றை அனுமதித்தால், மற்றொன்றைத் தவிர்க்க முடியாது. எனவேதேசியக் குடியுரிமைப் பதிவேடு தயாரிப்பதற்கான நடைமுறைகள் மற்றும் ஆவணங்கள் குறித்த விதிகள் அனைத்தையும் திரும்பப் பெறுவதற்கேற்பச் சட்டமும் திருத்தப்பட வேண்டும்.*

### ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்படும் துரோகம்

*மதத்தால் முசுலீம்களைப் பாகுபடுத்துவதுபோல், இனத்தால் தமிழர்களைப் பாகுபடுத்தும் குடியுரிமைச் சட்டத்தைத் தமிழர்கள் ஏற்க மறுப்பது ஞாயமான ஒன்று. மத அடிப்படையில் பாதிக்கப்பட்டவர் களுக்குக் குடியுரிமை வழங்குகிறோம் என்று கூறினால், இலங்கை யிலுள்ள இந்து மதத்தைச் சார்ந்த தமிழர்கள் இன அடிப்படையில்*

*மட்டுமல்ல, மத அடிப்படையிலும் பாதிக்கப்பட்டு உள்ளனர். ஆயிரக் கணக்கான இந்துக் கோயில்கள் பவுத்த மத வெறியர்களால் தகர்த் தெறியப்பட்டுள்ளன. மேலும் புத்த மதம் அவர்கள் மீது திணிக்கப் படுகிறது.*

*அதேபோல், அண்டை நாடுகள் என்ற அடிப்படையில் பார்த்தாலும், பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், வங்காள தேசம் போல, இலங்கையும் இந்தியாவுக்கு அண்டை நாடுதான். அதுவும் இந்தியாவுக்கு அது என்றும் விசுவாசமான "நட்பு" நாடாகும்.*

*மேலும் குடியுரிமை கோரும் அகதிகளில் மிக நீண்ட காலம் - ஏறக்குறைய 35 ஆண்டுகள் - இந்தியாவில் வாழ்பவர்கள் இலங்கைத் தமிழர்கள்தாம். எனவே எந்த அளவுகோலின்படி பார்த்தாலும் இலங்கைத் தமிழர்களுக்குக் குடியுரிமையை இந்தியா மறுக்க முடியாது.*

*ஆனால் "ஐந்து இலட்சம் இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்கெனவே குடியுரிமை வழங்கி விட்டோம்" என அமித் ஷா கூறுகிறார். அது எப்படி? இலால்பகதூர் சாஸ்திரி ஒப்பந்தத்தின்படி 4,61,000 பேருக்கும், இந்திராகாந்தி ஒப்பந்தப்படி 74,000 பேருக்கும் என மலையகத் தமிழர்களுக்கு அளிக்கப்பட்ட குடியுரிமையைத்தான் அமித் ஷா குறிப்பிடுகிறார். ஆனால், போரினால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழர்கள் பற்றிப் பேசாமல் கள்ள மௌனம் காக்கின்றார்*

*பாரதீய சனதாக் கட்சி மட்டுமல்ல, காங்கிரஸ் கட்சியும் இலங்கைத் தமிழர்களைத் தீண்டத் தகாதவர்களாகத்தான் நடத்தியது. குடியுரிமைச் சட்டத்தில் 1987ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தம் மிகவும் முக்கியமானது. முன்பு இல்லாத வகையில் குடியுரிமைக்கான அடிப்படையையே அது மாற்றி அமைத்து விட்டது. இந்தியாவில் குடியுரிமை பெற ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தால் மட்டும் போதாது. பெற்றோரில் ஒருவர் இந்தியராக இருக்க வேண்டும் என்ற திருத்தத்தின் மூலம் 1983ஆம் ஆண்டிலிருந்து இங்குப் பிறக்கும் இலங்கைத் தமிழர் குழந்தைகளின் குடியுரிமைக்குக் காங்கிரஸ் ஆப்பு வைத்துவிட்டது.*

*இருப்பினும், தற்பொழுது குடியுரிமைச் சட்டம் 1955 வரையறுத் துள்ளபடிதான் இந்தியக் குடியுரிமை வழங்கப்படுகிறது. அதன்படி ஒருவர் இந்தியாவில் பிறந்திருந்தாலோ அல்லது இந்தியப் பெற்றோருக்குப் பிறந்திருந்தாலோ அல்லது குறிப்பிட்ட காலம் வரை இந்தியாவில் தொடர்ந்து குடியிருந்தாலோ அவர் இந்தியக் குடியுரிமை பெறத் தகுதி உடையவர் ஆவார்.*

*அவ்வகையில் ஈழத்தமிழர்கள் இன்று முகாமிலும், வெளியிலும் ஏறக்குறைய ஒரு இலட்சம் பேருக்குமேல் தமிழகத்தில் உள்ளனர். விருப்பத்தின் அடிப்படையில் அவர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட வேண்டும். இந்தக் கோரிக்கையும் குடியுரிமைச் சட்ட எதிர்ப்புப் போராட்டத்தில் இணையான முக்கியத்துவம் பெற வேண்டும்.*

**நேர்மையான விசாரணை தேவை**

*2020 பிப்ரவரி 23 தொடங்கி நடைபெற்ற புது தில்லிக் கலவரங்களைப்போல் எதிர்காலத்தில் நடைபெறக் கூடாது எனக் கூறிப் பார்வையாளர்களைப்போல கடந்து சென்றுவிடாமல், பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதோடு நின்றுவிடாமல், இத்தகைய வன்முறை வெறியாட்டங்கள் குறித்து உச்சநீதிமன்றத்தின் மேற்பார்வையில் நீதித்துறை ஆணையம் அல்லது ஓர் உச்ச நீதிமன்ற நீதிபதியின் தலைமையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். இதைக் குறிப்பிட்ட கால எல்லைக்குள் இலக்கு வைத்து விசாரணை அறிக்கையைப் பொதுவெளியில் தெரிவிக்க வேண்டும். மேலும் இந்த வன்முறையில் தொடர்புடையவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்திக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.*

**போராட்டப் படிப்பினைகள்**

*குடியுரிமை குறித்த பாரதீய சனதாக் கட்சியின் முன்னெடுப்புகள், இந்தியத் துணைக் கண்டத்தில் மாபெரும் அதிர்வலைகளை உண்டாக்கி உள்ளன. இது மக்களிடையே உருவாகியுள்ள விழிப்புணர்ச்சியை அடையாளப் படுத்துவதாக உள்ளது. இது தவிர, இந்திய விடுதலைக்குப் பிறகான வரலாற்றில் ஒன்றிய அரசை எதிர்த்து மாநில அரசுகள் தங்களின் உரிமையை நிலைநாட்ட ஒன்றுபட்டு முன்வந்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். மேலும் பெண்கள் - அதிலும் குறிப்பாக முசுலீம் பெண்கள் - வீதிக்கு வந்து வீரியத்துடன் போராடுவது முன் எப்பொழுதும் காணாத ஒன்றாகும். தவிரவும் சாதி / மதம் / கட்சி / வாழிடம் கடந்து அனைவரும் ஒன்றிணைந்து போராடுவதும் புதுமையான ஒரு நிகழ்வாகும்.*

*"கருத்துகள் மக்கள் மனதைக் கவ்வுமானால், அது ஒரு பௌதீக சக்தியாகி விடும்" என அறிவுறுத்திய பேராசான் மார்க்சின் கூற்றினை நமது கண்முன்னே நேரடியாகக் காண முடிந்தது, அரியதோர் அனுபவமாகும்.*

# சமசுக்கிருத அதிகாரமும் தமிழ் - அடிமை நிலையும்

• பொழிலன்




**கா**சுமீரிகளும், பஞ்சாபிகளும், நாகலாந்து மிசோரம் மக்களும் சமசுக்கிருதத்தைத் தங்கள் தாய்மொழிக்கு இணையாகவோ மேலாகவோ மதிப்பதில்லை.

மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்கள் என எவர் ஒருவரும் தங்கள் தாய்மொழியா, சமசுக்கிருதமா என்றால் தாய்மொழியையே உணர்வாகவும் உயிர்ப்பாகவும் கருதுகின்றனர்..

இந்தியாவிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ள எந்த ஓர் இன மக்களுக்கும் சமசுக்கிருதம் முதன்மை மொழியாக இல்லை..

ஆனால், இந்தியாவில் உள்ள ஆரியப் பார்ப்பனர்கள் மட்டுமே தாங்கள் வாழ்கிற மொழித் தேச அளவில் அந்தந்தத் தேசிய மொழி களையே தங்கள் தாய்மொழியாகக் கருதினாலும், சமசுக்கிருதத்தையே உயர் மொழியாகவும் தங்கள் குமுகத்திற்குரிய மொழியாகவும் ஏற்றுக் கொள்கின்றனர்..

* * *

**த**மிழே உலகின் மூத்த மொழி என்றும், திராவிட மொழிகளுக் கெல்லாம் தாய்மொழி என்றும், சமசுக்கிருதத்திற்கே மூல மொழி என்றும் மொழிஞாயிறு பாவாணர் தொடங்கி, தமிழறிஞர்கள் பலரும் நிறுவியிருக்கின்றனர்...

எண்ணற்ற நூல்கள் எழுதி இருக்கின்றனர், இப்போதும் எழுதியும் பேசியும் வருகின்றனர். அவர்களின் அவ்வகை விளக்கங்கள் அறியப்பட வேண்டியவை என்பது மட்டுமல்லாது, பரப்பப்பட வேண்டியவையு மாக உள்ளன.

ஆனால், அத்தகைய கருத்துகள், இதுவரை அந் நூல்களைப் படித்தவர்கள், அவர்களின் கருத்துரைகளை அறிந்தவர்கள் அளவில் மட்டுமே பரவியிருக்கின்றனவே அல்லாமல், அவர்களைக் கடந்து பரவிடவில்லை... பரவிடவில்லை என்பதைவிட அக்கருத்து பரப்பப் பட்டவர்களிடையேகூட பெரிய அளவில் எந்தப் பயனையும் அளித்து விடவுமில்லை. காரணம் தமிழ்மொழி அதிகாரம் படைத்ததாக இல்லாமல் இருப்பதே அடிப்படையானது..

தமிழ்மொழி எவையெவற்றில் எல்லாம் அதிகாரம் படைத்திருக்க வில்லை என்று பார்த்தால்தான் அதன் அதிகாரமற்ற மெலிவு தெரியும். தமிழ், கல்வி மொழியாக அதிகாரம் படைத்திருக்கவில்லை. வாழ்வியல் மொழியாக அதிகாரம் கொண்டிருக்கவில்லை, வழிபாடுகளில், நயன்மை(நீதி)த் துறைகளில், அரசின் ஆட்சித் துறைகளில், பொருளியல் வழித் தொழில்களில், வணிகத்தில் அதிகாரம் இழந்திருக்கிறது...

அதிகாரம் இழந்து இருக்கிறது என்று சொன்னால் அதிகாரம் செலுத்த இயலாதபடி அடங்கிக் கிடக்கிறது..

ஏன் அவ்வாறு அடங்கிக் கிடக்க வேண்டும் என எண்ணிப் பார்க்க வேண்டும்.

அவற்றிலெல்லாம் அதிகாரம் செலுத்துகின்ற அளவில் தமிழ் தகுதி படைத்த மொழியாக இல்லையா? அதனால்தான் அடங்கிக் கிடக்கின்றதா? - என்றால் காரணம் அது இல்லை.

தமிழ் எல்லா நிலைகளிலும் தகுதி படைத்த மொழியாகவே இருக்கிறது..

எந்த ஒரு புதிய கண்டுபிடிப்புகளையும் கருத்துகளையும் உடனே தமிழில் மொழிபெயர்த்துச் சொல்லிவிடமுடியும் என்கிற அளவில் தமிழ் தகுதி வாய்ந்த மொழியாகவே இருக்கிறது...

ஆனால், கல்வி நூல்களையெல்லாம் தமிழில் மொழி பெயர்த்துக் கல்விமொழியாகத் தமிழை மாற்றிவிடும் அதிகாரத்தைக் கல்விக்கூடங் களோ, இயக்ககங்களோ பெற்றிருக்கவில்லை..

உலகின் பல மொழியினர் அறிவியல் வளர்ச்சிக்குரிய பெயர், வினைச் சொற்களையெல்லாம் அவை எந்த மொழிகளில் உள்ளனவோ அச்சொல்லிலேயே பெயர்த்து பயன்படுத்துகின்றனரே அல்லாமல் தங்கள் மொழியில் மொழிபெயர்த்துப் பயன்படுத்துவதில்லை.

பஸ், கார், ராக்கெட் - என்று எளிய சொற்கள் தொடங்கி ஹார்ட்வேர், சாப்ட்வேர், சிப், ஆப் என்று பல நூற்றுக்கணக்கான சொற்களையும் பலரும் அப்படி அப்படியே அவரவர் மொழிகளில் பயன்படுத்துகின்றனர்.

ஆனால் எந்தப் பொருளின் பெயர் என்னவாக இருந்தாலும் அந்தப் பொருளின் செயல்பாடறிந்து அதற்கான வினையை அடியொட்டிய பெயர்ச்சொல்லை உடனடியாகத் தமிழில் பெயர்த்து வெளியிடுகிற ஆற்றல் தமிழகத்தின் அறிஞர்களிடம் மட்டுமல்ல, பொதுவான அறிவு ஈடுபட்டாளர்கள் அனைவரிடமும் உள்ளதை அறிய முடியும்.

மிதிவண்டி, பேருந்து, ஏவுகணை, ஆழிப்பேரலை, மென்பொருள், வன்பொருள், செயலி என்றெல்லாமான பல்லாயிரம் பெயர்ச்சொற்கள், கழக இலக்கியங்கள் எவற்றிலும் இல்லாத நிலையில் தமிழ் அறிஞர்கள் சிலரும், தமிழ் ஈடுபாட்டாளர்கள் பலருமே தாங்களே தமிழின் பெருமையைப் பயனாக்கிக்கொண்டு தமிழ் உலகிற்கு உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்றால், தமிழ் அவ்வகை ஆற்றல் படைத்தது என்பதை உணர வேண்டும்.

அடுத்தது...

தமிழ் என்பது ஒரு மொழியாக மட்டுமே இல்லாமல் ஆற்றல் படைத்த குமுகமாகவும் வாழ்வாகவும் பண்பாடாகவும் வரலாறாகவும் வளர்ந்திருப்பதை அறியவேண்டும்.

இந்தத் தன்மையளவிலும் பிற மொழிகளில் இருந்து தமிழ் வேறுபட்டது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

உலகில் சில மொழிகளைக் காதல் மொழி, வணிக மொழி, வழிபாட்டு மொழி, நீதி மொழி என்றெல்லாம் அடையாளப்படுத்திச் சொல்லப்பட்டு வருவதை அறிந்திருக்கிறோம். அதற்கு அந்த மொழி தான் காதல் செய்யும், வணிகம் செய்யும், நயன்மை (நீதி) சொல்லும், வழிபாடு செய்யும் என்று பொருள் அல்ல.

அந்த மொழி சார்ந்த குமுகமும் அரசும் அந்த ஈடுபாடுகளில் அதிகம் இருந்ததால் அதற்கான சொற் பெருக்கம் அந்த மொழியில் உண்டானது என்பதே அதன் பொருள்..

ஆனால், தமிழைப் பொறுத்த அளவில் அதற்குப் பல்வகைச் சிறப்புகள் உண்டு. தமிழுக்குப் பதினாறு வகைச் சிறப்புகள் இருப்பதாகப் பாவாணர் அவர்கள் அடையாளப்படுத்திக் காட்டுவார்.

அவ்வகைச் சிறப்புகளைத் தமிழ் கொண்டிருப்பது ஒருபுறம் எனில் ஒவ்வொரு தமிழ்ச் சொல்லும் வரலாற்றையும் குமுகத்திற்குரிய அரசியல் பொருளியலையும் வெளிப்படுத்தும் வகையில் இருப்பதை உணர்வது மறுபுறமாக உள்ளது..

து - என்பது மேல் என்பதைக் குறிக்கும் குறிப்பு ஒலிப்பு.

து - என்பது மேல் என்பதிலிருந்து - துய் - துலை என்பது அளக்கும் கருவி..

துலை - துலா - துலாக்கோல் - மேலே உயர்த்திப் பிடித்து அளக்கும் கருவி..

துலை - தொலை - தொலைவு - மிக நீண்ட, உயர்ந்த..

துலை - தலை - மேல் உள்ளது..

செந்தலை, குழித்தலை என்றுமான தன்மைக்கேற்ப நிலம் அடையாளப்பட்டிருக்கிறது..

தலை - தரை - நிலத்தின் மேல் பகுதி

தர் - என்றும், தர - என்றும், தரா - என்றுமாகச் சிந்து கங்கை ஆற்றுப் பகுதிகளையொட்டிய எண்ணற்ற ஊர் பெயர்களையெல்லாம் அன்றைய தமிழிய வரலாறு படிந்த சுவடுகள் காட்டுவதை உணரலாம்

ஆக, தமிழில் உள்ள பல ஆயிரக்கணக்கான சொற்களுக்குரிய வரலாற்றுச் சுவடுகளை இந்த வகையில் உணர முடியும்.

அவற்றின் மூலம் தமிழில், தமிழரின் மொழி, இன, வாழ்வியல் பரப்பை விரிவை அறியமுடியும்.

“நாடென்ப நாடா வளத்தன” - என்பதிலிருந்து பிறரை நாடி வளப்படுத்திக் கொள்ளும் நடைமுறை நாட்டிற்கு இருக்கக் கூடாது என்று குமுகம் அடையாளப்படுத்தப்படுவதிலிருந்து தமிழ்க்குமுகத்தின் அரசியல் பொருளியல் இலக்கை அறிய முடியும்.

சிறியோரை. இகழ்தல் இல்லாத குமுக ஒழுக்கமே, மக்கள் பண்பு எனக் கொண்ட குமுகமாக வளர்ச்சியுற்று இருந்த தமிழகத்தைக் காணமுடியும்.

ஆனால் அப்படியான மிகச் சிறந்த வாழ்வியல், தொழிலியல், குமுகவியல், அரசியல்,. பொருளியலை நோக்கமாகக் கொண்ட வள வாழ்வை இன்றைய தமிழ்க் குமுகமோ, தமிழோ கொண்டிருக்க இயலவில்லை.

காரணம், தமிழ்க் குமுகம் தன்னைத் தன்னளவில் நிரல்படுத்திக் கொள்கிற, ஒழுங்குபடுத்திக் கொள்கிற, நெறிப்படுத்திக் கொள்கிற அதிகாரத்தைப் பெற்றிருக்க முடியவில்லை

அதிகாரம் இழந்த இத் தமிழ்க் குமுகம், அதிகாரம் இழந்த அரசியலை, அதிகாரம் இழந்த பொருளியலைக் கொண்டிருப்பதாக ஆகிவிட்டது.

அதனால் அதன் மொழியும், இன அடையாளமும், பண்பும் வாழ்க்கை முறைகளும்கூட அதிகாரம் இழந்தது மட்டுமன்றி வழக்கிழந்தும் வருகின்றன.

வளத்திற்காகக் கூட பிறரை, பிற நாட்டை நாட வேண்டாத வாழ்வுமுறை நோக்கம் கொண்ட தமிழும் தமிழகமும் இன்றைக்கு முழுக்கமுழுக்கப் பன்னாட்டுச் சுரண்டல்களுக்கும் இந்திய அரசதிகாரத்திற்கும் அடிமைப்பட்டுத் தன் அனைத்து ஒழுங்கு முறைகளையும் வாழ்வியல் முறைகளையும் இழந்து வருகிறது.

இவை குறித்தெல்லாம் விரிந்து அறிந்து கொள்வதன் முதல்படியாகத்தான், தமிழின் மீது, தமிழினத்தின் மீது தமிழ்நாட்டின் மீதான சமசுக்கிருத அதிகாரத்தைத் தெரிந்து கொள்வதில் முன்னுரையாகக் கீழே உள்ளவற்றை அறியத்தருகிறோம்..

முதலில் சமசுக்கிருதம் என்ற மொழியைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும்.

சமசுக்கிருதத்தில் 10,278 கோடி சொற்கள் இருப்பதாகத் துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி சொல்கிறார்..

“பொய் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும்” என்று சொல்வார்களே, அந்த வகையில் அவர் சொல்லி இருக்கும் இந்த அண்டப்புளுகு சிரிப்பதற்கானதா? சினப்படுவதற்கானதா?

*உலக ஆய்வாளர்கள் பல மொழிகளையும் ஆய்ந்து கண்டறிந்து பலவகையில் மொழிகளின் சொற்கள் எண்ணிக்கையைப் பட்டியலிட்டிருக்கிறார்கள்..*

*2015 இல் வெளியான ஆக்சுபோர்டு பல்கலைக்கழகத்தின் இருபதாம் பதிப்புக்குரிய ஆங்கில அகராதியின்படி ஆங்கிலத்தில் ஓர் இலக்கத்து 76 ஆயிரத்து 476 சொற்கள் உள்ளன என்பதாக அறிவித்திருக்கிறார்கள்...*

*கொரிய மொழியில் பதினோரு லட்சம் சொற்கள் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்..*

*சப்பானிய மொழியிலும் அதற்கிணையாக இருப்பதாகக் கூறுகிறார்கள்..*

*தமிழில் ஒன்றரை இலக்கம் சொற்களுக்கும் மேலாகத் தொகுக்கப்பட்டிருப்பதாகப் பதிவு உள்ளது..*

*இந்நிலையில் எந்த மொழியிலும் ஒரு கோடி அளவில் சொற்கள் இருப்பதாகக் கூறுவதேகூட பொய்க் கருத்து என்றே ஏற்றுக்கொள்ள வேண்டும்... இந்த நிலையில் குருமூர்த்தி சமசுக்கிருதத்தில் பத்தாயிரத்து 278 கோடி சொற்கள் இருப்பதாகக் கூறுவது யாரை ஏமாற்றுவதற்கு என்று புரிந்துகொள்ள வேண்டும்...*

*பாணினி எழுதிய* ***அசுட்டாத்யாயி*** *சமசுக்கிருதத்தில் எழுதப்பட்ட நூல் அன்று, என்பதைப் பல இடங்களில் விளக்கி இருக்கிறோம். அந்தக் காலத்தில் சமசுக்கிருதம் என்று ஓர் மொழி தோன்றியிருக்கவேயில்லை என்பதைப் பாணினியே பதிவு செய்திருக்கிறார்...*

*கி.பி. 150 ஆண்டுகளுக்கு முன்பாகச் சமசுக்கிகருத மொழியின் பயன்பாடு இருந்ததற்கான சான்றுகள் இல்லை..*

*கி.பி. 150இல் எழுதப்பட்ட சமசுக்கிருத எழுத்துப் பதிவுகள் அசோகனின் பிராமி எழுத்து முறையிலேதான் முதன்முதலாகப் பதிவாகியிருக்கிறது.*

*மேலும், சமசுக்கிருதத்தின் மீது தமிழர்களுக்கு மறுப்பு வராமல் இருக்க வேண்டும் என்பதற்காகப் பொய்க் கருத்துகளை அள்ளி விடுகிறார் குருமூர்த்தி...*

*சமசுக்கிருதத்திற்கும் தமிழுக்கும் இடையேயிருந்த ஆழ்ந்த உறவை வெளிப்படையாகத் தொல்காப்பியம் கூறுவதாகச் சொல்லுகிறார். அதன் பாயிரத்தில் திருவிற்பாண்டியன் அவையில், நான்கு வேதங்களும் கற்றுணர்ந்த அதங்கோட்டாசான் தலைமையில், அவர் எழுப்பிய ஐயங்கள் பலவற்றையும் தீர்த்து ஐந்திரம் கற்ற தொல்காப்பியன் எனத் தன் பெயரைக் கூறிப் புகழ்பெற பாடினான் - எனத் தொல்காப்பியப் பாயிரத்தைப் பற்றிக் கதை விடுகிறார்..*

*தொல்காப்பியப் பாயிரத்திலுள்ள **நான்மறை** என்பது நான்கு வேதங்கள் என்பதாகத் திரித்துக் கூறுகிறார்..*

*தொல்காப்பியம் எழுதப்பட்ட காலத்தில் வேதங்கள் தொகுக்கப்பட வில்லை என்பது மட்டுமல்ல; நான்கு வேதங்களாகவும் உருவெடுக்க வில்லை; பகவத்கீதை எழுதப்பட்ட கி.பி. ஏழாம் நூற்றாண்டளவில்கூட வேதங்கள் மூன்று வேதங்களாக மட்டுமே இருந்திருக்கின்றன என்பதை, வேதங்கள் **மூன்று** என்பதாகவே பதிவு செய்திருப்பதிலிருந்து கவனித்தாக வேண்டும்...*

*இந்நிலையில் 2200 ஆண்டுகளுக்கு முந்தைய தொல்காப்பியத்தில் உள்ள நான்மறை என்பது நான்கு வேதங்களைக் குறிப்பிடுவதாகச் சொல்வது கதை அளப்பு முயற்சி இல்லாமல் வேறல்ல...*

*சமசுக்கிருதம் இயற்கையாகத் தோன்றிய மொழி அன்று..*

*காலத்தின் தேவைக்கேற்ப ஆரியப் பார்ப்பனியக் கூட்டத்தினரால், அவர்களின் அதிகார நலனுக்காக அதை அவர்கள் உருவாக்கிக் கொண்டார்கள்.. அதற்கென்று தனித்த எழுத்து வடிவம் இல்லை..*

*பாணினியால் எழுதப்பட்ட **அஷ்டாத்யாயி** - நூலில் சமசுக்கிருதம் என்பது ஒரு மொழியாகக் குறிப்பிடப்படவில்லை..*

*அந்தக் காலத்தில் ஆட்சி செய்த அரசர்கள் சிந்து, கங்கைக்கு இடைப்பட்ட நிலப்பரப்பில் அரசுகளை அமைத்திருந்தபோது, விரிந்த அந்த நிலப்பரப்பில் அதிகாரத்தைச் செலுத்துவதற்காக ஆங்காங்கே புழக்கத்திலிருந்த பல்வேறு இனக்குழுக்களின் மொழிகளைத் தொகுத்து நிரல் படுத்தி எழுதுவதற்கான முயற்சியாகவே அந் நூல் தொகுக்கப் பட்டதாக அறியமுடிகிறது.. அப்படியாகத் தொகுத்து எழுதப்பட்ட வற்றுள் தேர்ந்த ஒன்றை ஒருமுகப்படுத்தி அதிகாரத்திற்காக ஆக்கிக்கொண்ட நோக்கமே, அந்நூலைத் தொகுத்ததின் நோக்கமாகத் தெரிகிறது. பிராகிருதம், பாலி, அர்த்தமாகதி போன்ற பல மொழிகள் அக்காலத்தில் அவ் வட பகுதிகளில் நிலவி வந்திருக்கின்றன..*

*அவற்றிலிருந்தான கலவை மொழியாகவே, இன்னும் சொன்னால் கலந்து செய்யப்பட்ட மொழியாகவே சமசுக்கிருதம் இருந்ததை உணர முடியும்.*

*தமிழை மூலமாகக் கொண்ட, தமிழிலிருந்து திரிந்ததான வடபால் திராவிட மொழியாகப் பிராகிருதம் இருந்ததால் பிராகிருதத்தின் வழியாகச் சமசுக்கிருதம் உருக்கொண்ட காரணத்தினால் தமிழிய மூலத்தோடான பல சொற்களும் சமசுக்கிருதத்தில் உண்டு..*

*அசோகர் ஆண்ட கி.மு. 360ஆம் ஆண்டுகளில் கற்பாறைகளில் பொறிக்கப்பட்ட எழுத்து வடிவங்கள் பாலி, பிராகிருத மொழிகளைச் சார்ந்தவையே அல்லாமல் சமசுக்கிருதத்தைச் சார்ந்தவை அல்ல..*

தமிழிய எழுத்து வடிவத்திலிருந்து உருவாக்கிக் கொண்ட வடபால் பிராமி எழுத்துகளைக் கொண்டே பிராகிருதமும், பாலியும் அதன் பின்னால் சமசுக்கிருதமும் எழுதப்பட்டன என்பதை அறிய வேண்டும்.

சமசுக்கிருதத்தில் எழுதப்பட்ட கல்வெட்டு எழுத்து கி.பி. 150 ஆண்டுகளுக்குப் பிந்தையதாக உள்ளனவே அன்றி அதற்கு முந்திய பதிவுகள் எங்கும் இல்லை.

அந்தக் கல்வெட்டும் அசோகனின் பிராமிய எழுத்து வடிவில் எழுதப்பட்டிருக்கிறதேயன்றி சமசுக்கிருதத்திற்கு என்று தனி எழுத்துமுறை அப்போதும் தோன்றிட வில்லை... கிபி ஐந்தாம் நூற்றாண்டளவில் தமிழ்நாட்டில் பல்லவர் காலத்தில் புழக்கத்தில் இருந்த கிரந்த எழுத்துகளிலேயே பின்னர், சமசுக்கிருதம் எழுதப் பட்டிருக்கிறது..

அதன் பிறகு 11ஆம் நூற்றாண்டளவில்தான் சமசுக்கிருதம் **தேவநாகரி** எழுத்தில் எழுதப்பட்டது..

இந்த அளவில் சமசுக்கிருதத்தின் கால வளர்ச்சியை விளங்கிக் கொண்டு அதன் அதிகாரப் போக்கு எப்படி வளர்ந்தது என்பது குறித்துப் பார்ப்போம்..

சமசுக்கிருதத்தின் நுழைவும் கலப்பும் 2000 ஆண்டளவினதே என்றாலும்,வெகுமக்களிடையேவான தன் முழு அதிகார ஆட்சிப் போக்கும் சில நூற்றாண்டுகளை உடையதே..

அரசர்கள் காலத்தில் என்று எடுத்துக் கொண்டால், பல்லவர் காலங்களிலும், பிற்காலச் சோழர்களுக்குப் பிறகும், அதன்பிறகு நாயக்கர்கள், மராட்டியர்கள் ஆண்ட காலங்களிலும் சமசுக்கிருதமே அரசு அதிகார முதன்மை மொழியாக இருந்திருக்கிறது.. எனவே, அக்காலங்களில் அரசக் குடும்பங்களின், மிகப் பெரும் நிலவுடைமைக் குடும்பங்களின் விழாக்கள், சடங்குகளில் மட்டுமல்லாமல், அரசு அதிகாரங்களுக்கு உட்பட்ட பெரும் கோயில்களில் ஆரியப் பார்ப்பனர் களின் அதிகார வலியுறுத்தத்தினால் சமசுக்கிருதமும் ஓதப்படும் நடைமுறை ஏற்பட்டிருக்கிறது.. ஆரியத்திற்கெதிரான தமிழிலக்கியங்கள் பல அழிக்கப்பட்டன. பல இலக்கியங்களில் இடைச்செருகல்கள் நடத்தப்பட்டன. கல்வி என்பது குலக்கல்வியாகவும், சமசுக்கிருதச் சார்புடைய கல்வியாகவுமே ஆக்கப்பட்டன.

ஆங்கிலேயர்கள் வரவுக்குப் பின்னர் அவர்களின் ஆட்சி அதிகாரத்தோடு ஒருபக்கம் இணங்கிச் செயல்பட்டுக் கொண்டிருந்த ஆரியப் பார்ப்பன அலுவலர்கள், சமசுக்கிருதத்தைக் கல்வியிலும் திணிப்பதற்குப் பெருமுயற்சி எடுத்துக் கொண்டனர்..

*சமசுக்கிருதமே மூத்தமொழி என்பதாகவும், இந்தியாவின் 'தத்துவங்களெல்லாம் சமசுக்கிருத்திலேயேதான் இருப்பதாகவும் உலகெங்கும் பரப்பினர்..*

*அதனால், பார்ப்பனர்கள் மட்டுமே பெருமளவில் படிக்க நேர்ந்த மருத்துவக்கல்வி உள்ளிட்ட உயர்கல்விகளில் பார்ப்பனரல்லாதார் வரவைத் தடுப்பதற்காகச் சமசுக்கிருத மொழியையும் படித்தாக வேண்டும் என்கிற நடைமுறையை உருவாக்கினர்.*

*இன்னொரு புறத்தில், இன்றைய அளவில் நூறு இருநூறு ஆண்டுகளுக்கு முன்புகூட, சில முற்பட்ட சாதியினர் உள்ளிட்டு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதியினர் எவரும் பார்ப்பனர்களை வைத்து விழாக்கள், குடும்ப நிகழ்வுகளை நடத்துவது வழக்கமாக இல்லை.. மேற்படி சாதிமக்களின் நிகழ்வுகளுக்கு ஆரியப் பார்ப்பனர்களும் வர ஒப்புவதுமில்லை..*

*எனவே, பெரும்பான்மை மக்களின் குடும்ப நிகழ்வுகளில், பெயர் வைப்புகளில், சிறிய கோயில்களின் வழிபாடுகளில், குடமுழுக்குகளில், சடங்குகளில் சமசுக்கிருத வழக்கங்கள் அக் காலங்களில் இருந்திடவில்லை..* ***இந்து*** *என்று அக் காலங்களில் தங்களைச் சொல்லிக் கொள்வாரும் இல்லை..*

*1938 தொடங்கி தொடர்ந்து நடைபெற்று வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத் தாக்குதல்களை அரசுகள் ஒருபுறம் அடக்கிக் கொண்டிருக்க, திட்டமிட்ட சூழ்ச்சியாய் அவற்றை எதிர் கொள்ளும் நோக்கில், ஆரியப் பார்ப்பனர்கள் களப் பணிகளைச் செய்யத் தொடங்கினர்..*

*1925ல் தொடங்கப்பட்ட ஆர்.எசு.எசு களங்களை உருவாக்கிக் கொள்ளும் நிலையில், மாவட்டந் தோறும் வட்டந் தோறும் அதிகார நடுவ நிறுவனங்களை அமைத்தனர்..*

*பல்வேறு வகையில் அந்த அதிகார நடுவங்கள் அமைந்திருந்தன.. பெருங்கோயில்களை முழுக்கமுழுக்க அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர், ஆங்கிலேயர்களைப் பார்த்து அவர்களைப் போன்றே, கல்விக்கூடங்கள் இணைந்த அதிகார நடுவங்களை உருவாக்கிக் கொண்டனர்.. அரசின் அதிகார நடுவங்களுக்குள் நுழைகிற திட்டத்தில், உச்சநீதிமன்ற நயனகர் (நீதிபதி) தொடங்கி, நிர்வாகத் துறைகள், படைத்துறைகள் அதிகாரங்களில் என எல்லாவற்றிலும் முழுமையாக நுழைந்து கொண்டனர்..*

*சட்டமன்ற நாடாளுமன்றங்களிலும் அவர்களின் அதிகாரம் தாண்டவமாடியது..*

*1947இல் ஆங்கிலேயர்கள், ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவிற்கு விடுதலை கொடுத்ததாய் விடைபெற்றுச் சென்ற பின், அரச அதிகாரங்கள் முழுமையையும் பார்ப்பன பனியாக்கள் மட்டுமே கைப்பற்றிக் கொண்டனர்..*

*அதன்பிறகு இந்திய அரசியல் அதிகாரம் முழுக்க முழுக்கத் தங்கள் கைகளுக்கு வந்து விட்ட நிலையில் அனைத்து துறைகளிலும் சமசுக்கிருத அதிகாரத்தை அதிகப்படுத்தினர்.*

- *இந்தியாவின் அலுவல் மொழிகள் 14 என்று அறிவித்து, அந்த 14 மொழிகளில் சமசுக்கிருதமும் ஒன்றாக அறிவித்துக் கொண்டனர்.*
- *அதிலிருந்து 1957ஆம் ஆண்டுகளில் சமசுக்கிருத ஆணையம் ஒன்றை இந்திய அரசு தொடங்கியது*
- *1970இல் இராஷ்ட்ரிய சம்ஸ்கிருத சன்ஸ்தான் - என்ற நிறுவனத்தைத் தொடங்கியது இந்திய அரசு,*
- *இந்தியாவில் உள்ள எந்த மொழிக்கும் ஒரு நிகர்நிலைப் பல்கலைக் கழகத்தை அமைக்காத இந்திய அரசு, சமசுக்கிருதத்திற்கு மட்டும் 18 நிகர்நிலை பல்கலைக் கழகங்களை அமைத்திருக்கிறது. அவற்றுள் மூன்று பல்கலைக்கழகங்களை நடுவண் பல்கலைக்கழங்களாக இப்போது உயர்த்தியுள்ளது.*
- *அந்த நடுவண் பல்கலைக்கழகங்கள்வழி ஐந்து சிற்றூர்களைச் சமசுக்கிருதச் சிற்றூர்கள் என்பதாகப் பொறுப்பேற்று உருவாக்கிட ஏறத்தாழ 700 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து சிற்றூருக்கு 50 முதல் 100 பிராமண குடும்பங்கள் என்கிற அளவில் அவர்களுக் கெல்லாம் நல்கை கொடுத்துச் சமசுக்கிருதத்திலேயே பேசுவதற் கான பயிற்சியும் கொடுத்து ஏற்பாடு செய்கின்றனர்..*
- *மாந்த வள மேம்பாட்டுத் துறையின் வழியாக மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை என்கிற கணக்கில் உலகச் சமசுக்கிருதம் மாநாடுகளை இந்திய அரசே தன் பொறுப்பில் பல நாடுகளில் நடத்தி வருகிறது.. இதுவரை 18 மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தியாவிற்குள் மூன்று மாநாடுகளும், பிற வெளிநாடுகளில் 15 மாநாடுகளும் நடத்தப்பட்டுள்ளன. மாநாடு ஒன்றிற்கு 1000 கோடி என்கிற அளவில் ஏறத்தாழ 18 ஆயிரம் கோடி ரூபாயை இந்திய அரசே இந்த மாநாடுகளுக்காகச் - செலவிட்டிருக்கிறது.. கடைசி மாநாடு 2018இல் கனடாவில் நடைபெற்றது.*
- ***சன்சுதான்கள்** (Sansthan) என்று அழைக்கப்பட்டுவரும் பதினெட்டு நிகர்நிலைப் பல்கலைக்கழக நிறுவனங்களிலெல்லாம் சமசுக்கிருதம்*

மொழி அளவில் பயிற்றுவிக்கப்படுவதைக் கடந்து பார்ப்பனிய வைதிக மதக் கோட்பாடுகளை எல்லா நிலைகளிலும் பயிற்றுவிப்பதும், குறும் படங்களாய் எடுத்துப் பரப்புவதுமாக, உலகளவில் சமசுக்கிருதத்தை நிலைப்படுத்துவதற்கான திட்டச் செயல்பாடுகளைச் செய்து வருகிறது. இந்தியாவெங்கும் உள்ள பல்கலைக் கழகங்களில் மட்டுமன்றி, உலகில் உள்ள சிறந்த பல்கலைக்கழகங்களில் சமசுக்கிருத மொழித் துறைகளை உருவாக்குவது, சமசுக்கிருத இருக்கைகளை அமைப்பது, அதற்கென மாணவர்கள் இருக்கிறார்களோ இல்லையோ. 10 பேராசிரியர்களை அமர்த்திக் கொள்வது, அவற்றுக்கெல்லாம் உலக அளவிலும் நன்கொடைகளைப் பெறுவது என உலகளவில் வேலை செய்கின்றனர்.

- தமிழகத்தை மராட்டிய சரபோஜி மன்னர் ஆண்ட காலத்திலும், அதன் பிறகும், தஞ்சை சரபோஜி மகால் நூலகத்தில் தொகுக்கப்பட்ட தமிழ்ஓலைச் சுவடிகளின் படிகளையெல்லாம் சமசுக்கிருதத்தில் பெயர்த்து எழுதிக்கொண்டு, தமிழ் ஓலைச் சுவடிகளை அழித்த வேலைகள் நடைபெற்றன.
- தமிழர்களின் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை **ஆரிய வைத்தியம்(ஆயுர்வேதம்)** என்கிற பெயரில் மொழிபெயர்த்துக் கொண்டு, மூலச் சுவடிகளை அழித்ததும், பெருஞ் சிறப்பு வாய்ந்த தமிழ்இசையின் அரிய பதிவுகளையெல்லாம் சமசுக்கிருத வயப்படுத்திக் கொண்டு **கர்நாடக சங்கீதம்** என்கிற பெயரில் மாற்றிக் கொண்டதும், தமிழின் கூத்து, நடனக் கலைகளின் சிறப்புகளையெல்லாம் திருடி சமசுக்கிருதத்தில் மாற்றிக் கொண்டதோடல்லாமல், மூலங்களை அழித்துவிட்டுப் **பரதநாட்டியம்** என்பது சமசுக்கிருதத்திலேயே மூலத்தைக் கொண்டது என்பதாகப் பொய்யுரைத்து வருவதும், சமசுக்கிருத அதிகார வெறியின் பல்வேறு நடைமுறைகள் ஆகும்.. இவற்றையெல்லாம் அவ்வவ் துறைசார்ந்த அறிஞர்கள் பலர் எடுத்துக்காட்டி நூல்கள் பலவற்றை எழுதி இருக்கின்றனர்..
- பழஞ்சுவடிகளையெல்லாம் தொகுத்து வெளியிடுவதாகக் கூறி இதுவரை 14க்கும் மேற்பட்ட சமசுக்கிருதக் கலைக்களஞ்சியங்களைச் சென்னைப் பல்கலைக்கழகச் சமசுக்கிருதத்துறை வெளிக் கொண்டு வந்திருக்கிறதாம். இதற்கெல்லாம் இந்திய அரசும், இந்தியப் பல்கலைக்கழக நல்கை(மானிய)க் குழுவும் பெரும் துணை செய்திருக்கின்றன.

- இந்திய அரசின் மாந்த வள மேம்பாட்டுத் துறையின் பெரும் பணிகள், பார்ப்பனிய மேம்பாட்டிற்கானதாகவும் சமசுக்கிருத மேம்பாட்டிற்கானதாகவுமே நடைபெற்றுவருகின்றன. அந்தத் துறைக்கே **ஆரியப் பார்ப்பனிய சமசுக்கிருத மேம்பாட்டுத்துறை** - என்று பெயர் வைத்துக் கூறுவது பொருத்தமானதாக இருக்கும் படியான வேலைகளையே அத்துறை செய்துவருகிறது.

  இந்திய அரசு சமசுக்கிருதத்திற்கான அதிகாரத்தை உருவாக்கி, அம் மொழியை, அதன்வழி ஆரியப் பார்ப்பனியத்தை மேற்சுட்டப் பட்ட பல வகைகளிலெல்லாம் வலுப்படுத்திக் கொள்கிறது என்றால் சமசுக்கிருத அதிகாரங்களை நிறுவுவதற்கு ஆரியப் பார்ப்பனர்கள் செய்துவரும் சூழ்ச்சிகள் இன்னும் அதிகப்படியானவை.

- கோயில்களிலும் வழிபாடுகளிலும் குடமுழுக்கு போன்ற விழாக்களையும் சிறப்புகளையும் சமசுக்கிருதத்திலேயே கடந்த சில நூற்றாண்டுகளாகச் செய்துவருகின்றனர். சமசுக்கிருதத்தில் வழிபடுவதாலேயே வழிபடுவோரின் வேண்டுகை இறைவனைச் சென்றடையும் என்பதான புளுகைச் சமசுக்கிருத விற்பன்னர்கள் செய்து வருகின்றனர். சமசுக்கிருத ஒலிப்பு முறைகளில் ஏதோ ஓர் அதிர்வு இருப்பதாகவும், அந்த அதிர்வு அலையின் காரணத்தால் தான் கடவுள் செவி சாய்ப்பதாகவும் அவர்கள் கதைகட்டி விடுகின்றனர். எனவே தமிழ் உள்ளிட்ட பிற மொழிகளில் கோயில்களில் வழிபாடு, பூசனை செய்வது என்பது கடவுளுக்கு உகந்தது அல்ல என்பதோடு அவ்வழிபாடும் நிறைவேறாது என்பதாகவும், அப்படி வேறு மொழிகளில் செய்வதன் வழி அந்தக் கோயில் தீட்டுப்பட்டுவிடும் என்பதாகவும் கூறி **சம்ப்ரோக்ஷண** யாகம் செய்து தீட்டுக் கழித்தாக வேண்டும் என்பதாகவும் கூறிப் பொய்யுரைப்பது மட்டுமல்லாமல் அந்நடைமுறைகளையே செய்து வருகின்றனர், பார்ப்பனிய வெறிபிடித்த மடாதிபதிகள்!

- அரசு விழாக்களை, நிகழ்வுகளைத் தொடங்கி வைப்பதில், புதிய திட்டங்களைத் தொடங்குவதில் மட்டுமல்லாமல், குடும்ப நிகழ்வு களில் சடங்குகளிலெல்லாம் சமசுக்கிருதத்திலேயே மந்திரங்கள் ஓதுவதும், யாகங்களை வளர்த்து சமசுக்கிருத மந்திரங்களைச் சொல்லுவதுமான நடைமுறையையே உருவாக்கி வருகின்றனர்.. அரசினர்களும், ஆட்சி அதிகாரிகளும் பெரும் பெரும் பண முதலைகளும் இவ்வாறான நடைமுறைகளைச் செய்வதன்வழி,

அதையே மற்றவர்கள் பின்பற்ற வேண்டும் என்பதான பழக்கங்களையும் மக்களிடையே உருவாக்குகின்றனர்..

- குழந்தைகளுக்குப் பெயரிடுவது, அரசின் நலத்திட்டங்களுக்குப் பெயரிடுவது, நிறுவனங்களுக்குப் பெயரிடுவது என்பதான அனைத்துப் பெயர் சூட்டல்களையும் சமசுக்கிருதத்திலேயே செய்வதான அதிகார நடைமுறையைப் பார்ப்பனிய வெறியர்கள் தங்கள் ஆட்சி அதிகார வலிமையின் மூலமாக நிறுவி வருகின்றனர்..

ஆக, இவைபோன்ற எண்ணற்ற திட்டங்களையும் இந்திய அரசும் பார்ப்பனிய வெறியர்களும் தொடர்ந்து செய்து வருகின்றனர். அவற்றின் மூலம் சமசுக்கிருத, பார்ப்பனிய அதிகாரங்களைத் தக்கவைத்துக் கொள்கின்றனர்.

இந்நிலையில் தமிழர்களின் அடிப்படை வாழ்வுரிமைக்காகச், சமன்மை உணர்வைத் தமிழர்கள் காத்துக்கொள்வதற்காகத் தமிழையும் தமிழரையும் அதிகாரம் வாய்ந்த செயல்படுத்தங்களில் ஈடுபடுத்துகிற அடிப்படையான நிறுவன முயற்சிகளை நிறுவுதல் வேண்டும்.

தமிழை அனைத்து நிலைகளிலும் அதிகாரப்படுத்துவதற்குத் திட்டமிட்ட போராட்டங்கள் மட்டும் போதுமானவையாகிவிடாது.. கல்வி நிறுவனங்கள், வழிபாட்டுக் கூடங்கள், சிறுதொழில் - பெருந் தொழிற்கூடங்கள், ஊடகத்துறை - என அனைத்து நிலைகளிலும் நிறுவனங்களை அமைத்துச் செயல்பட வேண்டிய தேவை மிகவும் முகாமையான நிலையில் உள்ளது..

புதிய தமிழகத்தைப் படைக்க புதிய முயற்சிகள், உத்திகள் தேவை.

நாளைய விடுதலைத் தமிழ்த் தேசத்தில் அனைத்தையும் பார்த்துக் கொள்ளலாம் எனப் போராட்டங்களை மட்டும் முன்னிறுத்திக் கொண்டு தமிழர்கள் வாளாய் இருந்தோமானால் காலத்தையும் அதிகாரங்களையும் நாம் இழந்து போவோம்..


எனவே,

கடந்தகால இழப்புகளைப்போல எவற்றையும் இழந்துவிடாமல், அதிகாரம் கொண்ட தமிழிய நிறுவனங்களையும், தமிழ் நிறுவனங்களையும் தமிழ்த்தேசிய அரசியலுக்கு அடித்தளங்களாய் அமைப்போம்!

புதிய தமிழ்க் குமுகமே!

புதிய தமிழ் வரலாற்றைப் படைப்போம்! வாருங்கள்...

•



# காஷ்மீர் மதவெறி ஆள்கிறது மனிதம் வீழ்கிறது

• **ஆரூர் புதியவன்**

*பூலோக சொர்க்கம் என்று போற்றப்படும் காஷ்மீரின் மக்கள் - ஆதிக்க வெறிகொண்ட ஆட்சியாளர்களால் அனுபவிக்கும் சொல்லொணாக் கொடுமைகள் குறித்து யாரேனும் கவலையுற்றாலோ, கண்ணீர் விட்டாலோ, கவிதைவடித்தாலோ, கட்டுரை எழுதினாலோ அவருக்கு "தேசத்துரோகி" என்ற முத்திரை, ரத்தத்தால் குத்தப்படும்.*

*காஷ்மீர் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை ரசித்து, மகிழும் சேடிச சேவுகமணிகளைத் தேசியமாமணி என்ற பாசிசம் கொண்டாடும்.*

*அண்மையில் (13.3.2020) 7 மாதங்களாகக் காஷ்மீரில் சிறை வைக்கப்பட்டிருந்த தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவரும், காஷ்மீரின் முன்னாள் முதல்வரும், தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினருமான ஃபருக் அப்துல்லா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.*

*இவரைப்போலவே பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ்* (Basic Security Act) *கைது செய்யப்பட்ட முன்னாள் முதல்வர்களான உமர் அப்துல்லா, மஹபூபா முப்தி உள்ளிட்ட தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை.*

நாடறிந்த தலைவர்களுக்கே இந்தக் கொடுமை என்றால் சாதாரண மக்கள் அனுபவித்துவரும் அசாதாரணக் கொடுமைகள் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அளவுக்கு வன்மமும், கொடூரமும் நிறைந்தவை.

உலகிலேயே காஷ்மீரில் மட்டும் ஒரு சங்கம் உள்ளது. அதன்பெயர் “காணாமல்போன குழந்தைகளின் பெற்றோர் சங்கம்”. பூவுலகில், பொய்மை அரசியலால் வஞ்சிக்கப்பட்ட சாவுலகமாகச் சதாரணம் பட்டுக்கொண்டிருக்கும் காஷ்மீரின் துயரங்களை உலகம் கண்டுவிடாதபடியும், கண்டு வெகுண்டு விடாதபடியும், ------ உதவுகின்றன. தேசியப் படுதாக்கள்.

ஜனவரி 1989 முதல் 2016 வரை காஷ்மீரில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 94.391 பேர். கைம்பெண்களாக்கப்பட்டப் பெண்களின் தொகை 22,816பேர். பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட பெண்களின் எண்ணிக்கை 10,193பேர் என்று காஷ்மீர் ஊடகச் சேவையகம் புள்ளிவிவரம் தருகிறது. பதிவுக்கு வராத பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை இதை விடவும் அதிகமாகவே இருக்கும்.

2011ஆம் ஆண்டு காஷ்மீர் மனித உரிமை ஆணையம், வடக்குக் காஷ்மீரின் பாரமுல்லா, பண்டியூர், குப்வாரா மாவட்டங்களில் 38 இடங்களில் 2,730 அடையாளம் காணப்படாத சடலங்கள் புதைக்கப்பட்ட தகவலை அம்பலப்படுத்தியது.

இந்தச் சடலங்கள் அடையாளம் தெரியாத பயங்கரவாதிகளுடையவை என்று வாய்மையே வடிவான(?) அரசப்படையால் அடையாளமிடப்பட்டன.

இறந்தவர்களை ஏன் பயங்கரவாதிகளாக்குகிறார்கள்? விருதுகளும், பதவி உயர்வுகளும் வேண்டுமல்லவா, அதற்காகத்தான்!

15 பேருக்கு ஒரு வீரர், நூறு மீட்டருக்கு ஒரு வீரர் என ராணுவம் குவிக்கப்பட்ட காஷ்மீரில் எந்த வீட்டிலும் வீரர்கள்(?) புகுந்து எதுவேண்டுமானாலும் செய்யலாம், யாரையும் தூக்கிச் செல்லலாம். இதைக் கொடுமை என்று கூறுவதினால் நீங்களும் ஒரு தேச விரோதியாக ஆக்கப்படலாம்.

ஆயுதப்படை சிறப்பு அதிகாரச் சட்டம் (AEFSPA - Armed Forces Special Power Act) அங்கே நடைமுறையில் இருக்கிறது. அதன் குறைந்தபட்ச தண்டனையே மரண தண்டனைதான். யாரையேனும் பயங்கரவாதி என்று படையினர் சந்தேகித்தாலே போதும்; கொன்றுவிடலாம்.

இந்திய ஒன்றியத்துடன் காஷ்மீர் இணைந்தபோது, “பாதுகாப்பு, நாணயச் செலாவணி, வெளியுறவு, மக்கள் தொடர்பு” ஆகிய நான்கு

*கூறுகளுக்கான உரிமை மட்டுமே இந்திய அரசுக்கு, மீதி அனைத்து உரிமைகளும் காஷ்மீர் நாடாளுமன்றத்திடமே இருக்கும் என்று ஒப்பந்தம் செய்திருந்தது.*

*இந்திய அரசமைப்புச் சட்டத்தில், காஷ்மீரின் இவ்வுரிமை குறித்து, கோபால்சாமி அய்யங்காரால் எழுதப்பட்ட 370வது பிரிவு சேர்க்கப்பட்டது. காஷ்மீரின் முதல்வர் ஷேக் அப்துல்லாவும், அவருக்கு அடுத்து வந்த பக்ஷி குலாம் முஹம்மதும் பிரதமர் என்றே அழைக்கப்பட்டனர்.*

*அதன்பிறகு காஷ்மீரின் சிறப்புரிமை மட்டுமல்ல, காஷ்மீரிகளின் வாழ்வுரிமைகள் எப்படி எல்லாம் அரசியல் சூதாடிகளால் அலங்கோலமாக்கப்பட்டது என்பது நெடிய வரலாறு.*

*இந்திய நாட்டில் நாகலாந்து, மணிப்பூர் உள்ளிட்ட பல மாநிலங்களுக்குச் சிறப்புத் தகுதி இருக்கும் நிலையில், காஷ்மீரின் சிறப்புத் தகுதியை மட்டும் நீக்க வேண்டும் என்பதை மதவெறி கொண்ட சங்பரிவாரத்தின் அரசியல் பிரிவான பா.ஜ.க தனது அரசியல் இலட்சியங்களைக் கொண்டு செயல்பட்டு வந்தது.*

*அதை 2019இல் ஆட்சியைப் பிடித்த பா.ஜ.க, காஷ்மீரின் சிறப்புத் தகுதியைத் தில்லி இந்திய அரசமைப்புச்சட்டத்தின் 370 விதியைப் பயன்படுத்திப் படுகொலை செய்தது. காஷ்மீரை மூன்று ஒன்றியப் பகுதிகளாகக் கூறு போட்டது.*

*வரலாறு காணாத வன்முறை காஷ்மீர் மக்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்டது. பா.ஜ.க-வுடன் கூட்டணியில் இருந்த காஷ்மீர் தலைவர்களும் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டனர்.*

*அலைபேசி, இணையத் தொடர்புகள் மாதக் கணக்கில் துண்டிக்கப்பட்டது.*

*உணவில்லை, மருந்தில்லை, தகவல் தொடர்பில்லை, மின்சாரமில்லை. இப்படி ஏராளமான சிக்கல்கள். ஆனால், மத்திய மதவாத அரசு மனமிரங்கவில்லை. காரணம், காஷ்மீர் மக்கள் விடுதலையின் காதலர்கள், தேசிய இன உணர்வு மிக்கவர்கள். மானத்தை உயிராய்க் கருதுபவர்கள். அனைத்துக்கும் மேலாக அவர்கள் முஸ்லீம்கள்.*

*எனவே அவர்கள் சாவதுபற்றி காவிவெறி கவலைப்படாது. யாரேனும் கவலைப்பட்டால் அவர்களை தேசவிரோதிகள் என்று கூறத் தயங்காது.*



நேர்காணல்...

# ஆய்வறிஞர் வீ.அரசு அவர்களுடன்...

## • எனது பிறப்பு, வளர்ந்த சூழல், கல்வி

கல்லணைக் கால்வாயின் ஒரு பிரிவான புதுஆற்றங்கரை, மேலத்தஞ்சையில் உள்ள வடக்கூர் என்பது நான் பிறந்தஊர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பாசன வசதி பெற்று, கடந்த பத்து ஆண்டுகளாகப் பாசன வசதி இழந்த ஊர்களில் ஒன்று. எனது குடும்பம் சிறு விவசாயக் குடும்பம், எங்கள் ஊரில் இருக்கும் இடைநிலைப் பள்ளி, அருகில் உள்ள ஈச்சங்கோட்டை என்னும் ஊரில் உயர் நிலைப்பள்ளி, பூண்டி, புட்பம் கல்லூரியில் புகுமுக வகுப்புமுதல் முதுகலைவரை பயின்றேன். சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் ஆய்வியல் நிறைஞர் (எம்ஃபில்), உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் முனைவர் (பி.எச்.டி) பட்டம் ஆகியவற்றை முடித்தேன்.

எங்கள் ஊர், காங்கிரசின் செல்வாக்கிலிருந்து விடுபட்டுத் திராவிட இயக்கக் கட்சிகள் செல்வாக்கு செலுத்திய ஊர். இளம் வயதிலேயே திராவிட இயக்கச் செல்வாக்குடன் வளர்ந்தவன் நான்.

- **பகுத்தறிவு மற்றும் முற்போக்குக் கருத்தியலுக்கு வந்த பின்னணி.**

உயர்நிலைப் பள்ளியிலேயே பெரியார் எனக்கு அறிமுகமானார். எங்கள் உயர்நிலைப் பள்ளியில் பயின்ற மாணிக்கவாசகம் எனும் தோழரை, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த மாணவர்கள் அடித்து மண்டையை உடைத்தனர். வழியும் இரத்தத்தைத் துடைத்துக்கொண்டே அவர் மாணவர்கள் மத்தியில் பேசினார். அவரிடம் நான் தொடர்பு கொண்டேன். அவர் மார்க்சிய லெனினிய இயக்கத்தில் செயல்படுபவர் என்பதைப் பின்னர்த் தெரிந்துகொண்டேன். அவர் இப்போதும் தலைமறைவு வாழ்க்கையில் இருக்கிறாரோ என்று கருதுகிறேன்.

நான் கல்லூரிக்கு வந்தபின் அவருடன் தொடர்பு நெருக்கமானது. கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஊரில் இளைஞர் நற்பணி மன்றம் தொடங்கி, ஊரின் பொதுவேலைகள் (திருமண வீடு, இறப்பு வீடு போன்ற நிகழ்வுகள்) அனைத்தையும் செய்தோம். மார்க்சிய அமைப்புகளைச் சேர்ந்தவர்களை அழைத்து வந்து இரவு நேரங்களில் வகுப்பு எடுக்கச் செய்தோம். ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த எனது நண்பர் ஒருவரை மிதிவண்டியில் பின்புறம் உட்கார வைத்து ஊரில் சுற்றி வந்தோம். அப்போது எங்கள் ஊரில் ஒடுக்கப்பட்ட சாதி மக்கள் சைக்கிள் ஓட்டிச் செல்லக்கூடாது எனும் சட்டம் ஊர்ப் பஞ்சாயத்தில் இருந்தது. மாட்டு வண்டியில் உட்கார்ந்து செல்லக்கூடாது; தோளில் துண்டு போடக்கூடாது, செருப்புப் போடக்கூடாது (அறுபதுகளின் இறுதி எழுபதுகளின் தொடக்கம்) எனும் நிலைகள் ஒடுக்கப்பட்டவர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த ஊர் எங்கள் ஊர். அதற்கு எதிரான போராட்டத்தை எங்கள் மன்றம் செய்தது. புலவர் படித்த எங்கள் நண்பன் இந்த நிகழ்வுகளால் அவமானப்படுத்தப்பட்டான். “பறையன் வீட்டிலே போய் கல்யாணம் பண்ணிக்கோடா” என்று அவனின் பெற்றோர்களே கூறினர். அவன் மனம் உடைந்து தற்கொலை செய்துகொள்ளும் நிலைக்குச் சென்று பின் மீண்டுவரும் நிலைக்கு அன்றைக்கு நாங்கள் நடத்திய போராட்டம் இருந்தது. ஊரில் கள்ளச் சாராயத்தை ஒழித்தோம். இந்தத் திட்டம் பின்னர் ஒரத்தநாடு காவல்நிலைய காவல் அதிகாரி ஒருவரால் “ஒரத்தநாடு திட்டம்” என்று கள்ளச்சாராய ஒழிப்புக்காக அடையாளப்படுத்தப்பட்டது. நான் எங்கள் ஊரில் இருக்க முடியாத நிலை ஏற்பட்டது. தஞ்சாவூரில் மாமா வீட்டில் தங்கத் தொடங்கினேன். பள்ளியில் பெரியார் அறிமுகம்; கல்லூரியில் இடதுசாரி சிந்தனைகள் அறிமுகம் என்று வளர்ந்தவன் நான். கல்லூரிப் படிப்பின் தொடக்க காலத்தில் பேராசிரியர்

இரா.இளவரசு அவர்கள் மூலம் 'தமிழியக்கம்' எனும் அமைப்பில் தொடர்பு ஏற்பட்டது. அப்போது இராஜூ எனும் என் பெயர் 'அரசு' என ஆகியது. பின்னர்ச் சட்டப்படி 'அரசு' என்றே பெயர் மாற்றிக் கொண்டேன். புகுமுக வகுப்பில் இராஜூ, பட்ட வகுப்பில் "அரசு" ஆனேன். இடதுசாரிச் சிந்தனை மரபோடு செயல்பட்ட அய்யப்பன், இரவிச்சந்திரன் ஆகிய தோழர்களோடு கல்லூரிக் காலங்களில் இடதுசாரி அமைப்பு வேலைகளில் ஈடுபட்டோம்; மாணவர்களிடம் பரப்புரை செய்தோம். முதுகலை பயிலும் காலத்தில் மங்கையோடு தொடர்பு உருவானது.

## • தோழர் ஜீவாவின் ஆக்கங்களைத் தொகுத்த அனுபவம்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்டு)யில் பணியாற்றிய தோழர் ருக்குமணி அம்மள் என்பவர் வடசென்னையில் வாழ்ந்தவர். 1930களிலேயே கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஆனவர். அவருக்கு மங்கையை ரொம்பப் பிடிக்கும். அவருடைய சேகரிப்பில் 1939முதல் 1944 முடிய வெளிவந்த ஜனசக்தி இதழ்கள் இருந்தன. அவற்றை எங்களிடம் கொடுத்தார். கவிஞர் தமிழ்ஒளியின் நண்பரான பாவலர் பாலசுந்தரம் அவர்களிடம் 1937ஆம் ஆண்டு ஜனசக்தி இதழ்கள் இருந்தன. அவருடைய மகனும் எனது நண்பருமாகிய பேரா. பா. மதிவாணன் மூலம் அவ்விதழ்களைப் பெறமுடிந்தது. இந்த இதழ்கள் கைவசம் இருந்ததால் ஜீவா நூற்றாண்டு வரும்போது, ஜீவா எழுத்துகளை இவ்விதழ்கள் வழி தொகுத்து வெளியிடலாம் என்று கருதினேன். இதற்குத் **தோழர் நல்லக்கண்ணு** மிகுந்த ஆதரவு தந்தார். பின்னர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி பாலன் இல்லத்தில் இருந்த நூலகத்தில் பிற ஆண்டுகளின் ஜனசக்தி இதழ்களைப் பார்க்கக் கிடைத்தது. எனவே 1937 - 1963 ஆண்டுகளில் வெளிவந்த ஜனசக்தி இதழ்களை எடுத்து, ஜீவாவின் ஆக்கங்கள், ஜனசக்தி தலையங்கங்கள் ஆகியவற்றைப் புகைப்படக் கருவியில் படம் எடுத்தோம். பின்னர் அதனைக் கணிப்பொறியில் இட்டு, தேவையற்ற பகுதிகளை நீக்கினோம். எஞ்சிய பகுதியை கணிப்பொறியிலிருந்து அச்சிட்டு எடுத்தோம், அவற்றைப் பின்னர் புதிதாக அச்சிட்டோம். கணிப்பொறியில் ஏற்றி, புத்தக வடிவமாக்கி அச்சிட்டோம். எனது ஆய்வு மாணவர்கள் குப்புசாமி, பிரேம் குமார் ஆகியோர் என்னோடு உழைத்தவர்கள். சித்ரா தட்டச்சு செய்தார். நியுசெஞ்சுரி புத்தக நிறுவனம் வெளியிட்ட நான்கு தொகுதிகளில் இரண்டு தொகுப்பு ஜீவாவின் ஆக்கங்கள், இரண்டு தொகுதிகள் ஜனசக்தி தலையங்கங்கள் ஏ4 அளவில் 7500 பக்கங்கள்.

ஜீவா பற்றியும் இந்தியக் கம்யூனிஸ்ட் இயக்கம் குறித்தும் அறிய உதவும் அரிய ஆவணம் அவை. உடல் நலம் சீர்கெடும் நிலைக்கு உழைத்த அனுபவம் செழுமையானது. ஜீவா அந்தத் தொகுதிகளில் வாழ்கிறார். அந்த அனுபவம் மிகவும் செழுமையானது.

- **தாங்கள் ஆவணப்படுத்தியுள்ள சென்னை இலௌகிக சங்கம் பற்றிக் கூறுங்கள்**

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்கப் பகுதிகளில் பதினேழாம் நூற்றாண்டில் கிறித்தவ மத எதிர்ப்பு இயக்கம் உருவானது. புரூனோவை நெருப்பில் வைத்து கொளுத்திய நிகழ்வோடு இவ்வியக்கம் எழுச்சி பெற்றது. இவ்வியக்கத்தின் தாக்கம் இலண்டன் நகரில் பெரும் எழுச்சியாக வடிவம் பெற்றது. 'இலண்டன் செக்யுலார் சொசைட்டி' எனும் அமைப்பு உருவானது. இவ்வமைப்பின் கிளை 1878இல் சென்னையில் உருவானது. அந்த அமைப்பு முதலில் சென்னை சுயாக்கியானிகள் சங்கம் - என்றும் பின்னர் சென்னை இலௌகிக சங்கம் - என்றும் அழைக்கப்பட்டது.

இவ்வியக்கம் "தத்துவ விவேசினி" Thinker என்ற இரு இதழ்களை முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் நடத்தியது. அவ்விதழ்களை ஆவணப்படுத்தி ஆறு தொகுதிகளாக வெளியிட்டுள்ளேன். நான்கு தமிழ், இரண்டு ஆங்கிலம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான நாத்திக இயக்கம் இது. இலண்டன் பிரித்தானிய நூலகத்தில் இவ்வியக்கம் தொடர்பான விவரங்களைச் சேகரித்தேன். மிக விரைவில் 'சென்னை இலௌகிக சங்கம்: வரலாறும் விளைவுகளும்' எனும் பெரிய நூல் ஒன்றைக் கொண்டு வருவேன். தமிழ்ச் சமூகத்திற்கு எனது சிறிய பங்களிப்பாக இதனைக் கருதுகிறேன். இவ்வியக்கம் தொடர்பாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இருநாள் கருத்தரங்கம் ஏற்பாடு செய்தேன். அந்தக் கருத்தரங்க கட்டுரைகளை **மாற்றுவெளி** இதழ் 14 இல் வெளியிட்டேன்.

- **புதுமைப்பித்தன் குறித்த மதிப்பீடு**

புதுமைப்பித்தன் கதைகளை அவர் எழுதிய இதழ்கள்வழி மூன்று தொகுதிகளாகப் பதிப்பித்தேன். 'மணிக்கொடிக் கதைகள்', 'ஊழியன் மற்றும் பிற கதைகள்', 'கலைமகள் மற்றும் பிற கதைகள்', வ.ரா. வீட்டிலிருந்து எனக்கு மணிக்கொடி இதழ்கள் கிடைத்தன. மணிக்கொடியில் மிக அதிகமான கதைகள் எழுதியவர் புதுமைப்பித்தன். மூன்று தொகுதிகளுக்கும் முறையே ஆதிமூலம், சந்துரு, மருது

ஆகியோர் வரைந்த புதுமைப்பித்தன் படங்களை அட்டையாக அச்சிட்டோம். அலைகள் பதிப்பகத்தின் சி. இளங்கோ இதற்கு உதவினார். பின்னர் அடையாளம் பதிப்பகம் வழி புதுமைப்பித்தனின் அனைத்துக் கதைகளையும் **இதழ்வழி முழுப்பதிப்பு** என்றும் பிறகு இரண்டாம் பதிப்பாக முழுக் கதைகளையும் 'பல்பரிமாணக் கதைகள்', 'எளிய கதைகள்', 'தழுவல் கதைகள்' என்று பிரித்துப் பதிப்பித்தேன்.

இவ்வகையில் புதுமைப்பித்தன் கதைகளுக்குள் பயணம் செய்த அனுபவம் செழுமையானது. தொடர்ந்து 'இருபதாம் நூற்றாண்டுச் சிறுகதைகள் நூறு' என்று தேர்வு செய்து பதிப்பித்தோம், நூறு படைப்பாளிகளின் வாழ்க்கைக் குறிப்புகளோடு வெளிவந்துள்ள இத்தொகுப்பிற்கு எழுதிய முன்னுரையில் "தமிழ்ச் சிறுகதை வரலாற்றை புதுமைப்பித்தனில் இருந்துதான் தொடங்க வேண்டும். இதற்குமுன் தமிழில் சிறுகதை எழுதியவர்களாகக் கூறப்படுவோர் எழுதியவை சிறுகதை வடிவில் அமைந்தவை இல்லை" என்று பதிவு செய்துள்ளேன். தமிழில் புனைவு உருவாக்கம், அச்சுப் பண்பாட்டின் வளர்ச்சி, தமிழில் உருவான வாசிப்பு மரபு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, தர்க்க மரபில் இந்த மதிப்பீட்டைச் செய்துள்ளேன். புதுமைப்பித்தனுக்கு முன்பு தமிழில் சிறுகதை என்று சொல்வது தவறு என்பது என் தரப்பு மதிப்பீடு. தமிழின் முதன்மையான கலைஞர்களில் ஒருவராகப் புதுமைப்பித்தன் வரலாறு முழுக்க இருப்பார். அவரை வாசிப்பது அரிய அனுபவம்.

- **தமிழ் இலக்கியத்தின்மீது ஈழ இலக்கியத்தின் தாக்கம் குறித்த மதிப்பீடு**

ஈழத்தில் உருவான பக்தி இலக்கிய மரபுக்கும், தமிழக மரபுக்கும் நெருக்கமான உறவுண்டு. ஆறுமுக நாவலர் இரு நிலப்பகுதிக்கும் உரியவராகச் சமமாக மதிக்கப்பட்டார். இதில் பின்னர் இராமலிங்க வள்ளலாரை முதன்மைப்படுத்தி நடந்த அருட்பா- மருட்பா உரையாடல் என்பது சாதிய சக்திகளால் முன்னெடுக்கப்பட்டது. இராமலிங்கர் வெள்ளாளர் சாதியைவிட தாழ்ந்தவர் என்பதால், அவரால் அருட்பாக்களைப் பாட முடியாது என்னும் ஆதிக்கச் சாதி ஊகம் அது. பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை இருநிலப்பகுதிகளின் இலக்கியம் மூலம் நடந்த கொண்டுகொடுத்தல் இயல்பானது. கிறித்தவ தொண்டூழிய நிறுவனங்கள் மூலம் ஈழமண்ணில் பல புத்தாக்கங்கள் உருவாயின. அந்த அளவிற்குத் தமிழகத்தில் இல்லை. பதினாறாம் நூற்றாண்டுமுதல் ஆங்கிலக் கல்விக்கு அறிமுகமான சமூகம் யாழ்ப்பாணச் சமூகம்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் உருவான புனைகதைகளின் தாக்கம் ஈழத்தில் ஏற்பட்டது. தொடக்கக்கால நாவலாசிரியர்களில் ஒருவரான செ. கணேசலிங்கம், பச்சையப்பன் கல்லூரி மு.வ.வின் மாணவர். அவரின் நாவல்களின் மொழியில், மு.வ. நாவல்களின் மொழித்தாக்கம் உள்ளது. கருத்து நிலையில் மு.வ. விலிருந்து வேறுபட்டவர். ஈழத்தில் தொடக்கக் காலத்தில் புனைகதை எழுதியவர்கள் தமிழக எழுத்தாளர்களின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள். பின்னர் எஸ். பொன்னுத்துரை (எஸ்.பொ.) காலத்தில் அது மாறியது. அவர்களுக்கான புனைமொழி உருவானது.

தமிழ்க்கவிதை மொழியில் 1980களுக்குப் பிற்பட்ட ஈழக் கவிஞர்களான புதுவை இரத்தினதுரை, நுஃமான், சேரன், ஜெயபாலன் ஆகிய பிறரின் தாக்கம் தமிழகத்தில் வளமானது. இக் கவிஞர்களின் தொகுதிகள் தமிழக இளம் கவிஞர்களிடத்தில் ஏற்படுத்திய செல்வாக்கு மிகுதி. தமிழகப் பெண் கவிஞர்களிடத்திலும் ஈழப்பெண் கவிஞர்களின் தாக்கம் உருவானது. நவீன தமிழ்க்கவிதை என்பது ஈழக்கவிதைகள் வழிதான் அடையாளம் பெறுகிறது. ஈழப்போர் அதற்கொரு முதன்மையான காரணம். ஈழக் கவிஞர்களுக்குக் கிடைத்த அனுபவம், தமிழ்நாட்டுக் கவிஞர்களுக்கு இல்லை. பார்ப்பனீய மரபு சார்ந்த நவீன தமிழ்க்கவிதை மரபை வளமாக மாற்றியதில் ஈழப் போர்க் கவிதைகளுக்கு முதன்மையான பங்குண்டு.

- **கைலாசபதி, சிவத்தம்பி மற்றும் ஈழ ஆய்வாளர்களின் அணுகுமுறை குறித்த பார்வை.**

ஈழத்தைச் சேர்ந்த சி.வை. தாமோதரம் பிள்ளை, கனகசபை பிள்ளை, நா. கதிரைவேற் பிள்ளை, விபுலானந்தர், சி. கணபதிப்பிள்ளை, தனிநாயகம் அடிகள், சு. வித்தியானந்தன் என்ற வளமான ஆய்வு மரபுண்டு. தமிழகத்தில் இம் மரபுக்கு இணையான மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, மறைமலையடிகள், ச. வையாபுரிப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்ற மரபுண்டு. இம்மரபு மேலும் வளர்ந்து கொண்டே வருகிறது. இவ்விரு மரபுகளிலிருந்து வேறுபட்ட ஆய்வு அணுகுமுறைகளில் பேராசிரியர்கள் கைலாசபதி, கா. சிவத்தம்பி மற்றும் எம்.ஏ. நுஃமான் ஆகியவர்களால் ஈழத்தில் மேற்கொள்ளப் பட்டதைக் காண்கிறோம். இவர்கள் மார்க்சியம் எனும் கருத்துநிலையை அடிப்படையாகக் கொண்டவர்கள். தமிழகத்தில் கல்வித்துறை, குறிப்பாகப் பல்கலைக்கழகங்கள் சார்ந்து இம்மரபு உருவாகவில்லை. ஆனால் ஈழத்தில் உருவானது. அதில் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோர்

மார்க்சியக் கருத்துநிலை சார்பாளர்கள் என்பதும் அதிலிருந்தே தமிழியல் ஆய்வை பல்கலைக் கழக மட்டத்தில் முன்னெடுத்தவர்கள் என்பதும் முதன்மையாகக் கவனத்தில் கொள்ளவேண்டிய செய்தி. எனவே, தமிழில் மார்க்சியக் கருத்துநிலை சார்ந்து பல்கலைக் கழக மட்டத்தில் ஆய்வு மரபை உருவாக்கியவர்கள் கைலாசபதியும் சிவத்தம்பியும் ஆவர். இவர்களின் தாக்கம் தமிழகத்தில் மார்க்சிய கருத்துநிலை சார்ந்து செயல்பட்டவர்களிடத்தில் மிகுதி. என் தலைமுறையைச் சார்ந்த மார்க்சியப் பின்புலத்தில் ஆய்வு செய்யவந்த அனைவருக்கும் இவ்விருவர்களே முன்னோடி.

- **புலம்பெயர் இலக்கியம் பற்றிய பதிவுகள்**

*1983 கருப்பு ஜூலை, தமிழர் இனப்படுகொலை வன்முறைக்குப் பின்பு, ஈழத்தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் உலகம் முழுவதும் அகதிகளாகக் குடியேறினர். அகதி வாழ்க்கையின் கொடுமைகளைப் பதிவு செய்தனர். தொண்ணூறுகளில் தமிழர்கள் வாழும் ஒவ்வொரு நாட்டில் இருந்தும் இதழ்கள் வெளிவந்தன. அவற்றில் புலம்பெயர் அகதி வாழ்க்கை குறித்தும் தாயகத்தில் நடைபெறும் இன அழித்தொழிப்பு குறித்தும் கவிதை, சிறுகதை, கட்டுரைகள் என வெளிவந்தன. 'அம்மா', 'ஈழம்', 'உயிர்' 'நிழல்', 'உயிர்ப்பு', 'எக்ஸில்', 'ஓசை', 'காலம்', 'காந்தள்', 'களரி', 'தாயகம்', 'நட்புறவுப் பாலம்', 'நாழிகை', நிர்மாணம்', 'புதுயுகம் பிறக்கிறது', 'மனிதம்', 'மானுடம்', 'மூன்றாவது மனிதன்' எனப் பல இதழ்கள் தமிழர் வாழும் நாடுகளிலிருந்து வெளிவந்தன. இந்தச் சூழலில்தான் புலம்பெயர் இலக்கியம் எனும் சொல்லாட்சி உருவானது. இதன் பொருள் குழப்பமானது. புலம்பெயர்ந்து சென்றவர்கள் எழுதும் இலக்கியமா? புலத்தில் வாழும்முறை குறித்த இலக்கியமா? என்பதே அது. சுமார் பதினைந்து (1990-2005) ஆண்டுகள் நடைமுறையில் இருந்த இந்த சொல்லாட்சி, இப்போது பெரிதும் பேசப்படுவதில்லை.*

- **திராவிட இயக்கம், தமிழ் இலக்கியத்தின்மீது தாக்கம் ஏற்படுத்தியுள்ளதா ? என்பது குறித்த மதிப்பீடு**

*திராவிட இயக்கம் தமிழ்க் கவிதையில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. "வானம்பாடி" இதழ்வழி உருவான கவிஞர்களை அவ்வகையில் மதிப்பிடலாம். பாரதிதாசனின் தாக்கம் என்பதே திராவிட இயக்கத் தாக்கம் தானே. பெருஞ்சித்திரனார் கவிதைகள் திராவிட இயக்க மரபில் உருவானவை. புனைகதைகளை திராவிட இயக்கத்தில் இருந்தவர்கள் எழுதினார்கள். அவை பெரிதும் அங்கீகாரம் பெறவில்லை.*

பொதுவெளியில் திராவிட இயக்கத் தாக்கம் புனைகதைகளில் இல்லை. திரைப்படத்துறை, ஒரு கட்டத்தில் நாடகத்துறை, இதழியல் துறை ஆகியவற்றில் திராவிட இயக்கத்தின் தாக்கம் வளமானது.

திராவிட இயக்கத்தின் தாக்கம், ம.பொ.சி முன்னெடுத்த தமிழ்த்தேசிய வடிவில் உருவான தாக்கம் பற்றிச் சொல்லலாம். தெ.பொ.மீ, மு.வ., மா.ரா.போ. குருசாமி, ந. சஞ்சீவி - என்ற பல பேராசிரியர்கள், ம.பொ.சி பேசிய தமிழ்த்தேசியத்தில் ஈடுபாடு கொண்டிருந்தனர். இவர்களின் ஆக்கங்களில் அதன் தாக்கம் உண்டு. அதனையும் திராவிட இயக்கத் தாக்கம் என்று கூறமுடியும். குறிப்பாக மு.வ.வின் புனைகதைகள்.

- **தலித் இலக்கியம் தமிழுக்கு வழங்கிய கொடை என்ன ?**

1980களின் இறுதியில் தொடங்கி 2000 வரை சுமார் இருபது ஆண்டுகளில், தமிழ்க்கவிதை, தமிழ்ப்புனைகதைகள், தமிழ் ஆவணப்படம், தமிழ்ச் சிற்றிதழ்கள் ஆகியவற்றில், இதுகாலம் வரை உணர்வுபூர்வமாகப் பதிவு செய்யப்படாத சாதிய ஒடுக்குமுறைக்கு ஆளான மக்களின் வாழ்க்கை புதிதாகப் பதிவானது. அது புதியமொழி, நாவல் வடிவத்தில், 1970கள்முதல் பதிவானாலும், மேற்குறித்த காலத்தில்தான் அது கவனிக்கப்பட்டது. இதுவரை சமூக அங்கீகாரம் பெறாத ஒரு எழுத்து மரபுக்கு அங்கீகாரம் கிடைத்தது. அது தமிழுக்குப் புதிது. அதுவே தலித் இலக்கியம் தமிழுக்கு வழங்கிய கொடை என்று சொல்லலாம்.

- **பெண்ணிய நோக்கில் எழுதப்படும் படைப்புகள் குறித்த அணுகுமுறை**

ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூறுகளின் இடைக்காலம் முதல் பெண்ணிய ஆக்கங்கள் குறித்த உரையாடல் பொதுவெளிக்கு வந்துள்ளன. தலித்தியம் போன்றே பெண்ணியமும் தமிழ்ச் சூழலில் தனித்துப் பேசப்படவில்லை. இப்போது அதை ஒரு பகுதியாக பேசவேண்டும் என்னும் உணர்வுத் தளம் உருவாகியுள்ளது. பெண்ணிய படைப்புகளைக் கொண்டாட வேண்டும். பல தரப்புகளிலும் அது குறித்துப் பேச வேண்டும். உருவாகியுள்ள பெண்ணிய ஆக்கங்களைப் பல தொகுதிகளாகத் தமிழில் தொகுக்க வேண்டும். ஆங்கிலத்தில் அவ்வாறு நிகழ்ந்துள்ளது. பெண்ணிய எழுத்து, நமது எழுத்து மரபின் ஒரு பாதியாகப் பார்ப்பது அவசியம். அந்தத் தன்மை இன்னும் உருவாகவில்லை. ஆணாதிக்கம், பெண்ணிய ஆக்கங்களை மௌனப்படுத்தும் சூழல் இன்னும் முழுதாக நீங்கவில்லை. தமிழ்க்

கவிதையில் பெண்ணியக் கவிஞர்கள் வளமானவர்கள். அக் கவிதைக்கு இணையான இன்னொரு மரபு தமிழில் இல்லை என்றுகூட கூற முடியும். சுமார் இருபதுக்கு மேற்பட்ட பெண்ணியக் கவிஞர்கள் தமிழில் அண்மைக் காலத்தில் எழுதுகிறார்கள். பெண்ணிய அரசியலை முன்னெடுப்பது அவசியம்.

- **நவீனத்துவம் - பின்நவீனத்துவம் - அமைப்பியல் குறித்தக் கருத்துகள்**

மிகவிரிவாக எழுதவேண்டிய செய்திகள் இவை. சுருக்கமாக நான் புரிந்து கொண்ட அளவில் சொல்கிறேன். உலக வரலாற்றில் பொ.ஆ.500 முன் கிரேக்க ரோமானிய பண்பாட்டு மரபுதான் இருந்தது. பின்னர் பொ.ஆ. 1200 வாக்கில் மறுமலர்ச்சி மரபுகள் உருவாயின. தொடர்ந்து தொழிற்புரட்சி, பிரெஞ்சுப் புரட்சி ஆகியவை. பதினெட்டாம் நூற்றாண்டளவில் மறுமலர்ச்சி இயக்கங்கள் உருவாயின. அறிவியல் கண்டுபிடிப்புகள் உலகத்தின் உற்பத்திமுறையை மாற்றின. உற்பத்தி கருவி மாற்றத்தின் மூலம் உலகில் புதுவகையான மூலதனம் உருப்பெற்றது. இதனால் சமூகத்தில் புதிய புதிய மாற்றங்கள் படிப்படியாக உருவாயின. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இம்மாற்றம் ஐரோப்பிய உலகில் நவீனத்துவத்தைக் கொண்டு வந்தது. மூன்றாம் உலக நாடுகளில் இருபதாம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் நவீனத்துவம் உருவானது. இதற்குமுன் இருந்த மரபிலிருந்து புதிதான மரபுகள் உருவாயின. இவற்றைப் பின்காலனிய நிகழ்வுகள் என்றும் கூறுவர். தமிழில் இம்மரபு 1930களில் இடம் பெறத்தொடங்கியது. புதுமைப்பித்தன் நவீனத்துவத்தின் குறியீடு.

1960ஆம் ஆண்டுக்குப்பின் பின்-நவீனத்துவம் உருவானது. கலைகள் மற்றும் பண்பாட்டுத் துறையில் இதற்குமுன் இருந்தவற்றிலிருந்து முற்றிலும் வேறுபட்ட மரபுகள் முன்னெடுக்கப்பட்டன. பல்வேறு கோட்பாட்டாளர்கள் உருவாயினர். அதிகாரத்துக்கு எதிரான செயல்பாடாகவும் இது கட்டமைக்கப் பட்டது. பின்நவீனத்துவ மரபு புதிய பண்பாட்டைப் பேசியது. பல்வேறு கலைத் துறைகளில் இதன் தாக்கம் உருவானது. மைய அழிப்பு செய்யப்பட்டு, விளிம்புகளுக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. பின் நவீனத்துவம் முன்னெடுத்த நுண் அரசியல் சார்ந்த கருத்தாடல் அனைத்து வகையான பிரதிகளையும் கட்டவிழ்ப்பு செய்தது. புதிய வாசிப்புமுறை, புதிய எழுத்து முறை, புதிய திரைப்படம், புதிய ஓவியம் என பல துறைகளிலும் அது செயல்பட்டது. தமிழில் பெரிய அளவில் செயல்பட்டதாகக் கூற முடியாது. தமிழில்

தவறாகவும் இது புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது. இது ஒரு அணுகுமுறை; அம்முறையை கையிலெடுப்பவர்களுக்கான அரசியல்பார்வை சார்ந்து அம்மரபு கட்டமைக்கப்படும். இதனை அரசியல் அகற்றல் - என்று முழுமையாகக் கூற இயலாது - புதிய பார்வை என்று புரிந்துகொள்ள வேண்டும்.

அமைப்பியல் முற்றிலும் மொழியியல் மற்றும் மானிடவியல் துறை சார்ந்த தத்துவச் சொல்லாடல். "சசூர்" என்ற மொழியியல் அறிஞர் முன்னெடுத்த குறியீட்டியல் போன்ற துறைகள் இத்துறை சார்ந்த நிகழ்வுகள். மொழியியல், தத்துவம், மானிடவியல் சார்ந்த ஒரு புலமைத் துறையாக அதனைப் புரிந்துகொள்ள வேண்டும். அனைத்துப் பிரதிகளையும் வாசிக்க இம்முறையியல் உதவும். கல்விப்புலம் சார்ந்த புலமைத் துறையாகவே இது செயல்படுகிறது.

- **இடதுசாரிகள் தமிழுக்கு ஆற்றிய பணிகள்**

இடதுசாரிகள் என்ற சொல்லை பொதுவுடைமை இயக்கத்தவர்கள் என்று நான் புரிந்துகொள்கிறேன். 1920முதல் நீண்ட நெடிய வரலாறு இவ்வியக்கத்திற்கு இருக்கிறது. தமிழுக்கு அவர்கள் ஆற்றிய பணிகள் என்று வரையறை செய்துகொண்டு கீழ்க்காணும் செய்திகளைத் தொகுக்கமுடியும்.

சிங்காரவேலர் தொடங்கி தமிழில் தத்துவ மரபு சார்ந்த சொல்லாடல்களை வளர்த்தெடுத்தவர்கள் இவர்கள். பகுத்தறிவு மரபு சார்ந்து சிங்காரவேலர் எழுதியவை தமிழுக்குப் புதியது. இதனால்தான் பெரியார் அவரைக் கொண்டாடினார். ஜீவா தொடங்கி தமிழ்ஒளி வழியாக இடதுசாரிகள் உருவாக்கிய கவிதை மரபு செழுமையானது. எழுபதுகளில் இன்குலாப் போன்ற வீறார்ந்த பல கவிஞர்கள் இந்த மரபில் உருவானர்கள். தொ.மு,சி, ரகுநாதன், நா. வானமாமலை ஆகியோர் தொடங்கி தனித்த ஆய்வு மரபுகளை இடதுசாரிகள் வளர்த்தெடுத் திருக்கிறார்கள். பாரதி பற்றிய ஆய்வில் இடதுசாரிகள் இடம் தனித்தது.

தமிழ்ஒளி காலத்தில் செயல்பட்ட முற்போக்கு எழுத்தாளர் மன்றம், பொதுவுடைமைக் கட்சி சார்ந்து செயல்பட்ட புதுமைக் கலா மன்றம் (1940-1960), கலை இலக்கியப் பெருமன்றம், தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம், மக்கள் கலை இலக்கியக் கழகம் ஆகிய அமைப்புகளின் பங்களிப்பு மிகுதி. 'முன்னணி' 'சாந்தி', 'சரஸ்வதி', 'தாமரை', 'மனிதன்', 'செம்மலர்' ஆகிய வரிசையில் வெளிவந்த இதழ்களின் பங்களிப்பு வளமானது.

புனைகதை, கவிதை, திரைப்படம், நாடகம், ஆய்வு ஆகிய அனைத்துத் துறைகளிலும் இடதுசாரிகள் தடம் பதித்துள்ளார்கள். இந்த வரலாறு இன்னும் முழுமையாகப் பதிவு செய்யப்படவில்லை. விரிவாகப் பதிவு செய்ய வேண்டியத் தேவையுண்டு.

- **செம்மொழித் தமிழாய்வு மையம், தமிழ்ப் பல்கலைக்கழகம், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் செயல்களை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகள்.**

இ.ந்த நிறுவனங்கள் நிர்வாக ரீதியில் சீரழிக்கப்பட்டுள்ளன. இதில் நடுவண் அரசு மற்றும் மாநில அரசு ஆகியவற்றுக்குப் பங்குண்டு. செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்திற்கு இதுவரை இயக்குநர் நியமிக்கவில்லை. திட்டமிட்டு அதனைத் தொடர்ந்து செய்து வருகிறது நடுவணரசு. தமிழுக்கு இந்த வகையான நிறுவனம் வளர்ந்துவிடக்கூடாது என்பதில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். எப்பொழுது இழுத்து மூடலாம் என்பதற்கானத் திட்டங்களைத் தீட்டி வருகிறார்கள். தமிழ்நாட்டின் முதலமைச்சரே அந்த நிறுவனத் தலைவர் என்பதால் அவரது தலையீட்டால் ஏதேனும் செய்யலாம். ஆனால் இன்றைய சூழலில் அதற்கான வாய்ப்புகள் இல்லை. எனவே, வெறும் பெயரளவில் இருந்தும் இல்லாத நிறுவனமே அது. நடுவணரசு தமிழ்மொழி மற்றும் பண்பாடு சார்ந்த நிறுவனங்கள் வளர அனுமதிக்காது.

தமிழ்ப்பல்கலைக்கழகம் கடந்த பல ஆண்டுகளில் ஒரு சிலரைத் தவிர, மற்றைய அனைத்துத் துணைவேந்தர்களும் திட்டமிடுதல், செயல்படுதல் எனும் அடிப்படையில் புரிதல் இல்லாதவர்கள். அரசியல் வாதிகளின் விருப்பம் சார்ந்து, கட்சிப் பதவிபோல் துணைவேந்தர் பதவி கொடுக்கப்பட்டது. அதனால் அந்நிறுவனம் சீரழிந்து கிடக்கிறது. இப்போது நியமிக்கப்பட்டிருக்கும் துணைவேந்தர், சரிசெய்ய முயற்சி செய்கிறார். சரியாகும் என்று நம்பிக்கை இல்லை; ஏனெனில் பல்கலைக் கழக நிர்வாகத்தின் அடிமட்டமே சீர்குலைவுக்குள்ளாகியுள்ளது. மூன்று ஆண்டுகளில் சரி செய்வது சாத்தியம் இல்லை.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், ஆளும் கட்சியின் நேரடிக் கிளைபோன்று செயல்படுகிறது. அம்மா பிறந்தநாள் கொண்டாட்டம் எனும் பெயரில் பெரும் விழாக்களை நடத்தி, கல்வித்துறை தொடர்பற்ற கட்சி செயல்பாடுகளில் ஈடுபட்டு வருகிறார்கள். ஆராய்ச்சி நிறுவனங்களுக்குக் கல்வியாளர்களை இயக்குநர்களாக நியமனம் செய்யும் மரபு இல்லாமல் போனதால், கட்சித் தொண்டர்களான,

கரைவேட்டிக் காரர்கள் இயக்குநராக செயல்படும் அவலம் தொடர்கிறது. இதிலிருந்து எப்போது விடுதலை அடைவோம் என்று தெரியவில்லை. தமிழ்ஆய்வு சார்ந்த பண்பாட்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் மிகுந்த கவலை தருவனவாக உள்ளன. நேரடிக் கட்சித் தலையீடு என்பதிலிருந்து இந்த நிறுவனங்கள் விடுபட்டுக் கல்வியாளர்களின் நேரடிச் செயல்பாடு எதிர்காலத்தில் நிகழுமா? என்ற கேள்வி நம்முன் உள்ளது. தமிழ்ப்பண்பாட்டுச் சீரழிவுகளில் ஒன்றாக இவற்றை நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

- **தனித்தமிழ் இயக்கம் குறித்தப் பதிவு**

தமிழகத்தில் தோன்றிய பண்பாட்டு இயக்கங்களில் தனித்தமிழ் இயக்கத்திற்கு தனித்த இடமுண்டு. மறைமலையடிகள், பாவாணர், பெருஞ்சித்திரனார், இளவரசு என்றதொரு தொடர்ச்சியான ஆளுமைகளின் பங்களிப்பு நேர்மையானது. தமிழ்மொழியில் தேவையில்லாமல் உருவான மொழிக்கலப்பு தடுத்து அணைபோட்டு, நல்ல தமிழ் உருவாக வழிகண்ட இயக்கம். இவ்வியக்க மரபை மதித்த திராவிட இயக்க ஆட்சி அதிகாரம் உருவானதால் பொதுவெளியில் தமிழ்ப் புழக்கம் வளமாகியது. இப்போது மீண்டும் 'நமஸ்காரத்தைக்' கொண்டு வர விரும்பும் பார்ப்பனீய சக்தி உருப்பெறும் சூழலில் இந்த இயக்கத்தின் வலிமையைப் புரிந்துகொள்ள வேண்டும். திராவிட இயக்கத்தின் ஒரு பகுதியான பண்பாட்டு இயக்கம் இது. கோட்பாட்டுப் புரிதல்களில் முரண் இருந்தாலும் இவ்வியக்கத்தைக் கொண்டாட வேண்டும். தனித்தமிழ் இயக்கத்தின் பண்பாட்டுத் தாக்கம் வளமானது. புலமைத்துவ தளத்தில் இவ்வியக்கம் அடிப்படைவாதப் பண்புகளைக் கொண்டிருப்பதாக மதிப்பீடு உள்ளது. இந்தத் தன்மையில் இப்போது மாற்றம் உருவாகி வருகிறது.

- **தமிழ்வழிக் கல்விக்கான தடைகள் யாவை? அவற்றைக் களைந்து முன்னேறுவதுஎப்படி?**

தமிழ் வழிக்கல்வியை அதன்தொடக்கக் காலத்திலேயே நடைமுறைக்கு வராமல் தடுத்தவர்கள் அன்றைய சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இலட்சுமணசாமி முதலியாரும், முதலமைச்சராக இருந்த மீ. பக்தவச்சலமும் ஆவர். சி. சுப்பிரமணியம் தமிழ்வழிக் கல்வியை நடைமுறைப்படுத்தினார். அதனை இழுத்து மூடியவர்கள் மேற்குறிப்பிட்ட இருவர். இரா. நெடுஞ்செழியன் போன்றவர்களும் தமிழ்வழிக் கல்வியில் நம்பிக்கையில்லை இதற்கு அடிப்படை, இவர்களுக்கு இருந்த ஆங்கில மோகம். இந்தி எதிர்க்கும்

பண்பாட்டுப் போரில், தமிழை வளர்ப்பதற்குப் பதிலாக ஆங்கிலத்தை வளர்த்தெடுப்பதில் திராவிட இயக்கத்திற்குப் பங்குண்டு. காலனிய தாக்கமும் பார்ப்பனீய மனநிலையும் கல்வித்துறையில் இன்னும் அதிகார சக்தியாக உள்ளது. தமிழ்ப் பல்கலைக் கழகம் தொடங்கப்பெற்ற ஆண்டுகளில் தமிழ்வழிக் கல்விக்கான பாடப்புத்தங்கள் உருவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் வளமாக செயல்பட்ட தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், இப்போது சீரழிந்து போனது. அதனை மாற்றுவதற்கான ஏற்பாடுகள் இல்லை. அந்தக் காலத்தில் வெளியிட்ட நூல்களை திரு. உதயச்சந்திரன் அவர்கள் முயற்சியில் அண்மையில் ஒளிப்பட அச்சாகக் கொண்டு வந்துள்ளார்கள். திராவிடக் கட்சிகள் தமிழ்வழிக் கல்வியை வளர்த்தெடுக்கும் திட்டங்களை வளமாக்கவில்லை.

- **தமிழ்நாட்டில் கல்வித்துறையில் செய்யவேண்டிய மாற்றங்கள்**

தொடக்கக் கல்வி நடைமுறைப்படுத்தும் முறைமைகளில் மாற்றங்கள் தேவை. குழந்தைகளுக்கு எத்தகைய பாடங்களை, எவ்வாறு சொல்லிக் கொடுப்பது என்று குறித்த அறிவியல் பூர்வமான திட்ட வரையறைகள் இல்லை. எடுத்துக்காட்டாக, ஆங்கில மொழி பயிற்றல் என்பது அறிவியல் பூர்வமான முறைகளில் அமைந்திருக்கிறது. தமிழ் மொழி பயிற்றல் அவ்வாறு இல்லை. இதனால் தமிழ்மொழி கற்றலில் குழந்தைகள் ஆர்வம் காட்டாது சோர்வடைகிறார்கள். ஆங்கிலக் கல்வி பயிற்ற இலக்கியம் மற்றும் மொழிக் கல்விக்கான ELT எனும் துறை வளர்ச்சிடைந்துள்ளது. அதைப்போல் தமிழில் TLT எனும் துறை குறித்த புரிதல்கூட இல்லை.

தொடக்கக்கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி முறைகள் புதிய வளர்ச்சியோடு இல்லை. மிகப்பழைய முறையே உள்ளது. நவீன வளர்ச்சி சார்ந்த புதிய முறைப் பயிற்சிகளை ஆசிரியர்களுக்கு வழங்கவேண்டும். பயிற்சி நிறுவனங்கள் புலமைத்துவ சூழல் மிக்கதாக இருக்கவேண்டும். அவ்வாறு தமிழ்ச் சூழலில் இல்லை. தொடக்கக்கல்வி சீர்பெற்றால் இடைநிலைக் கல்வி தானாகவே மாற்றமடையும். இதனால் பள்ளிக்கல்வி என்பது குழந்தைகளின் ஆளுமைகளை வளர்த்தெடுக்கும் பயிற்சி மையங்களாக அமையும். இப்போது அப்படி இல்லை. ஐரோப்பிய நாடுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை மிகுதி.

உயர்நிலைக்கல்வி நிறுவனங்கள், புலமைத்துவ உரையாடல் நிறுவனங்களாக வடிவம் பெறவேண்டும். ஜவகர்லால் நேரு பல்கலைக்

*கழக அமைப்பு போன்று அமைதல் அவசியம். அந்த நிலை இன்று இல்லை. மாறாக அந்த நிறுவனம் அழிக்கப்படுகிறது. தனியார் நிகர்நிலைப் பல்கலைக் கழகம் எனும் பெயரில் கல்விவணிகம், முதலாளிகளின் தொழில்களில் ஒன்றாகியுள்ளது. வரும் காலத்தில் உயர்கல்வி என்பது ஒரு தொழிற்சாலைபோல் இயங்கத் திட்டமிடுகிறார்கள். இது வளமானது இல்லை.*

- **பெரியார் பரிந்துரைத்த தமிழ்த் தேசியத்தை முன்னெடுக்க வேண்டியதன் தேவை என்ன?**

*பெரியார் 1920களில் சமூக நீதிக்காகப் போராடி வகுப்புவாரி உரிமையைப் பெறச்செய்தார். 1938இல் இந்தி மொழிக்கு எதிரான போராட்டத்தைத் தொடங்கினார். 1954இல் குலக்கல்விக்கு எதிரான போரில் வெற்றி பெற்றார். 1957 இல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தைக் கொளுத்திய போராட்டத்தில் மூவாயிரம் பேருக்கு மேல் சிறை சென்றனர். பலர் இறந்தனர். வாழ்நாள் முழுவதும் சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, இந்து மத எதிர்ப்பு வைதீகப் பார்ப்பனீய எதிர்ப்பு, இராமாயண எதிர்ப்பு என்று வாழ்ந்தார்.*

*இதன் மூலம் அவர் முன்னெடுத்த தமிழ்த்தேசியம் என்பது மொழி ஆதிக்க எதிர்ப்பு சார்ந்தது. சாதிய ஒழிப்பை முதன்மைப்படுத்துவது. சமய மறுப்பை அடிப்படையாகக் கொண்டது. பெண் விடுதலையைக் கோரி நிற்பது. இந்தப் பின்புலத்தில்தான் பெரியாரின் தமிழ்த்தேசியம் அமைகிறது. அதை முன்னெடுப்பது நமது கடமை. அவரின் சில நடைமுறைச் செயல்பாடுகளைத் தவறாகப் புரிந்து கொண்டு அவரைத் தமிழுக்கு எதிரியாகப் பேசுவது அறியாமை.*

- **தேர்தலில் பங்கேற்றதோடு திராவிடக் கட்சியின் போக்கு எவ்வாறு உள்ளது?**

*தேர்தல் என்ற நடைமுறை அடிப்படையில் சாதியத்தை நடைமுறையாகக் கொண்டது. ஓட்டு வங்கி என்பது சாதியை முதன்மைப்படுத்தி அமைவது. இதனால்தான் தமிழ்நாட்டில் சாதியச் சங்கங்கள் என்பது சாதிக்கட்சிகளாக வடிவம் பெற்று செயல்படுகின்றன. சாதி அடையாளம், ஓட்டு அடையாளம் எனும் நிலை உருப்பெற்றுள்ளது. எந்தக் கட்சியானாலும், தொகுதியின் சாதி எண்ணிக்கையைச் சார்ந்தே வேட்பாளர்களைத் தெரிவு செய்கிறார்கள்.*

*திராவிட இயக்கம் பெரியாரால் “சுயமரியாதை இயக்கம்” எனும் பெயரில் சாதிக்கு எதிரான இயக்கமாக உருவானது. ஆனால் திராவிடக்*

கட்சிகள், தேர்தலில் சாதிக்கு எதிராகச் செயல்பட முடியாது. வட்டார 'பெரிய' மனிதர்களின் விருப்பம் சார்ந்துதான் கட்சி இயக்கப்பட முடியும். தேர்தல், கோடிக் கணக்கில் பணம் புழங்கும் சூதாட்டம். இதை சாதிக்கட்சிகளும் மதம் சார்ந்த கட்சிகளும் நடைமுறைப்படுத்துகின்றன. திராவிட கட்சிகளும் நடைமுறைப்படுத்துகின்றன. ஊழல் செய்வதற் கான அனைத்து வாயில்களும் திறக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் உள்ள திராவிடக் கட்சியைச் சார்ந்த குடும்பம் ஒன்று தென் மற்றும் தென்கிழக்கு ஆசியப் பகுதியின் முதன்மையான பணக்காரக் குடும்பம் என்கிறார்கள். டி.வி.எஸ். அய்யங்கார் முதலாளிகளுக்கு இணையானவர் கள். இது எவ்வாறு சாத்தியமாகியது? திராவிடக் கட்சிகளின் தேர்தல் விளையாட்டுத்தான்.

இதன் மறுதலையாகத் திராவிட கட்சிகளின் அதிகாரத்தால் இந்தியாவில் எங்கும் நிகழாத சமூகநீதி தமிழகத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது. சமூக நீதியில் ஒடுக்கப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மக்கள் கல்வி மற்றும் பொருளாதார நிலையில் பயன்பெற்றிருப்பதை மறுக்க முடியாது. திராவிடக் கட்சிகள், கொள்ளவும் முடியாத தள்ளவும் முடியாத மனநிலையை நமக்கு உருவாக்குகின்றன.

- **தமிழீழ விடுதலை எவ்வாறு நிகழும்? அதற்கு என்ன செய்ய வேண்டும்?**

பெரும்பான்மை சிங்கள பேரினவாதம், சிறுபான்மையான தமிழர்களைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக ஒடுக்கி வருகிறார்கள். ஒரே தீவில் இரு தேசிய இனங்களும் இஸ்லாமிய மக்களும் வாழவேண்டும். இதற்கான கூட்டாட்சி தத்துவ மரபை சிங்கள பேரினவாதம் ஏற்றுக் கொள்ளவில்லை. நடைமுறையில் கூட்டாட்சி வெற்றிகரமாக இல்லை எனில், தேசிய இனங்கள் தமக்கென தனித்த அரசை உருவாக்குவது தவிர வேறு வழியில்லை. அப்படியொரு அரசை உருவாக்க முயன்று ஈழத்தமிழர்கள் பெரும் எண்ணிக்கையில் உயிர் இழப்புக்கு ஆளாகி விட்டார்கள். உலகம் முழுவதும் அகதிகளாக வாழும் கொடுமை நிகழ்கிறது.

நேர்மையான கூட்டாட்சியை உலக நாடுகள் அவர்களுக்கு உருவாக்கித்தர இயலாவிடில் அவர்களுக்குத் தனிநாடு உருவாக்குவதைத் தவிர வேறு வழியில்லை.

சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை பேரினவாதத்தால் ஒடுக்கப் படுகிறார்கள் என்ற புரிதல் உலக நாடுகளில் உருவாக்கப்பெற்றுள்ளதா? மாறாகப் பேரினவாத அரசோடு பெரிய நாடுகள் கைகோர்த்துக்

கொள்கிறார்கள். இந்தியா, சீனா போன்ற நாடுகள் நேரடியாகவே தமிழ் இன அழிப்புக்குத் துணைபோகிறார்கள். மிகச் சிறுபான்மையாக உள்ள மக்கள் தனித்துப் போராடுவதன் மூலம் தனி ஈழம் சாத்தியமாகுமோ? என்ற அச்சம் உருவாகிவிட்டது? அவர்களுக்கு யார் துணை நிற்கப்போகிறார்கள் என்பதை அடிப்படையாகக் கொண்டுதான் தமிழ் ஈழம் சாத்தியப்படும்.

- **இன்றைய இந்துத்துவ சூழலில் பெரியார் - அம்பேத்கர் ஆகியோர் கருத்துகளை முன்னெடுப்பதன் தேவை**

இன்றைய இந்துத்துவ பாசிச சூழலுக்கு மாற்று பெரியார் - அம்பேத்கர் முன்வைத்த கருத்துகள்தான் முதன்மையானவை. மதத்தையும் சாதியையும் அடிப்படையாகக் கொண்டது இந்துத்துவம். இந்த இரண்டையும் ஒழிக்கப் போராடியவர்கள் பெரியாரும் அம்பேத்கரும். எனவே அவர்களை முன்னிறுத்துவதன் மூலம் இந்த பாசிச சக்திகளை அம்பலப்படுத்த முடியும். சாதி மற்றும் பொருளாதார ஒடுக்குமுறைக்கு ஆளான மக்கள் அனைவரும் ஓரணியில் திரள வேண்டிய தேவை உருப்பெற்றுள்ளது. பெரியாரிய செயல்பாட்டாளர் கள், அம்பேத்காரிய செயல்பாட்டாளர்கள், தமிழ்த் தேசியர்கள், இடது சாரிகள் ஆகிய அனைவரும் கைகோர்த்து செயல்படும் சூழல் இந்தியா விற்குத் தேவை. அதை நடைமுறைப்படுத்துவதுதான் இன்றைய முதன்மையான செயல்.

- **உலகமயச் சூழலும் இடதுசாரிகளும் குறித்தப் பதிவு**

இடதுசாரிகள் முதன்மையாகக் கொண்ட தொழிலாளர் இயக்கங்களின் நடைமுறைச் செயல்பாடுகள் மாற்றம் பெற்றுள்ளன. உழவுத்தொழில் சார்ந்த மக்கள், இயக்கங்களாகச் செயல்படும் வாய்ப்பு கள் குறைந்துவிட்டன. இடைநிலை வகுப்பைச் சேர்ந்த கல்வி அறிவு பெற்றவர்களில் ஒரு பகுதியினர் இடதுசாரி இயக்கங்களில் செயல்படு கின்றனர். உலகத்தில் நிகழ்ந்த பொருளாதார மற்றும் பண்பாட்டு மாற்றங்களால், இடதுசாரி அமைப்புகளுக்குப் பின்னடைவு ஏற்பட்டுவிட்டதைக் கருத்தில்கொண்டு செயல்பட வேண்டிய தருணம் இது. இடதுசாரிக் கட்சிகள் இதனைக் கருத்தில் கொண்டு விவாதித்து வருகின்றனர். புதிய திட்டங்களோடு இடதுசாரிக் கட்சிகள் செயல்படும் காலம் உருப்பெறும். பண்பாட்டுத் தளத்தில் இடதுசாரிகள் இந்திய அரசியலில் பின் தங்கியுள்ளனர். பண்பாட்டு அரசியல் போராட்டத்தை முன்னெடுக்கும் தேவை இடதுசாரிகளுக்கு இன்றைய தேவையாக அமைகிறது.

• எங்கள் வீட்டில் உள்ள நூலகம் பற்றிய சில குறிப்புகள்

எங்கள் வீட்டின் பெயர் 'கல்மரம்', எனவே எங்கள் நூலகத்திற்கு கல்மர நூலகம் என்று பெயரிட விரும்புகிறோம். 19,500 நூல்களும், 1,800 இதழ் தொகுப்புகளும் எங்கள் நூலகத்தில் இடம்பெற்றுள்ளன. மையொற்றுப்படி செய்யப்பட்ட 650 நூல்களும் 600 ஆய்வேடுகளும் நூலகத்தில் உள்ளன. சிறுவெளியீடுகள் சுமார் 2000 அளவில் உள்ளன. வ.ரா, இல்லத்தில் இருந்து கிடைத்த அரிய ஆவணங்கள் பல உள்ளன.

இது சொந்த ஈடுபாட்டால் உருவானது. நூலகத்தின் இதழ்த் தொகுப்புகள் பெறுமதி மிக்கவை. எதிர்காலத்தில் அரிய ஆவணங்களாக அவை அமையும். எனது கல்லூரிக் காலம் முதல் திரட்டப் பட்டவை. மங்கையின் சேகரிப்பால் நாடகத்துறை சார்ந்த மிக அரிய நூல்கள் உள்ளன. அச்சு ஊடகம், அரங்கக்கலை, தமிழ்



இலக்கணம், தமிழ் இலக்கியம், தமிழ் இலக்கிய வரலாறு, தமிழின் முதன்மை யான ஆளுமைகளின் நூல்கள், தமிழ்ப் பண்பாட்டு வரலாறு சார்ந்த தமிழ் மற்றும் ஆங்கில நூல்கள் ஆகியவை நூலகத்தில் இடம் பெற்றுள்ளன. இப்போது நூல்பட்டியல் உருவாக்கிவிட்டோம். ரோஜா முத்தையா நூலக நூற்பட்டியல் முறையைப் பின்பற்றி உருவாக்கியுள்ளோம். இணையத்தில் அந்தப் பட்டியல் விரைவில் இடம்பெறும். யாரும் எங்கிருந்தும் பட்டியலைப் பார்க்க முடியும். ஆய்வு மாணவர்களுக்கு உதவுவது முதன்மையான நோக்கம்.

எனது ஓய்வு ஊதியம் மூலம் கிடைத்த தொகையில் முக்கால் பகுதியை இந்நூலகக் கட்டிடத்தை உருவாக்கச் செலவிட்டேன். கட்டிடக்கலைஞர் மகேஸ் இராதாகிருஷ்ணன் இதை உருவாக்கினார். ஐரோப்பிய நாடுகளில் இந்த வடிவில் பல வீடுகளிலும் இவ்வகையான நூலகங்கள் உண்டு. நமது நாட்டில் மிகவும் குறைவு. இந்த நூலகத்தைப் பயன்படுத்த விரும்புவோருக்கு உதவ அணியமாக இருக்கிறோம். நன்றி.

## பொதுமையியக் (கம்யூனிஸ்ட்) கட்சி அறிக்கை

# நடைமுறைச் சூழலின் பொருத்தப்பாடு...

• **பொழிலன்**

**1848** இல் மார்க்சிய மூலவர்களான மார்க்சு, ஏங்கல்சு ஆகியோரால் எழுதி முன்வைக்கப்பட்ட **பொதுமையியக் (கம்யூனிஸ்ட்) கட்சி** அறிக்கையின் இக்காலத் தேவை குறித்து எழுதுவதற்கும் படிப்பதற்கும் குமுக, அரசியல் ஆய்வோடு மட்டுமன்றி உளவியலாகவும் நம்மை நாம் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டியிருக்கிறது.

அந்தக் குறு நூலை வெளியிடும்போது மார்க்சுக்கு 30 அகவை ஆகியிருந்தது. ஏங்கல்சுக்கு 28 அகவை. அன்றைய குமுக அழுத்தம் அவர்களுக்கு அந்தப் படிப்பினைகளைக் கொடுத்திருந்தது. குமுகத்தைப்பற்றி அந்த அளவு அக்கறையோடு அவர்கள் ஆய்வு செய்திருந்தனர்.

அந்த அறிக்கை நூல் எழுதப்படுவதற்கு நான்காண்டுகளுக்கு முன்புதான் இருவரும் அறிமுகமாகிப் பழகத் தொடங்கி இருந்தனர்.

மெய்யியலாளர்கள் உலகை விளக்கப்படுத்துவதற்குப் பல வழிகளைக் கையாண்ட நிலையில் அதை எவ்வாறு மாற்றுவது என்பதையே நோக்கமாகக் கொண்ட அறிஞரான மார்க்சு **'தத்துவத்தின் வறுமை'** எனும் தன் முதல் நூலை 1847- இல் வெளியிட்ட பின், 1848- இல் வெளிவந்த அறிக்கையே இந்த நூல்.

1847 நவம்பரில் கூடிய **பொதுமையியக் கழகம் (கம்யூனிஸ்ட் லீக்)** என்ற தொழிலாளர் நிறுவனத்திற்கான வேலைத்திட்டமாக அக் கழகத்தின் பேராயம் மார்க்சையும் ஏங்கல்சையும் எழுதப் பணித்ததிலிருந்து அவர்களால் எழுதி முன்வைக்கப்பட்ட, "இந்தச் சின்னஞ்சிறு புத்தகம் முழுமையான பல தொகுதிகளுக்கு இணையானது; நாகரிக உலகம் முழுவதிலுமுள்ள நிறுவன அடிப்படையில் அமைந்த, போராடும் பாட்டாளி வகுப்பை(வர்க்கத்தை) இந்த நூலின்உணர்ச்சி இன்றளவும் தூண்டி நடத்துகிறது” -என்று தோழர் இலெனின் குறிப்பிட்டிருந்தார்.

*இந்த நூல், 1847 நவம்பர் 29ஆம் நாள் முதல், திசம்பர் 8ஆம் நாள் வரை பத்து நாள்கள் இலண்டனில் நிகழ்ந்த இரண்டாம் பேராயத்தில் நடந்த நீண்ட தருக்கங்களின் இறுதியில் ஒரு மனதாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டு எழுதப்பட்டது.*

*இந்த அறிக்கையை எழுதியதோடு மட்டுமன்றி அதைத் தொழிலாளர் வகுப்பினரி (வர்க்கத்தினரி)டையே பெரும் பயிற்சிக்காகப் பயன்படும் வகையில் பரப்பவும் செய்தனர். தொழிற்கழகங்களைக் கட்டமைக்குமாறும், பாட்டாளி வகுப்புக்கு அரசியல் கல்வி அளிப்பதில் முனைந்து ஈடுபடுமாறும், பெருந்திரளான பாட்டாளி மக்களின் கட்சிக்கு வேண்டிய அடித்தளங்களை நிறுவுமாறும் மார்க்சும், ஏங்கல்சும் தங்களைப் பின்பற்றுவோரை வலியுறுத்தினர்.*

*இந்த அறிக்கை எழுதப்பட்டதிலிருந்து அதன் கருத்துகள் முற்றிலும் சரி என நிறுவுவதற்காகக் "கட்சியே புரட்சிவயப்பட்ட திறமையின் சிறந்த பயிற்சிப் பள்ளி" என முன்மொழிந்து, கடுமையாக அவர்கள் உழைக்கவேண்டியிருந்தது.*

*செருமனியில், சுவிட்சர்லாந்தில், இங்கிலாந்தில், அமெரிக்காவில் எல்லாம் பலமுறை இந்த அறிக்கை அச்சிட்டுப் பரப்பப்பட்டது.*

*இறுதியாக 1872 - ஆம் ஆண்டில் செருமனியில் வெளியிட்ட பதிப்புக்குத்தான் முதன்முறையாக ஒரு முகவுரையை மார்க்சும் எங்கல்சும் எழுதினர்.*

*1848 தொடங்கி 1872 வரை "இடைப்பட்ட 25 ஆண்டுகளில் நிலைமை எவ்வளவோ மாறி இருந்தபோதிலும் இந்த அறிக்கையில் வகுக்கப்பட்டுள்ள பொதுவான கோட்பாடுகளை முழுமையாகப் பார்த்தால் அவை என்றும்போல் இன்றும் சரியானவை. இங்கும் அங்குமாகச் சில விளக்கங்களைச் செம்மைப்படுத்தலாம். அறிக்கையே கூறுவதைப்போல, இந்தக் கோட்பாடுகளை நடைமுறையில் கடைப்பிடிக்கும் செய்தி, எந்த இடத்திலும் சரி, எந்தக் காலத்திலும் சரி, அந்தந்தக் காலகட்டத்தின் வரலாற்று வழிபட்ட நிலைமைகளைப் பொறுத்திருக்கிறது" என்று மார்க்சும், ஏங்கல்சுமே குறிப்பிட்டிருக்கின்றனர்.*

*அதன்பிறகு அறிக்கையின் உருசிய மொழிபெயர்ப்பு (முதல் உருசிய மொழிப் பதிப்பு 1860-70 ஆண்டுகளில் "கோலகல்" என்ற இதழில் வெளிவந்திருந்த போதும்) முழு வெளியீடாக 1882 சனவரி 21 -ஆம் நாளன்று மார்க்சு ஏங்கல்சின் முன்னுரையோடு வெளிவந்தது.*

தொடர்ந்த 1883 ஆம் ஆண்டின் மார்ச்சு மாதத்தில், மார்க்சு மறைவுற்றபின் (1883 ஆம் ஆண்டின் செருமானியப் பதிப்பு, 1888 ஆம் ஆண்டின் ஆங்கிலப் பதிப்பு, 1890 ஆண்டின் செருமானியப் பதிப்பு, 1892 ஆம்ஆண்டின் போலீசு - மொழிப் பதிப்பு, 1893ஆம் ஆண்டின் இத்தாலியப் பதிப்பு -ஆகிய) ஐந்து மொழிபெயர்ப்புப் பதிப்புகளுக்கும் ஏங்கல்சு மட்டுமே முன்னுரை எழுதி வெளியிட்டார்.

ஆக மொத்தத்தில் அந்த நூலுக்கு எழுதப்பட்ட ஏழு முன்னுரைகளும் மிகவும் கவனிக்கத்தக்கவை.

முன்னுரைகளை அடுத்து நூல் தொடங்கும் தன்மை மிகவும் ஈர்ப்பானது.

ஐரோப்பாவை ஒரு பூதம் பிடித்து ஆட்டிக் கொண்டிருக்கிறது. பொதுமையியம் (கம்யூனிசம்) என்ற பூதம்.... - என்று தொடங்கி,

1. பொதுமையியம்(கம்யூனிசம்) ஒரு தனிப் பெரும் ஆற்றல் என்பதை ஐரோப்பிய ஆற்றல்கள் அனைத்தும் ஏற்கனவே ஏற்று இசைந்து விட்டன.
2. தம் கருத்துகளையும், தமது இலக்குகளையும், தமது போக்கு களையும் பொதுமையர்கள் (கம்யூனிஸ்டுகள்) வெளிப்படையாக உலகறிய பரப்புரை செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டது

- என்று தொடங்கும் நூலின் உள்ளடக்கம்:

- முதலாளிகளும் பாட்டாளிகளும்,
- பாட்டாளிகளும் பொதுமையர்களும்,
- குமுகிய இலக்கியமும் பொதுமையிய இலக்கியமும்,
- இன்றுள்ள (1800களின் காலங்களில்) பல்வேறு எதிர்க்கட்சிகள் தொடர்பாகப் பொதுமையர்களின் நிலை

- என்பதான தலைப்புகளில் விரிவான ஆய்வுகளையும், வேலைத் திட்டங்களையும் அந்த அறிக்கை முன்வைத்திருந்தது.

"இதற்கு முன் நடைபெற்ற வரலாற்றடிப்படையிலான இயக்கங்கள் அனைத்தும் சிறுபான்மையோர் பங்குகொண்ட இயக்கங்களாகவோ, சிறுபான்மையோரின் நலனுக்காக நடந்த இயக்கங்களாகவோதாம் இருந்தன. பாட்டாளி வகுப்பு (வர்க்க) இயக்கமோ மிகப்பெரும்பான்மை யோர் தன்னுணர்வுடன் நடத்தும், மிகப் பெரும்பான்மையோருடைய

நலனுக்கான இயக்கம். குமுகத்தின் அடித்தட்டிலுள்ள பாட்டாளிய வகுப்பு, அதன் மேலே சுமத்தப்பட்டுள்ள அதிகார வழியான குமுகத்தின் அனைத்துத் தட்டுகளையும் முழுமையாகத் தூக்கி எறியாமல், தன்னைத்தானே அசைத்துக் கொள்ளவும், உயர்த்திக் கொள்ளவும் முடியாது" - என்று விளக்கப்படுத்திய அறிக்கை பொதுமையர்கள் முனைப்பில் பாட்டாளி வகுப்பு முன்னெடுத்து நடத்தவிருக்கும் புரட்சி வழிப்பட்ட போராட்டத்தை முதலாளிய வகுப்பு என்னென்ன வகையில் எல்லாம் இழித்துரைக்கிறது என்றும், அதற்கு உண்மையான விடை என்ன என்றும் எளிமையாகவும் வலிமையாகவும் விளக்கியது..

- மாந்தனுடைய சொந்த உழைப்பினால் விளைவிக்கப்பட்ட சொத்தைத் தனி உடைமையாக்கிக் கொள்ளும் உரிமையைப் பொதுமையர்களாகிய நாங்கள் ஒழிக்க விரும்புவதாகக் குற்றம்சாட்டப்படுகிறது..
- நாங்கள் தனிப் பண்பையும் உரிமையையும் ஒழிப்பதாக முதலாளிகள் கூறுகின்றனர்!..
- நாங்கள் தனி உடைமையை ஒழித்துவிடக் கருத்து கொண்டிருக்கிறோம் என்பதைக் கண்டு அவர்கள் நடுங்குகிறார்கள்!..
- குடும்ப ஒழிப்பு! இந்தச் சிந்தனையைக் கேட்டவுடன் தீவிரர்களும் சீறி எழுகின்றனர்..
- கல்வியை ஆளும் வகுப்பின் செல்வாக்கிலிருந்து மீட்கவே பொதுமையர்(கம்யூனிஸ்டு)கள் முயல்கின்றனர்..
- பொதுமக்களாகிய பொதுமையர்(கம்யூனிஸ்டு)கள் பெண்களைப் பொதுவாக்கி விடுவீர்கள் என்று முதலாளிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து வீரிடுகிறார்கள்..
- தேசங்களையும் தேசிய இனங்களையும் ஒழிக்க விரும்புவதாகப் பொதுமையர்கள் (கம்யூனிஸ்டுகள்) மீது குற்றம்சாட்டப்படுகிறது..

- ஆகிய வகையில் பொதுமையர்கள்(கம்யூனிஸ்டுகள்) மீது சொல்லப்பட்ட அவதூறுகளுக்கெல்லாம் சுருக்கமான தெளிவான விடையைக் கட்சி அறிக்கையின் இரண்டாம் பகுதி தருகிறது.

அவை மட்டுமன்றி, குமுகிய (சோசலிச)க் கோட்பாடுகள் புரட்சி இலக்கு நோக்கிப் பரவத் தொடங்கிய அந்தத் தொடக்கக்

*காலங்களிலேயே நிலக்கிழமை குமுகியம்(சோசலிசம்), குட்டி முதலாளியக் குமுகியம்(சோசலிசம்), செருமானியக் குமுகியம் அல்லது உண்மைக் குமுகியம், பழமைப் பிடிப்புள்ள குமுகியம் அல்லது முதலாளியக் குமுகியம், திறனாய்வுக் கற்பனைக் குமுகியமும்-திறனாய்வுப்பொதுமையியமும் - என்றெல்லாம் எந்த வகையில் எல்லாம் திரிபான புரிதல்களும் நடைமுறைகளும் இருந்தன என்பதற்குரிய விளக்கங்கள் தெளிவாகத் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.*

*இறுதியாகத், " தமது கருத்துகளையும் இலக்குகளையும் மறைத்து வைப்பதைப் பொதுமையர்கள்(கம்யூனிஸ்டுகள்) இழிவாகக் கருதுகிறார்கள். இன்றைய குமுகாய (சமுதாய) நிலைமைகள் அனைத்தையும் வலுக்கட்டாயமாக வீழ்த்தினால்தான், தமது இலக்குகளை அடைய முடியும் என்று அவர்கள் வெளிப்படையாக அறிவிப்பு செய்கிறார்கள். பொதுமையியப் புரட்சியை நினைத்து ஆளும் வகுப்புகள் நடுங்கட்டும்! பாட்டாளிகளுக்குத் தமது அடிமைத்தளைகளைத் தவிர இழப்பதற்கு வேறொன்றும் இல்லை, வெல்வதற்கு ஓர் உலகம் இருக்கிறது" - என்று பாட்டாளியப் புரட்சியின் இலக்கின் நோக்கத்தை ஓங்கி ஒலிக்கிறது அறிக்கை. கடைசி வரியாக,* **'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'** *என்ற முழக்கம் அறிக்கையை அணி செய்கிறது.*

### அறிக்கையும் தமிழ் மொழிபெயர்ப்புகளும்

*1917 உருசியப் புரட்சிக்கு முன்பே 30 மொழிகளிலும், ஆப்சுபர்க் - பேரரசின் கீழ் 55 செருமானியப் பதிப்பு, 34 ஆங்கிலப் பதிப்பு, 26 பிரஞ்சுப் பதிப்பு, 11 இத்தாலியப் பதிப்பு என்றெல்லாம் 150 பதிப்புகளுக்கும் மேலாகப் பொதுமையியக் கட்சியின் அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.*

*பிரிட்டிசு இந்தியாவுக்குள் வங்காள மொழியில் தொடங்கி, தமிழ், உருது, மராட்டி, மலையாளம், தெலுங்கு. குசராத்தி, இந்தி, ஒரியா, பஞ்சாபி - எனப் பெரும்பான்மை மொழிகளில் கட்சி அறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது.*

*தமிழில் முதன்முதலில் பெரியார் ஈவெரா அவர்களின் முயற்சியால்தான் அறிக்கை தமிழாக்கம் செய்யப்பட்டுச்* ***‘சமதர்ம அறிக்கை’*** *எனும் பெயரில் வெளிவந்தது.*

*1931 அக்டோபர் 4ஆம் நாள் வெளிவந்த குடியரசு இதழில் பெரியார் அந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார். ஆனால், அந்த அறிக்கையை*

*யார் மொழிபெயர்த்தது என்ற குறிப்பு அந்த இதழில் இல்லை. மேலும் அறிக்கையின் முதல் பகுதி மட்டுமே வெளியிடப்பட்டது. அதன் பிறகு அறிக்கை 1948-இல் இசுமத் பாட்சாவால் முழுமையாக மொழிபெயர்க் கப்பட்டு "சனசக்தி" இதழில் வெளிவந்தது.*

*1888 ஆம் ஆண்டின் ஆங்கிலப் பெயர்ப்பு அறிக்கையை அடிப்படை யாகக் கொண்டு 1979 -இல் மாசுக்கோ முன்னேற்றப் பதிப்பகம், தோழர் இரா. கிருசுணையாவால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட அறிக்கை பல பதிப்புகளாக ஏறத்தாழ ஆறு இலக்கம் படிகள் வெளியிடப் பட்டதாகக் கூறப்படுகிறது.*

*அதன்பிறகு 2007, 2008 களில் சென்னை பாரதி புத்தகாலயத்தாலும், நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தாலும் இலக்குவன், பேரின்பன் ஆகியோரால் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.*

*இவையன்றி பலரும் அறிக்கையின் மீதான ஆய்வுக் கட்டுரைகள் எழுதியுள்ளனர். அவற்றின்வழி மொழிபெயர்ப்புகள் குறித்தும் சிலவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டியுள்ளது.*

*1848 - ஆம் ஆண்டில் வெளிவந்த செருமானியப் பதிப்புக்கும் 1888 ஆம் ஆண்டில் வெளிவந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்கும் இடையி லேயே பாட வேறுபாடுகள் இருப்பதாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.*

*அந்த நிலையில் 1888 ஆம் ஆண்டின் ஆங்கில அறிக்கையிலிருந்து மாசுக்கோ முன்னேற்றப் பதிப்பகம் வெளியிட்ட தமிழ் மொழிபெயர்ப்புதான் தமிழில் பெரிதும் அறியப்பட்ட நிலையில் அதில் உள்ள சில கருத்துகள் தமிழகப் பொதுமையர்கள்(கம்யூனிஸ்டுகள்) கவனித்தாக வேண்டியவையாக இருக்கிறது.*

*அந்த மொழிபெயர்ப்பில் மார்க்சு எங்கெல்சு எழுதிய முன்னுரைகள் முழுமையாய் இணைக்கப்பட்டுள்ளன.*

*ஆயினும், அறிக்கையின் மொழிநடையில் சமசுக்கிருதச் சொல் லாடல் கலப்பு அதிகமாக இருப்பது தவிர்த்திருக்கப்பட வேண்டியது.*

***சங்கற்பம், சௌஜன்யம், பிரஷ்டம், பிதிரார்ஜிதம், சந்தேகாஸ்பதமான, அபவித்ர, சர்வரோக, பரோபகாரி, பரிகசிக்கதக்க, பிரேரித்த, புனர்நிர்மான, தஸ்தாவேஜ்** - என்கிற வகையில் நூற்றுக்கணக்கானசொற்கள் தமிழுக்கும் தமிழக வெகுமக்களின் வழக்குக்கும் அப்பாற்பட்ட விளங்காத சமசுக்கிருத சொற்களாக இருப்பதும்,*

***வாய் வேதாந்த, சாஸ்திர*** - *போன்ற மார்க்சியத்திற்கும் தமிழியத்திற்கும் தொடர்பற்ற ஆரியவயப்படுத்தப்பட்ட சொற்களாக இருப்பதும், அப் பொதுமையியக் கட்சி அறிக்கையை முழுமையாக விளங்கிக் கொள்வதில் தடை ஏற்படுத்தக்கூடியவை ஆகிறது.*

*அதுவும் வாய் வேதாந்த, சாஸ்திர - என்கிற சமசுக்கிருத சொற்களின் பொருள்கள் வேதம், புராணம் ஆகிய தொடர்புடையவையான நிலையில், அவை போன்றதான சொற்களை அவற்றுக்கு முற்றிலும் நேரெதிரான கோட்பாட்டு நூல்களில் பயன்படுத்துவது பெரும் முரணானவை என்பதை உணர வேண்டும்.*

*இந்த இடத்தில்* ***வேதாந்த*** *என்ற சொல்* **high falutin** - *என்ற ஆங்கிலச் சொல்லின் பெயர்ப்பு என்றும், அதற்கு (2014 இல்) எசு. வி. இராசதுரை அவர்கள் தம் மொழிபெயர்ப்பில்* ***'அலட்டல் பேச்சுகள்'*** *என்று மொழிபெயர்த்திருப்பதும் கவனிக்கத்தக்கது.*

*இந்த இடத்தில் மொழிநடை குறித்துத் தோழர் இலெனினின் கண்டிப்பையும் கண்டனத்தையும் கவனத்தில் எடுத்துக்கொள்வது நல்லது.*

*"நாம் உருசிய மொழியைக் கெடுத்துக்கொண்டிருக்கிறோம். அயல்மொழிச் சொற்களை நம்முடைய மொழியில் தேவையின்றிக் கையாண்டு வருகிறோம். அயல்மொழிச் சொற்களைக் கையாளும்போது அவற்றைத் தவறாகவே கையாண்டு வருகிறோம். உருசிய மொழியில்* nedchoty, nedostatki, probaly - *என்னும் அயல் மொழிச் சொற்களை நம்முடைய மொழியில் ஏன் ஆள வேண்டும்" - என்றும்,*

> "அவ்வாறு செய்கிற (பிறமொழிச் சொற்களைக் கலந்து கையாளுகிற) ஓர் எழுத்தாளரை மன்னிக்கவே முடியாது. அயல் மொழிச் சொற்களைத் தேவையின்றி கையாள்வதன் மீது ஒரு போரைத் தொடுக்கவேண்டிய நேரம் இதுவன்றோ?"

*(தொகைநூல்கள் பக்கம் 298)*

*- என்றுமான தோழர் இலெனினின் கருத்து ஒருபுறம் சிந்திக்க வேண்டியதான நிலையில், மொழிபெயர்ப்பில் கவனிக்கப்படவேண்டிய இன்னொரு செய்தியையும் இங்குக் காட்ட வேண்டியுள்ளது.*

*மொழிபெயர்ப்பாளர், தான் கொண்டிருக்கிற கருத்துகள் கோட்பாடுகளில் நின்று மொழிபெயர்க்காமல் படைப்பாளர்களின் கருத்தில் கோட்பாடுகளில் நின்று மொழிபெயர்ப்பதே மிக முகாமையானது.*

*தமிழ் மொழிபெயர்ப்பில் உள்ள சில பிறழ்ச்சிகளுள் ஒன்றை இங்குக் கட்டாயம் அறிந்துகொள்ள வேண்டியுள்ளது.*

*அறிக்கை வடிவமைக்கப்பட்ட நூலின் முகப்பிலும், பெரும்பாலான மார்க்சிய நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்பு நூல்களிலும் இடம் பெற்றுள்ள* **'உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!'** *என்ற முழக்கம் சரியான வகையில் மொழிபெயர்க்கப்படவில்லை.*

*1888-இலும், அதன்பிறகும் செய்யப்பட்ட ஆங்கில மொழிபெயர்ப்பில்* **'working men of all countries, unite!'** *என்றும்,* **'proletarians of all countries, unite!'** *- என்றுமே மொழிபெயர்த்திருக்க, அதைத் தமிழில் இரா. கிருசுணையா* **உலகத்தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்** *- என்று மொழிபெயர்த்தது அரசியல் பிழையானது என்று இன்றுவரை எவராலும் சுட்டப்படவில்லை.*

*உலகிலுள்ள தொழிலாளர்களைப் பொதுப்பட ஒரே அடையாளத்தில் ஒரு சேர அழைத்ததாகவே தமிழின் மொழிபெயர்ப்பு உள்ளது. ஆனால், எல்லா நாடுகளிலும் உள்ள தொழிலாளர்களையும் ஒன்று சேரச்சொல்கிற பொருளுடையதாகவே ஆங்கில மொழிபெயர்ப்பு உள்ளதைக் கவனிக்க வேண்டும்.*

*தமிழ் மொழிபெயர்ப்பின் பொருள், பொதுமையியக் கட்சி அறிக்கையினுள் சொல்லப்பட்டிருக்கும் கருத்துக்கே முரணானதாக உள்ளதைக் கவனிக்க வேண்டும்.*

*இந்த இடத்தில் இரு ஆங்கில மொழிபெயர்ப்புகளையும் அறிவோம்..,*

> " though not substance, yet in form, the struggle of the proletariat with the bourgeoisie in at first a National struggle. The proletariat of each country must, of course, first of all settle matters with its own bourgeoisie. "

*- என்றும்,*

> " In form, though not in content, the struggle of the proletariat against the bourgeoisie is at first a nation one. The proletariat of each country must naturally first settle accounts with its own bourgeoisie."

*- என்ற ஆங்கில வரிகளுக்கு இரா கிருசுணையா கீழேயுள்ள மொழிபெயர்ப்பைத் தந்திருக்கிறார்:*

**"பூர்சுவா வர்க்கத்துடன் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டமானது முதன்முதலில் உட்பொருளில் இல்லாவிட்டாலும்**

**உருவத்தில் தான், ஒரு தேசியப் போராட்டமாக இருக்கிறது. ஒவ்வொரு நாட்டின் பாட்டாளி வர்க்கமும் முதன்முதலில் தத்தம் நாட்டுப் பூர்சுவா வர்க்கத்துடன்தான் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும்"** - என்று மொழிபெயர்த்திருக்கிறார்.

இதில் கவனிக்க வேண்டிய இரண்டு செய்திகளில் முதல் செய்தியை இந்த இடத்தில் முதலில் பார்ப்போம்:

"முதலாளியத்தை எதிர்த்து உலக அளவில் ஒரே கட்டத்தில் கணக்குத் தீர்க்க வேண்டும் என்று அவர்கள் குறிப்பிடவில்லை. மாறாக ஒவ்வொரு நாடும் தத்தம் நாட்டு அளவில்தான் முதலில் கணக்குத்தீர்த்துகொள்ள வேண்டும்"என்பதைத் தெளிவுபடுத்துவதைக் கவனிக்க வேண்டும்.

அப்படிச் சொன்னதன் பின்பும், உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற பெயர்ப்பு எந்த அளவில் பிழைபாடான மொழிபெயர்ப்பாக அமைந்துவிடுகிறது என்று எண்ண வேண்டும்.

இந்த இடத்தில் இன்னொரு செய்தியும் கவனிக்கத்தக்கது..

சோசலிஸ்ட், கம்யூனிஸ்டு, பூர்ஷ்வா போன்ற சொல்லாடல்களுக்கெல்லாம் தமிழும் அல்லாமல் ஆங்கிலமும் அல்லாமல் அப்படியே பெயர்ப்புகளைச் செய்ததும் அப்பெயர்ப்புகளை இன்று வரை விடாமல் பிடித்துக்கொண்டு வருவதன்வழி, தமிழ்மொழி சொல் வளமற்ற மொழி என்றல்லவா தவறுதலாக உணரப்படும்.

சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் - என்பதற்கு, சோசலிச, கம்யூனிச என்றெல்லாம் மொழிபெயர்த்ததும் பின்பற்றுவதும் எதற்காக? இசம் - என்ற பின்னொட்டை சமசுக்கிருத்தில் செய்யவேண்டிய தேவை என்ன?

இவை போன்ற மொழிபெயர்ப்புகள் மொழிவழி அக்கறையற்றது என்று மட்டுமன்று குமுக வழி அக்கறையற்றதும் என்றல்லவா கருதவேண்டியுள்ளது.

எனவே, தமிழிய உணர்வோடு அதாவது தமிழ்மொழி, குமுக, அரசியல், பொருளியல் கண்ணோட்டத்தோடும் உழைக்கும் மக்களுக்கு உணரச் செய்யும் பொறுப்புணர்வோடும் இப் பொதுமையியக் கட்சி அறிக்கை மட்டுமன்று, அக் கோட்பாட்டின் நூல்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டாக வேண்டும். அப்போதே அக்கோட்பாடு தமிழ்நாட்டுத் தொழிலாளர்களின் உரிமைக் கோட்பாடாக மாறும், விளங்கும்.

**அறிக்கையின் நிகழ்காலத் தேவை**

அறிக்கை முன்வைத்திருக்கும் குமுக அரசியலின் நிகழ்காலத் தேவையை ஆய்வதும் இக் காலச் சூழலுக்குகந்த வகையில் பொருத்திப் பார்ப்பதும் மிக முகாமையானது.

அறிக்கையை ஆய்வதும் பொருத்திப் பார்ப்பதும் என்பது நாம் வாழ்கிற குமுகத்தை ஆய்வதும் அதை இந்த அறிக்கையின் பகுப்பாய்வோடு பொருத்திப் பார்ப்பதும் என்ற பொருளைக் கொண்டதாகவே இருக்கமுடியும்.

நாம் வாழ்கிற குமுகம் என்பதன் பொருள், நாம் வாழக் கட்டாயப் படுத்தப்பட்டுள்ள அரசின் கீழான குமுகம் என்பதன்று. இங்குள்ள அரசு என்பது வரலாற்று வழிபட்டு வரலாற்றின் இயங்கு நிலை வளர்ச்சியில் அமைந்த ஆண்டை அதிகார அரசாக இல்லை. மாறாக, வந்தேறிய வல்லரசின் அதிகாரச் சுரண்டல் திமிர் நோக்கத்தில் பல்வேறு மொழித் தேசங்களை அடக்கி அடிமைப்படுத்தி உருவாக்கப்பட்ட விரிவாளுமை கொண்ட அரசு வடிவமாக அமைக்கப்பட்டிருக்கிறது..

அன்றைக்குப் பிரிட்டிசு இந்திய அரசு என்கிற பெயரோடு அது உருவாக்கப்பட்டது, பிரிட்டிசு வல்லரசு இங்கு இருக்கிற அதிகார வகுப்புகளிடம் ஆட்சி அதிகாரத்தைக் கையளித்துவிட்டுப் போனபின் இந்தியா என்கிற பெயரோடு வல்லாளுமை அரசாக அது உருக்கொண்டிருக்கிறது.

அதற்கு அடிமைப்பட்ட பல்வகைப்பட்ட குமுகங்களை யெல்லாம் சேர்த்து ஒரே குமுகம், ஒரே பண்பாடு, ஒரே வாழ்க்கை முறை, ஒரே வரலாறு - என இந்திய அதிகார வகுப்பு சுட்டிக்காட்டுவதை மார்க்சிய வழிபட்ட பகுப்பாய்வுக்குரியவர்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதிகார ஆண்டை வகுப்புகளின் வரலாறே பண்பாடுகளே அடக்கப்பட்ட மக்களின் வரலாறாகப் பண்பாடாக இருந்திட இயலாது.

அதுபோல்தான் அரசு அதிகாரம் செலுத்துகிற தன் அதிகார ஏந்துக்காக வல்லரசால் உருவாக்கப்பட்ட விரிவாக்க ஆளுமை அரசை, நாட்டையெல்லாம் அதற்குள் அடக்கப்பட்ட தேசம் தனக்கான தேசமாக, அரசாக, நாடாகக் கருதி ஏற்றுக்கொள்ள முடியாது.

“ஒவ்வொரு தேசத்தின் பாட்டாளி வகுப்பும் முதலில் தத்தம் தேச முதலாளிய வகுப்புடன்தான் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும்” எனப் பொதுமையிய அறிக்கைப் பதிவைக் கவனிக்க வேண்டும்.

*அதாவது தேசத்தின் பாட்டாளி வகுப்பு என்கிறது அறிக்கை.*

*இதன் ஆங்கில பெயர்ப்பை கவனித்தால்,*

> "though not a substance, yet inform the struggle of the proletariat with the bourgeoisie at first a National struggle. The proletariat of each country must Of course first of all settle matters with its own bourgeoisie."

*- இதற்குரிய மொழிபெயர்ப்பை தோழர் எசு. வி, இராசதுரை அவர்கள் செய்யும் போது,*

> “பூர்சுவா வர்க்கத்தை எதிர்த்துப் பாட்டாளி வர்க்கம் நடத்தும் போராட்டம் தொடக்கத்தில் உள்ளடக்கத்தில் இல்லாவிட்டாலும் குறைந்த பட்சம் தேசிய வடிவிலானதாக உள்ளது. ஆகவே இயல்பாகவே ஒவ்வொரு தேசத்தையும் சேர்ந்த பாட்டாளி வர்க்கம் தனது சொந்த பூர்சுவா வர்க்கத்துடன் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டியதாகிறது."

*- என்று ஆங்கில பெயர்ப்பில்* **நேஷனல், கண்டிரி** *- என இரண்டு சொற்களும் படுத்தப்பட்டிருக்கும் போதும், தோழர் எசு வி இராசதுரை அவர்கள் இரண்டையும் தேசம் என்று ஒரே சொல்லில் மொழிபெயர்த்திருக்கிறார். தோழர் இரா. கிருசுணையாவோ ஆங்கிலப் பெயர்ப்பிலுள்ள வகையிலேயே தமிழ் மொழிபெயர்ப்பில் தேசம், நாடு என இரண்டையும் பெயர்த்துள்ளார்.*

*ஆங்கிலப் பெயர்ப்பில் உள்ளதிலோ தேசமும் நாடும் ஒன்றாகவே குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இரண்டின் பொருளும் ஒன்றாக முடியாது. தேசம் என்பது அரசு சார்ந்ததாகவும் இருக்கலாம், தனக்கென தனித்த அரசற்ற நிலையிலும் இருக்கலாம். ஆனால் நாடு என்பது அரசைக் கொண்டதாக மட்டுமே இருக்க முடியும்.*

*1848 ஆம் ஆண்டின் காலங்களில் இரண்டிற்குமான அடையாளம் வேறுபடுகின்ற வகையில் குமுக அமைப்பு இல்லாமல் இருந்திருக்கலாம். ஆனால் இப்போதைய காலம் அப்படிப்பட்டது அன்று.*

*தோழர் இரா. கிருசுணையா தமிழில் மொழிபெயர்த்த 1979 ஆம் ஆண்டின் காலத்தில்கூட அவர் தேசம், நாடு என இரண்டின் சொற்களையும் இந்தியாவை அடையாளப்படுத்தி உணர்ந்து கொண்டதாகவே பொருள் உணர்த்துகிறது. இந்தியாவை அரசு சார்ந்த*

நிலையில் நாடு என்றுகூட சொல்ல முடியுமே அன்றி, தேசம் என்று அடையாளப்படுத்திட முடியாது.

இந்தியாவிற்குள் பல்வேறுபட்ட தேசங்கள் அடிமைப்படுத்தப்பட்டு இருக்கிற நிலையில், தமிழ்நாட்டின் பாட்டாளி வகுப்பு முதலில் எந்த முதலாளிய வகுப்பை எதிர்த்துக் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என அறிந்து கொள்ளாமல்தான் இன்றுவரை அரசியல் குழப்பம் ஏற்பட்டிருக்கிறது.

இந்திய அதிகாரத்திலோ அல்லது தமிழ்த் தேசத்திலோ உள்ள முதலாளிய வகுப்பு எத்தகைய முதலாளிய வகுப்பு, பாட்டாளிய வகுப்பு என்ன தன்மையில் உள்ளது? பிற வகுப்புகளெல்லாம் என்னென்ன வகுப்புத் தன்மைகள் கொண்டவையாக உள்ளன என்கிற பகுப்பாய்வுகளைச் செவ்வனே செய்ய முடியாததற்குக் காரணம், தன் குமுகம் எது? எந்தக் குமுகத் தன்மையில் அத்தகைய பகுப்பாய்வுகளைச் செய்வது என்கிற தெளிவு இல்லாததே - என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவைத் தேசம் என்று மதிப்பிட்டு, இந்தியப் பாட்டாளி வகுப்பையெல்லாம் ஒரு சேர ஒருங்கிணைத்துப் பேரெழுச்சி படுத்த வேண்டும் என்கிற முயற்சி இயங்கா நிலை முயற்சியாகவே நீண்ட நெடியகாலத்தை விழுங்கி விட்டதை உணர வேண்டும்.

இங்கு ஏற்பட்ட இருபெரும் அடிப்படைப் பிழைகளில் ஒன்று, இந்தியாவைத் தேசமாகக் கருதி இந்திய அளவில் பாட்டாளி வகுப்பைத் திரட்டி வகுப்புப் போராட்டத்தைச் செய்வதற்காகத் திட்டமிட்டது. மற்றது, இந்தியாவில் உள்ள தேசிய இனங்களைத் தேச எழுச்சிக்குரிய களங்களாகச் சிலர் அடையாளம் கண்டிருந்தாலும் அவற்றை முழுமையான வகுப்புப் பகுப்பாய்வு செய்து போராட்டங்களில் ஒருங்கிணைக்கிற கண்ணோட்டத்தை இயக்கங்களுக்குள் ஏற்படுத்தாதது.

ஒவ்வொரு தேசத்தின் பாட்டாளி வகுப்பும், அந்தந்த தேசத்தின் சொந்த முதலாளிய வகுப்பின் கணக்கைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றால் இங்குள்ள தேசங்களின் சொந்த முதலாளியம் என்ன வகையானதாக இருக்கிறது? அது அதிகார வகுப்பாக இருக்கிறதா? அல்லது அது தானே பன்னாட்டு முதலாளிய வகுப்புகளால் நசுக்கப்படுகிறதா? - என்கிற வகுப்புப் பகுப்பாய்வையும் தேசங்களின் பாட்டாளிய வகுப்பு செய்தாக வேண்டும்.

அந்த வகையில் ஒவ்வொரு தேசத்தின் பொதுமையர் (கம்யூனிஸ்டு)களும் அந்த அந்தத் தேசத்தின் வகுப்பு(வர்க்க)ப் பகுப்பாய்வுகளைத் தொடங்கியாக வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள வகுப்புகளின் குமுகப் பகுப்பாய்வைச் செய்வது நம் முன்னுள்ள முதன்மைக் கடமையாகிறது.

ஆங்கிலேய வல்லரசுகள் வருவதற்கு முன்பாகத் தமிழகக் குமுக அமைப்பு சாதி அதிகாரத்திலான நிலக்கிழமை அமைப்பாகவே இருந்தது. நிலக்கிழமையை வீழ்த்தி முதலாளியம் வளர்வதற்கான சூழ்நிலை இங்கு ஏற்படவில்லை. உழைப்பின் மீத்தம் (உபரி) மூல முதலாக (மூலதனமாக) மாறுகிற சூழல் அமையாமல், சாதி அமைப்பும் பார்ப்பனியச் சார்புடைய நிலக்கிழமை அமைப்பும் பாழடித்தன. வேள்விகள்(யாகங்கள்), பகட்டான மக்களின் வாழ்க்கை முறைகள் உபரி என்கிற மிகை உருவாக்கத் திரட்சியைப் பாழடித்தன. சில சாதி மக்கள் மிகை உருவாக்கத்தைச் சேர்ப்பதற்கே நிலக்கிழமை அமைப்புகள் தடை செய்ததோடு, அம் மிகை உருவாக்கங்களை அழித்தன அல்லது சூறையாடின.

இந்நிலையில் வந்தேறிய பன்னாட்டு முதலாளியமே தமிழகத்தில் வளர்ந்தது. தமிழகத்திற்குள் முதலாளிய வளர்ச்சி இயல்பான முதலாளிய வளர்ச்சியாக இல்லாமல் மாறுபட்ட முறையிலேயே வளர்ந்தது.

தமிழ்நாட்டில் வளர்ந்த வந்தேறிய பன்னாட்டு முதலாளியம் இங்கு உள்ள நிலக்கிழமையை இன்னும் சொன்னால் சாதிய நிலக்கிழமையை வீழ்த்திவிட்டு வளராமல், அவற்றோடு ஒட்டி உறவு கொண்டே அதிகாரம் செலுத்தி வருகிறது. மேலும் வல்லரசியச் சார்பு நிலையில் தரகுத் தன்மையிலான முதலாளியமாகவே அது வளர்ந்தது.

இதனால் தேசிய முதலாளிய உருவாக்கங்கள் சிறு(வீத)அளவிலான உருவாக்கங்களாக இருக்கவே செய்கிறது. அது பெரு(வீத)அளவிலான உருவாக்க நிலைக்கு வளர முடியாமல் முடக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் பொதுவாகக் கட்சிக்கான அறிக்கை உருக்கொள்ளுகிற சூழல் உருவானதுபோல் இங்குத் தமிழ்நாட்டில் சூழல் உருவாகிறபடி இத்தேசத்தின் முதலாளியம் வளரத் தடை ஏற்பட்ட நிலையைக் கண்டோம். அந்நிலையில் வந்தேறிய சுரண்டல் தன்மையிலான பன்னாட்டு முதலாளியம் தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டதுடன் 1858 இல் அவ்வந்தேறிய வணிகக்

குழுமத்தின் ஆட்சி பிரிட்டிசாரின் நேரடி ஆட்சியாகவே நடக்கத்தொடங்கியது.

அது காலம் தொடங்கி அதனால் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட பிரிட்டிசு இந்திய அரசின் கீழ்த் தமிழகமும் பிறமொழித் தேசங்களும் அந்த அரசுக்கு அடிமை நாடுகளாயின.

அந்த ஆங்கில வல்லரசாட்சிக்கு நேரடியாக அடிமைப்பட்டிருந்த சூழலிலேயே முடக்கப்பட்டிருந்த தமிழகத் தொழில் வணிக வளர்ச்சி முடக்கத்தால் அவற்றையொட்டிய பிற அடக்குமுறைகளால் தமிழர்கள் ஒரு தேசிய இனமாகவும், தமிழகம் ஒரு தேசமாகவும் உருக்கொள்ளுகிற நிலை மெல்ல உருவானது.

இந்நிலையில், பிரிட்டிசு இந்திய அதிகாரக் கட்டமைப்பின் கீழ் அடைக்கப்பட்டிருந்த மக்களின் பேரெழுச்சிகளாலும், உலக அளவில் ஏற்பட்ட நெருக்கடிகளாலும் வெளியேறும் நிலைக்கு ஆளான பிரித்தானிய ஆங்கில அரசு, இந்திய அதிகாரத் தரகு வகுப்புகளிடம் ஒப்பந்தம் பேசித் தங்களின் சுரண்டலுக்கு ஏதும் தொல்லை ஏற்படாத வகையில் ஆட்சியைக் கைமாற்றிக் கொடுத்துவிட்டுச் சென்றது. அதை இந்தியத் தரகு அதிகார வகுப்புகள் விடுதலை என்று அறிவித்துக் கொண்டன.

அன்றைக்கிருந்த இந்தியப் பொதுமையிய(கம்யூனிஸ்ட்)க் கட்சியும் அதை விடுதலை எனக் கொண்டாடியதுதான் வேடிக்கையானது.

இந்நிலையில் இந்தியா பல தேசிய இனங்களை அடக்கிச் சிறைப்படுத்தி இருக்கிற ஓர் அரசாகத், தன் அதிகாரங்களைப் பலவகையில் இறுக்கப்படுத்திக் கொண்டே இருந்தது, இருக்கிறது. பன்னாட்டு வல்லரசுகளின் காவலனாகவும், தானே ஒரு துணை வல்லரசதிகாரம் செய்யும் அரசாகவும் இருக்கிறது.

இந்தியாவை அனைவருக்குமான தாயகமாகவும் அனைவரையும் இந்தியராகக் கட்டாயப்படுத்தித் திணித்து, அத்தகைய இந்திய தேசத்தைப் பாதுகாப்பதே முதல் கடமை என்றும், அத் தேச ஒற்றுமையை மறுத்துக் கேள்வி எழுப்புபவர்கள் தேசப் பகைவர்கள் என்பதாகவும் கூறி வன்முறையால் அனைத்து மொழித் தேசங்களின் உரிமைகளையும் அடக்கி வைத்திருக்கிறது இந்திய அரசு.

எனவே, பன்னாட்டு முதலீட்டு முதலாளிகளுக்கு அடிமைப்பட்ட நிலையிலேயே தமிழகத்தின் உழைக்கும் மக்கள் நசுக்கப்படுகின்றனர்.

தமிழகத்தின் தேசிய முதலாளிகள் வகுப்புகளும், பிற அனைத்துவகுப்புகளும் பன்னாட்டு முதலாளியர்களையும், அவர்களுக்குப் பாதுகாவலனாக இருந்து, அரசியல் உள்ளிட்டு அனைத்து நிலைகளிலும், அனைத்து இன மக்களையும் அடிமைப்படுத்திடும் இந்திய அரசையும் எதிர்த்து விரட்டிட கடமைப்பட்டவர்களாகவுமே உள்ளனர்.

ஆனால், பன்னாட்டு வல்லரசுகளையும், இந்திய அரசையும் விரட்டுவதான அடிப்படையான பணிகளைத் தமிழகத்தின் தேசிய முதலாளிய வகுப்புகள் உள்ளிட்ட நடுத்தர வகுப்புகளால் `சமரச'மின்றிக் கடந்தகாலங்களில் நிறைவேற்றிட முடியவில்லை. அவையெல்லாம் இந்திய அதிகார வகுப்புகளுடன் ஏதோ ஒரு வகையில் அடங்கிப்போகிற நிலையிலேயே கூட்டாட்சி, தன்னுரிமை என்கிற பெயரில் இணங்கிப்போய்விட்டன, போய்விடுகின்றன.

இந்தியா முழுமையும் உள்ள தேசிய இனங்கள் யாவும் வல்லரசதிகார வகுப்புகளுடனும், இந்திய அதிகார அரசு வகுப்புகளுடனும் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டிய முதல் கடமையை ஆற்ற வேண்டிய நிலையில் இருந்தாலும், ஏற்றத் தாழ்வான பல படிநிலைகளில் ஒவ்வொரு மொழித் தேசமும் இருப்பதால் இந்தியா முழுமையுமான தேசிய இனங்கள் ஒன்றுகூடி ஒரே நேரத்தில் மாற்றத்தைச் செய்யும் சூழலில் இல்லை.

மேலும், ஒவ்வொரு தேசிய இனத்தின் தேச விடுதலைக்கான காரணிகளும் வெவ்வேறு நிலைகளில் இருப்பதால், ஒவ்வொரு தேசிய இனமும் தனக்கான பொதுமையியக் கட்சியைத் தங்களளவில் கட்டியெழுப்பியே புரட்சிக்காக முனைப்பு கொள்ள வேண்டியுள்ளது.

அவ்வகையில், தமிழகப் பொதுமையர்கள் தமிழக அளவில் பொதுமையியக் கட்சியைக் கட்டுவதும், தமிழகத்திலிருந்து பன்னாட்டு முதலாளியத்திற்கெதிராகவும், இந்திய அரசுக்கு எதிராகவுமான கணக்கையே முதலில் தீர்க்க வேண்டியுமுள்ளது. அவ்வாறான விடுதலை எழுச்சி தமிழக உழைக்கும் வகுப்பினரின் தலைமை ஒருங்கிணைப்பில் தமிழகத் தொழிலாளர் வகுப்பு, உழவர், சிறு முதலாளிகள், புரட்சிக் குணமுள்ள தேசிய முதலாளிகள் உள்ளிட்ட அனைத்து வகுப்புகளையும் ஓரணிப் படுத்தித் திரட்டியே நடைபெறும்.

அப்படியான புரட்சிதான் தன் முதல் கடமையாக மக்கள் குடி நாயகப் புரட்சி வழியான அரசையே நிறுவும். பன்னாட்டு வல்லரசிய

அதிகாரங்களையும், இந்திய அரசு அதிகாரங்களையும் விரட்டி வீழ்த்தித் தமிழக மக்கள் குடியரசை அமைக்கும்..

அத்தகைய புரட்சி, பன்னாட்டு வல்லரசிய அடிமைத்தனங்களிலிருந்தும், இந்தியப் பார்ப்பனிய அதிகார வெறித் தனங்களிலிருந்தும், சாதிய நிலவுடைமை அதிகாரத்தனங்களிலிருந்தும் அவற்றின் கட்டுடைத்து வீழ்த்திவிட்டு, அமைக்கிற மக்கள் குடியாட்சி அரசானது, அதன் தொடர் முனைப்பில் புரட்சிவயக் குமுகிய(சோசலிச)த்தை நோக்கிச் செல்லுகிற வகையிலேயே இலக்குடையதாக இருக்கும். மார்க்சு, எங்கல்சின் பொதுமையிய அறிக்கையிலிருந்தே இதனை விளங்கிக்கொள்ள முடியும்.

**“ஒவ்வொரு தேசத்திற்கும், தன்னாட்சியையும் ஒற்றுமையை(ஐக்கியத்தை)யும் மீட்டளிக்காமல், பாட்டாளி வகுப்பின்(வர்க்கத்தின்) அனைத்துலக(சர்வதேச) ஒற்றுமையை உண்டாக்குவதோ, பொது நோக்கங்களுக்காக இந்தத் தேசங்களுக்கிடையே அமைதியான வழிப்பட்ட அறிவார்ந்த ஒத்துழைப்பை ஏற்படுத்துவதோ முடியாத செயல்”**

அதன்வழி தமிழக அளவிலான பொதுமை நோக்கங்கொண்ட இயக்கங்கள் இந்தியாவில் உள்ள புரட்சிவழிப்பட்ட தேசிய வகுப்புகளோடு மட்டுமன்றி உலக அளவிலான பொதுமையிய இலக்கு வகுப்புகளையெல்லாம் தோழமை கொண்டதாகவே ஏற்கும். பொதுமை உலகைப்படைக்கும் இலக்கு நோக்கில், தமிழகம் ஒரு பேரங்கமாகவே தன் விடுதலை இலக்கில் செயல்படும்.

அத்தகைய வழிமுயற்சிக்கு உகந்த வகையிலேயே மாரக்சு, ஏங்கல்சால் முன்மொழியப்பட்ட பொதுமையிய அறிக்கை, தமிழ்த் தேசியத்திற்குப் பொருந்தும் தன்மையில் விளங்கிக் கொள்ளப்படுவதும் முன்னெடுக்கப்படுவதுமாக அமைகிறது.

- வெல்லட்டும் பொதுமையியக் கோட்பாடுகள்!
- வெல்லட்டும் பொதுமையிய முயற்சிகள்!
- வீழட்டும் முதலாளிய வகுப்புகள்!
- வீழட்டும் இந்திய அதிகார வெறி அரசமைப்பு!
- உருவாகட்டும் தமிழ்த் தேசக் குடியரசு அமைப்பு !
- உருவாகட்டும் உலகப்பொதுமையியக் குமுகியம்!